# மருத்துவன்

மே - ஜூன் 1929.

JL
LCm2n,N 28NR.
N29.1
21891.9

MARUTHUVAN

# மருத்துவன்

PHYSICIAN

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

லர் ௧. 1929வருடம் மே, ஜூன்மீ இதழ் அ-கூ.

OFFICE OF ... 5 JUL 1929

உள்ளுறை


| | |
|---|---|
| உடற்பயிற்சி | 201 |
| மதுசாரம் | 206 |
| பூச்சிகள் | 208 |
| தீய ஆமைகள் | 212 |
| மருத்துவம் | 219 |
| அரிசிக்கும் கோதுமைக்குமுள்ள வேற்றுமை | 222 |
| கொலைமறுத்தல் | 228 |
| மருத்துவகுலத்தவர் தொகுதி | 230 |
| சன்மார்க்க சகோரதத்துவசங்கம் 2-வது ஆண்டுவிழா | 236 |
| பொதுச்செய்திகள் | 240 |
| மருத்துவனுக்கு நன்கொடை அளித்த அன்பர்கள் | 254 |
| மருத்துவனின் அன்பர்கள் | 255 |
| பாலர் பரிபாலனம் | |


மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி

சென்னை.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமை யாது வேண்டியவன். இவன் நோயறுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய் களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண் கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங் களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேகபலத் தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால், ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனுவான்.

## மருத்துவனின் சந்தா விவரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 3—8—0.

தனிக்காப்பி அணு 0—4—0.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும் முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடுத் தெளிவாக எழுத வேண்டும்.

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி-பி யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரி[illegible] வேண்டுமானல், இருக்கும் சஞ்சிகைகள் மட்டும் அனுப்பப்ப[illegible]



# மருத்துவன்

(PHYSICIAN)
A High Class Medical Tamil Monthly
Editor: Pandit S. S. Anandam,
தமிழ் வைத்தியப் பத்திரிகை
ஆசிரியர்: பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் ௧. } 1929௵ மே, ஜூன்௴ { இதழ் ௫-௬

## உடற்பயிற்சி

### மூச்சுப்பழக்கம்

(172-ம் பக்கத்தொடர்ச்சி.)

சென்றமாதப் பத்திரிகையின் தலையங்கத்தில் உடற்பயிற்சியைப் பற்றி சிறிது கூறினேம். பிறகு உடற்பயிற்சியோடு மூச்சுப்பயிற்சியும், மனப்பயிற்சியும் ஒவ்வொரு மக்களுக்கும் இன்றியமையாது வேண் டப்படுவதாகும் என்றும் கூறினேம். அவற்றுள் இப்போது மூச்சுப் பழக்கத்தைப்பற்றிச் சிறிது கூறுவோம். உடலுக்கும், மூச்சுக்கும், மனதிற்குமுள்ள தொடர்பு பிரிக்கக்கூடாததாக இருக்கிறது. மனித னின் உள்ள நெகிழ்ச்சிக்குத் தக்கபடி மூச்சும், நாடி நடையும், உடம் பில் நடைபெறுகின்றது. உயிரும் அதன் வயப்பட்டிருக்கின்றது. மனிதனின் உள்ளத்திற்கும் உயிர்ப்புக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்ப தால் உயிர்ப்பாகிய மூச்சை முதலில் கவனிக்க வேண்டியவர்களா யிருக்கின்றோம். மூச்சுடன் இருப்பவர்களே உயிருடன் இருப்பவர் கள்; மூச்சற்றவர்களே உயிரற்ற சவமாகின்றார்கள். மூச்சே உடம்பி லுள்ள பிராணவாயுவாயிருக்கிறது. இறைவனின் தூலவடிவமே இம்

மூச்சென்று கூறலாம். இதைப்பற்றி நந்தமிழ்ப் பெரும்புலவரும், சைவ சமய ஆசிரியருள் ஒருவராகிய அப்பர்சுவாமிகள் தமது தேவாரத்தில்,

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னிலும் இனியா னொருவன் உளன்
என்னுளே உயிர்ப் பாய்ப் புறம் போந்து புக்
கென்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே.

2(84)49 17 038

என்று இன்றி[illegible] உடலில் மூச்சின்வடிவாய் இயங்கும் நிலையைக் கூறுகின்றார். இம்மூச்சு உடலில் போக்குவரத்து உள்ளமட்டும் உடம்பு சிவமயமாகத் திகழ்கின்றது. மூச்சு பிரிந்தவுடனே சவமாகி இவ்வுடலின்மீது அன்புடையவர்களும், உடனே வெறுத்து விலக்கும் நிலைமை அடைகின்றது. ஆதலால் உயிர்ப்பாகிய வாசியின் பெருமையை யாரே அறிதற்கு வல்லார். வாசி என்னும் சொல்லையே ஒருவர் பன்முறை திருப்பிச் சொல்லுங்கால் சிவா என்று திரும்புகிறது. சிவா என்னும் சொல் இன்பவடிவினனாகிய இறைவனைக் குறிக்கும் மகா மந்திரம் என வேதங்கள் கூறுகின்றன.

சிவம் என்ற சொல்லின் முதல் எழுத்தாகிய சிகாரத்தில் சகாரத்தின்மீதுள்ள இகரமாகிய வளைவை எடுத்தால் சிகாரம் சகாரமாகின்றது. அவ்வளைவுக்குறி எடுபட்டவுடன் சிவம் சவமாவதைப் போல் உடலுக்குள் மூக்கின் வழியாக வளைந்து வெளிவந்து உட்செல்லும் கொம்பாகிய மூச்சு வெளிப்பட்டால் சிவமாயிருந்த உடம்பும் சவமாகின்றது. ஆதலால் இப்பிராணவாயுவாகிய மூச்சைப்பற்றி,

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே.

என்றும்,

நாசிக்க தோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்தும்
தேகத்திற் கென்றும் சிதைவில்லை காணே.

என்று நமது சித்தர்பெருமான் திருமூலர் தமது திருமந்திரத்தில் மொழிகின்றார். இம்மூச்சுப்பழக்கத்தை பிராணாயாமம் என்றும்,



அடயோகம், யோகவித்தை என்றும், இல்லறத்தில் மனைவி மக்களோடிருந்து குடும்பச்சேற்றில் உழல்பவர்கள் இதனைச் செய்தால் காது செவிடாகும், கண் குருடாகும், விதையில் வீக்கம் உண்டாகும், நெஞ்சு வெடித்துவிடும் எனப் பலர் கூறி மக்களைப் பயமுறுத்தி மூச்சுப் பழக்கத்தைச் செய்யாமல் தடுத்துவிட்டார்கள். இதனால் நோயின்றி உடல்வன்மையோடு நீண்டநாள் வாழாது இளம்வயதிலேயே பலயீனர்களாய் பல நோய்களால் வருந்தி, அற்ப ஆயுளில் மக்கள் அழிந்தொழிகின்றார்கள். இம்மூச்சுப்பழக்கத்தைப்பற்றி நாம் கண்கூடாய் கண்டவற்றை சிறிது எழுதவேண்டியது அவசியமாகின்றது.

## மூச்சுப்பயிற்சியில் முதிர்ந்த பெரியார்

எனக்குப் பிதாவும், எனது மருத்துவ ஆசிரியருமாகிய சிவராஜ யோகி வைத்திய சாமிநாதபிள்ளை அவர்களை எனக்கு அறிவு தோன்றினகாலமாக அறிவேன். அவர் தமது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தமது மக்களுக்கும், தம்மிடத்தில் வைத்தியத்திற்கு வருகிறவர்கட்கும், மூச்சுப் பழக்கத்தைப்பற்றி அவர் சித்தர் நூல்களில் படித்ததையும் தனது அனுபவத்தையும் பாடல்களாகக் கூறுவார். அது பலருக்கு பயன்படாமற் போயிற்று. பலர் அவர் வேலையற்றவர்; நாம் அதைக்கேட்டு ஆவதென்னவென்றே அலட்சியமாக எண்ணினார்கள். நானும் சிறுவயதில் அவருடைய மூச்சுப்பழக்கத்தின் அருமையை அறியாமல் அலட்சியப்படுத்தினதும் உண்டு. ஆனால் எனது பிதா ஒருநாளேனும் நானறிந்து நோயாய் படுத்தவரல்ல. எந்த நோயும் அவரை அணுகவில்லை. அவர் மூன்று மனைவிகளை மணமுடித்தார். நான் மூன்றாவது மனைவியின் புதல்வன். அவர் கன்னலை (கடிகாரத்தை)ப் பாராது மூக்கில் நடைபெறும் மூச்சை (சரத்தை)ப்பார்த்தே நாழிகை (மணியை) நிமிஷத்தோடு சொல்லுவார். அதுகாலை கடிகாரத்தை நாம் பார்த்தால் அவர் சொன்னமணி சரியாய் இருக்கும். அவர் இறக்கும்வரையில் காலை மாலை மூச்சுப்பழக்கத்தை முறையாகச்செய்தார். அதனால் அவர் உடம்பு வன்மையும், நெஞ்சுறமும், நடையும், அவர் செய்துவந்த அலுவல்களும் பார்ப்போர் வியக்கத்தக்கதாயிருந்தது. அவர் 88-ஆம் வயதில் இறக்கும்போது ஆகாரமின்றி சிலநாள்படுக்கையிலிருந்தார். அதனால் அவர் உடம்புமட்டும் இளைத்தது மரணகாலத்தில் சிலேட்டுமவாதனை சிறிதுமின்றி அறிவோடு ஆன்ம

பிறந்தது. இதனை அருகிலிருந்தவர்கள் எல்லோரும் அறிவார்கள். ஆனால் இவர் உலக விவகாரங்களில் ஒன்றிலும் கலவாமல்,

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு."

என்றபடி, தனது சொந்த அலுவலை கவனித்துவந்ததால் இவரைப்பற்றி, உலகத்தில் பலர் அறிவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. அவரிடத்தில் நாம் கண்ட மற்றும் பல விஷயங்களை மற்றொரு முறை அவர் வரலாற்றுச்சுருக்கத்தில் எழுதுகின்றோம். அவர் யோக முறைகளைப்பற்றி எழுதிய நூலையும் வெளியிடுகின்றோம்.

தற்காலம் மிகப் பலவான்களாக வேலைசெய்பவர்களும், சர்க்கஸில் வேலைசெய்பவர்களும், சாண்டோ முதலியவர்களும் அவர்கட்குத் தெரிந்தோ தெரியாமலோ, மூச்சை அடக்கியே மற்றவர்களால் செயற்கரிய செயல்களைச் செய்து மக்களை வியக்கச்செய்து மகிழ்விக்கின்றார்கள். புரொபஸர் இராமமூர்த்தி என்னும் பலவான் அவர்கள் பலவிடங்களில் மூச்சுப்பழக்கத்தால்தான் தாம் இத்தொழில்களை செய்கின்றோமெனவும், இதனை மக்கள் எல்லோரும்செய்து பலவான்களாக வேண்டுமெனவும் வற்புறுத்திக் கூறுகின்றார்.

மூச்சுப்பழக்கம் மிக இன்றியமையாததென்பது சுருதி, யுக்தி, அனுபவங்களால் வெளியாகின்றது. இவ்வித்தை தமிழ்மக்களிடத்தேதான் முதன்முதல் தோன்றினவென்பது நமது தமிழ் ஆகமங்களாலும், சித்தர் நூல்களாலும் வெளியாகின்றது. இவ்வித்தைகளை தற்காலம் அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களில் பலரும் முறையாகப்பழகி அதன் பயனை அனுபவிக்கின்றார்கள். நாமோ அதைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களா யிருக்கின்றோம், நம்மில் உயர்ந்தவர்களாகச் சொல்லிக்கொள்ளும் பிராமணர்களோ, சந்தியாவந்தனகாலத்தில் பிராணாயாமம் செய்வதாகச்சொல்லி சூரியனுக்குரிய காயத்திரியாகிய "ஓம் பூர்ப்புவஸ்சுவஹ தத் சவிதுர்வரேண்யம் பர்க்கோதேவஸ்யதீ மஹிதீயோ யோனஹ் பிரசோதயாத்" என்ற மந்திரத்தை அருத்தம் தெரியாது மூக்கின்மீது கையைவைத்து பன்முறை சொல்வதைப் பிராணாயாமம் என்று கூறுகின்றார்கள். இது பிராணாயாமமாகாது. இதனால் ஒரு பயனுமில்லை. மூச்சுப்பழக்கத்தை பயிலுமுன் வாரசரம் என்பதை முதலில் கவனித்தல் வேண்டும்.



## வாரசரம்

(திருமூலர் திருமந்திரம்.)

வெள்ளி வெண்திங்கள் விளங்கும் புதன்இடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறைஇடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே

என, நீண்டநாள் தவநிலையிலிருந்து கண்ட நமது திருமூலர் கூறுகின்றார். நாள்தோறும் விடியற்காலம் 4-30 மணிமுதல் சுமார் 6-30 மணிக்குள், வெள்ளி,திங்கள், புதன் இந்த கிழமைகளில் இடதுபக்கம் மூக்கில் மூச்சு நடைபெறவேண்டும். சனி,ஞாயிறு,செவ்வாய்க்கிழமைகளில் அந்நேரத்தில் வலது மூக்கில் மூச்சு நடைபெறுதல்வேண்டும். வளர்பிறை வியாழனில் விடியற்காலம் இடது மூக்கிலும், தேய்பிறை வியாழனில் வலது மூக்கிலும் அந்நேரத்தில் மூச்சு நடைபெறுதல் வேண்டும். இதனைக் கவனித்துப் பழகுவோர் நாள்தோறும் இரவு 10 மணிக்குள்படுத்துறங்கி விடியற்காலம் 4-30 மணிக்குமேல் 5 மணிக்கு முன் விழித்தெழுந்து படுக்கையிலிருந்தபடி அந்தந்த கிழமைகளில் மூச்சு அந்தந்தப்பக்கங்களில் நடைபெறுகின்றதைக்கவனித்து பிறகு மூச்சுப்பழக்கத்தையும் செய்துவரவேண்டும். எப்போதும் இரவில் 8-மணிக்கு முன் இரா உணவு சிறிது குறைவாக உண்டு, ஒன்பதரை அல்லது பத்துமணிக்குள் படுத்துத் தூங்குவோருக்குத்தான் இந்த வாரசரம் சரியாய் நடைபெறும். இரவில் நெடுநேரம் சென்று உணவை மிகுதியாய் விலாப்புடைக்க உண்டு நெடுநேரம் வேடிக்கை விநோதங்கள், ஆட்டம் பாட்டு, நிழற்படக்காட்சி (சினிமா) முதலியவைகளில் காலத்தைக்கடத்தி கண் விழிக்கிறவர்கட்கு இந்த நாள் மூச்சு (வாரசரம்) மேலே கண்ட முறைப்படி நடைபெறாது. ஊண், உறக்கம், செய்தொழில் முதலியவைகளில் ஒழுங்காகநடந்து, பொறாமை, கவலை, சினம், அச்சம் முதலியவைகட்கு ஆளாகாமலும், பட்டினி இராமலும், அதிகம் உண்ணாமலும், மிகுந்த ஆசையினால் அலைக்கழியாமலும் நடந்துகொள்ளுகிறவர்களுக்கு, நாள்மூச்சு செம்மையாய் நடைபெறும் என்பதைக் கவனித்தல் வேண்டும்.

## மூச்சுப்பழக்கத்தின் முதற்பயிற்சி

மேலே கூறியபடி படுக்கையிலிருந்து எழுந்தவுடன் வாரசரத்தைக் கவனித்துப் பிறகு மூச்சை வெளியே விடும்போது மெது

வாக நிறுத்தி விடவேண்டும். அப்படி விடும்போது வயிற்றை உள் ளிழுக்கவேண்டும். அதாவது வயிறு முதுகோடு ஒட்டும்படி வயிற்றை உள்ளடக்கவேண்டும். பிறகு மூச்சை உள்ளே இழுக்கும்போது மேலே சொன்னபடி நிதானமாக அவசரமில்லாமல் இழுக்கவேண்டும்.

(தொடரும்)

# மதுசாரம்

(176-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர் "ஒரு வாலிபன் எவ்வளவு கெட்டிக்காரனாயிருப்பினும் அவன் குடியனாயிருப்பானாயின் அவனுக்காக காலத்தை வீணாக்குவது பிரயோசனமில்லை" என்று கூறினார். மதுசாரம் நல்லறிவைக் கெடுக்கும்.

பிரசித்திபெற்ற ஐரோப்பிய ஸர்ஜன் டாக்டர் லாரென்ஸ் (Dr. Larens) என்பவர் நியூயார்க் (New York) நகரத்தில் ஓர் விருந்துக்குச் சென்றிருந்தார். அவர் உட்கார்ந்தவுடன் தமக்கு வைத்திருந்த ஒயின் பாத்திரத்தைக் (wine Glass) கவிழ்த்துவிட்டார். இதனை அவர் அருகிலிருந்த ஒருவர் பார்த்து, "டாக்டர் அவர்களே! தங்களுக்கு ஏன் ஒயின் வேண்டுவதில்லை" என்றார். "ஐயா! உங்களுக்கு வந்தனம். எனக்கு வேண்டுவதில்லை. நானொரு வைத்தியன். (சர்ஜன்) என்னிடம் அநேக ஆண்களும், பெண்களும், சிறுவர் சிறுமிகளும் தங்கள் நோய்தீர்ந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள என்னை நம்பி வருகிறார்கள். அவர்களுக்கு நான் நல்லறிவுள்ளவனாயும், உண்மையானவனாயு மிருத்தல்வேண்டும். அல்லது நம்பிவந்தவர்களுக்கு அறிவில்லாத பொய்யனா யிருத்தல்வேண்டும்" என்றார் டாக்டர்.

ஒவ்வொரு உத்தியோகஸ்தனுக்கும் ஏன் மதுபானங் கூடாது என்பதற்கு டாக்டர் அவர்கள் மேலேகூறியது சிறந்த காரணமாகும். மதுசாரம் அறிவை மந்தமாக்குகிறது. பகுத்தறிவை மறைக்கின்றது. ஒன்றைக் கிரகிக்கவொட்டாமல் மனத்தைத் தடுமாறச்செய்கிறது. பரிச வுணர்ச்சியை மந்தமாக்கி, அவ்வுணர்ச்சி உண்டோ இல்லையோ வென்னும்படிச்செய்கிறது இவ்வாறுசெய்யவல்ல மதுசாரத்தை "ஒருவன் தன் மூளையில் சேர்ப்பது, ஒரு யந்திரத்தில் சுழன்றுகொண்டிருக்குஞ் சக்கரத்துள் மண்ணை வாரிப்போட்டதுபோலாகிறது" என்று எடிஸன் (Edison) கூறுகின்றார்.



மதுசாரத்தா லுண்டாகுந் தீக்கேட்டைத் தெரிந்துகொள்வதற்குச் சிலநாட் பிடிக்குமாயினும், அது தேகத்தில் அடங்கியிருக்கிறது. கண்ணறைகள் அதனை யுடனே கழிக்கிறதில்லை. தேகம் அவ் விஷத்தை யொழித்துத் தன்னைச் செம்மையாக வைத்துக்கொள்ள மிக்க பிரயாசைப்படுகிறது; ஆனால் மதுசாரம் பரிகசிக்கின்றது, ஏமாற்றுகிறது. அது வேலைசெய்பவனுக்குப் பிரதிகூலமாகிறபோது அநுகூலமாகிறதாக அவனைநம்பச்செய்கிறது. அது அவன் செய்யும்வேலை அதிகக் கேடாயிருப்பினும் அவனை மிகவும் நல்லவேலை செய்கிறவனாக நினைக்கச்செய்கிறது.

இதோ 10 அங்குல நீளமுள்ள பெண்டுலத்தை (Pendulam) யுடைய கடிகாரம் (Clock) ஒன்றிருக்கின்றது. அது ஒவ்வொரு அரைவினாடிக்கும் டிக்டிக் என்றடிக்கிறது. அதுகாலத்தைச் சரியாகக் காட்டுகிறது. அப்பெண்டுலத்தின் ஸ்க்ரூவை (Screw) மயிர்க்கனை அளவுமாத்திரம் திருப்பிவைத்தால் அது இப்போது ஒருதரம் டிக் என்றடிப்பதற்கு ஒரு வினாடியில் 1000-த்தில் ஒருபங்குநேரம் நீடிக்கிறது. இப்படி ஒரு வினாடியில் 1000-த்தில் ஒருபங்குநேரம் நீடிப்பதைக் குறிப்பிடவாவது அல்லது கவனிக்கவாவது கூடுமானதல்ல. அதனை ஒரு சனிவாரம் காலையில் திருப்பிவைத்தாயென்று வைத்துக்கொள். மறுசனிவாரங்காலையில் நீ 9 மணிரெயிலேறிப்போக சென்ட்ரல் ஸ்டேஷனு (Central Station) க்குச் சென்றாய். அங்கே நீ எதிர்பார்த்த 9 மணி ரெயில்வண்டி 20 நிமிஷத்திற்கு முந்தியே போய்விட்டதாகத் தெரிந்துகொண்டாய். ஏன் அத்தனைநிமிஷம் தாமதித்துச்சென்றாயென்பது உனக்குத்தெரியுமா? அக்கடிகாரத்தை மயிர்க்கனை அளவு திருப்பிவைத்தால் அது ஒருவாரத்தில் 20 நிமிஷம் இழந்துவிட்டது.

அதுபோலவே மதுசாரம் ஒருவனை மந்தகதியுள்ளவனாகச் செய்கிறது. அதனைமுதலில் ஒருவனும்அறிகிறதில்லை; ஆனால் அதன்பயன் தேகத்தில் சேர்ந்திருக்கின்றன. அவன் உயர்குணத்தினின்றும் இழிகுணமடைந்தானானதால் ஆண்மை யில்லாதவனாகிறான். அவனிடத்தில் வேலை வாங்குபவர் அவன் சுறுசுறுப்பில்லாதவனாயும், நிதானம் இல்லாதவனாயும், முயற்சியில்லாதவனாயும், நம்பகமில்லாதவனாயுமிருக்கிறதை யறிந்துகொண்டு, அவனுடைய வேலையைப்பற்றி அவன் எசமானர் அவனுக்கு எச்சரிக்கை செய்கிறார். ஆனால் அவர் மதுசாரத்தைக் குறைகூறவில்லை. பிறகு அவன் வேறுவேலை தேடிக்கொள்ள

நேரிட்டது. மதுசாரம் அவன் தேகத்திலிருந்தும் அதனை யவ
உணரவில்லை யாதலால், அம்மதுசாரமே மெதுவாக இம்மாறுதலை
யுண்டாக்கிபது.

தேசாபிமானமுள்ள ஒவ்வொரு ஆணுக்கும், சிறுவனுக்கும், சி
மிக்கும் முதற்றரமான சாம்பிராச்சியத்தைத் ஸ்தாபிக்க அவாவுண்
ஒவ்வொருவரும் தம்மால் கூடியவரையில் உத்தமராகவிருந்தால்தா
அது முடியும். மதுபானம் ஒரு மனிதனுக்கு எவ்வாறோ அவ்வாறே
ஒருதேசத்திற்கும் இடையூறாகும். தேகக்கட்டும், சுறுசுறுப்பும், வ
மையும்பெற்று, தான் எடுத்துக்கொள்ளும் வேலையைச் செவ்வனே
செய்து முடிக்கக்கருதும் ஒவ்வொருவனும் கார்னகி (Carnagie
அவர்களின் சொற்களை மனத்தில் பதியவைக்கவேண்டும்.

"உனது முயற்சியில் நீ வெற்றிபெறுமலிருப்பதற்கு முக்கி
காரணம், மற்றெல்லாவற்றைக் காட்டிலும் மதுபானமே யாகும்".

நீ தேசத்தின் ஒருபகுதி யென்பதை மனதில் வை. ஒரு தேச
தைச்சார்ந்த ஒவ்வொருவனும் தனது கடமைகளைச் செவ்வனே
செய்து முடித்தாற்றான் அத்தேசம் மேன்மையடையும்.

மதுசாரம் கண்ணறைகளைக் கெடுப்பதினால் மதுவுண்ணும் மன
தன் தேகவலிமையிலும் மனோதிடத்திலும் நல்லொழுக்கத்திலு
கெட்டுக் கேடுறுகின்றான். (தொடரும்)

---

# பூச்சிகள்

(பப்ளிஸிடி பீரோ, மதராஸ்.)

மலேரியா, காலரா, சீதபேதி முதலிய அபாயகரமான வியாதி
களைத் தொத்திக்கொண்டுபோய் மனிதர்களுக்குள் பரவச்செய்யும்
முக்கியமான பூச்சிகளைக் குறித்து சிறிது தெரியவேண்டியது அ
சியம்.

எல்லாப் பூச்சிகளுக்கும் சாதாரணமாய் மூன்று ஜதை கால்க
ளும், இரண்டு ஜதை சிறகுகளும் உண்டு. இந்தக் கால்களும், சிறகு
களும் பூச்சியின் மார்பில் இருக்கின்றன. இந்த மார்பானது ஒரு பக
கத்தில் கழுத்தினால் தலையுடன சேர்க்கப்பட்டு, மற்றொரு பக்கத்தில்
வயிற்றுடன் சேர்ந்திருக்கிறது. கண்கள், வாயின் பாகங்கள், மீசை
முதலியன தலையில் இருக்கின்றன. அதன் வயிறு ஒன்பது வளைய
கள் ஒன்று சேர்ந்ததினாலானது.



இந்த தேசத்தில் மனிதர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய முக்கிய பூச்சிகளாவன:— (1) பேன்கள். (2) மூட்டுப்பூச்சிகள், (3) தெள்ளுப்பூர்சிகள். (4) ஈக்கள். (5) கொசுக்கள்.

## பேன்கள்

பேன்கள் மூன்று வகைப்படும். ஒன்று தலையில் காணப்படுவது இரண்டு உடையில் இருப்பது, மூன்று தேகத்தின் மற்ற பாகங்களி லுள்ள மயிரிலிருப்பது. ஒரு பெண் பேனானது, முதல்வகுப்பில் சம்பந்தப்பட்டது 50 முதல் 60 ஈர்களும், இரண்டாவது வகுப்பு 70 முதல் 80முட்டைகளும், கடைவகுப்பு 10முதல் 15 முட்டைகளும் இடும். இந்த பேன் முட்டைகள் முதலாவது வகுப்பிலும், கடைசி வகுப்பிலும் மயிருடன் உரமாய் ஒட்டிக்கொண்டிருக்கும். இரண்டாவது வகுப்பிலோ, அவை துணிகளின் தையல்களில் காணப்படும். மயிரில் இருப்பன 6-7 தினத்திற்குள் குஞ்சு பொரிக்கும். துணியில் இருப்பன 3-4 தினங்களில் பொரிக்கும். இந்த ஈர்கள் அதன் பெற்றோர்களைப் போலவே எல்லா விஷயங்களிலும் இருக்கும். இவை மனிதனுடைய இரத்தத்தை ஆகாரமாகக்கொண்டு, இரண்டு மூன்று வாரங்களுக்குள் பெருத்துப் பேனாகி, அவற்றுள் ஆண் பெண் கலந்து அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். ஜனங்கள் ஒன்றாய் உறங்கினாலும், உடைகளை ஒன்றோடொன்று சேர்த்து வைத்துக் கொண்டிருந்தாலும் இந்தப்பேன்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொத்திக்கொள்ளும். அல்லது ஒருவர் உடையிலிருந்து மற்றொருவர் உடைக்குத் தொத்தும். இவ்விதமாகத்தான் இது ஒருவரிடத்திலிருக்கும் வியாதியை மற்றவர்களுக்குத் தொத்தச்செய்யும். எப்படியெனில்: பேன் பிடித்த முதல் ஆசாமிக்கு ஏதாகிலும் வியாதி இருந்தால் பேனானது அவன் இரத்தத்தை உறிஞ்சி, வேறொருவனிடத்தில் வந்து தங்கும்போது அவனைக் கடித்து அந்த வியாதியைத் தொத்தவைக்கிறது. இந்தப் பேனினால் ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவனுக்குத் தொத்தக்கூடிய வியாதிகள், ரிலாப்ஸிங் ஜுரம், டைபஸ் ஜுரம், டிரன்சு ஜுரம் ஆகிய இவைகளே.

இந்தப் பேனைப் போக்கடிக்கும் சிறந்த வழி யாதெனில், பேன் பிடித்திருக்கும் பாகத்திற்கு சிறிது மண்ணெண்ணெய் தடவ வேண்டும். இது பேனைக் கொல்லுவதுடன் கூட, பேனின் முட்டைகள் மயிருடன் ஒட்டிக்கொள்ளுவதற்கு ஏற்றதான பிசினையும் கரைக்கச்

செய்யும். பிறகு மயிரை சுலபமாய் வாரமுடியும். துணிகள் விஷயத்தில் அவற்றை கொதிக்கும் நீரில் தோய்த்து எடுப்பதே திருப்திகரமான வழி. அக்குள், அடிவயிறு முதலிய இடங்களிலுள்ள மயிரில் தங்கியுள்ள இரண்டாவதுவகைப் பேனை ஒழிக்க அந்தமயிரை சிறைத்துவிடுவதே மேல்.

தங்கள் தேகத்தையும் உடைகளையும் சுத்தமாய்வைத்துக்கொள்வதினால் சிறுவர்களுக்கு பேன் வரவொட்டாமல் தடுக்கச்செய்வது பெற்றோர்கள் கடமையாகும்.

## மூட்டுப்பூச்சிகள்

இச்சிறு பூச்சியானது மக்களுக்கு 1000 வருஷ காலங்களாகத் தெரியும். இதற்கு ஆதிகாலத்தில் 'சுவற்றுப்பேன்' என்று பெயர். இது ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இப்போதுகாணப்படும். இது சிவப்பும் பழுப்பும் கலந்த வர்ணமுள்ளது. இதற்கு சிறிய அகன்ற தலையும், இரண்டு கண்களும், இரண்டு மீசைகளும் உண்டு. இக் கிருமிகள் சுவற்றிலுள்ள சந்துகளிலும், தரைகளிலும், மேஜை நாற்காலிமுதலிய சாமான்களிலும் தங்கியிருந்து இரவில் வெளிவந்து மனிதர்களுடைய இரத்தத்தை உறிஞ்சும். இவைகளுக்கு இரை தேவையாயிருக்கும்போது வீடுவீடாய்த் தேடிப்போகும் மனிதனுடைய இரத்தமே இவற்றிற்கு ஆகாரம். மூட்டுப்பூச்சியானது மனிதனுடைய சர்மத்தைப் பரிசோதித்துப் பார்த்து, ஒரு இடத்தைப் பொறுக்கி எடுத்து, அதில் அதன் கூரான பாகத்தினால் குத்தி, அந்த இரணத்தில் சிறிது உமிழ்நீரைக் கக்கி, அதனால் அந்தயிடத்திற்கு அதிக இரத்தம் வரச்செய்து அந்த இரத்தத்தைப் பின் உறிஞ்சிவிடுகிறது. பெண் மூட்டுப்பூச்சியானது வருடத்திற்கு மூன்று நான்குமுறை 50 முட்டைகளுக்குக் குறையாமல் இடும். இந்த முட்டைகள், முட்டை வடிவமாயும், ஒரு அங்குலத்தில் 25-ல் ஒரு பாகம் நீளமுள்ளதாயும், வெள்ளை நிறமுள்ளதாகவுமிருக்கும். இவை 7 முதல் 10 தினங்களுக்குள் குஞ்சுபொரிக்கும். இவை புழுப்போல இருக்கும். இதற்கு முட்டைப்புழு என்று பெயர். இந்த முட்டைப் புழுக்கள் வளர்ந்து எட்டுநாளைக் கொருதரம் ஐந்துமுறை அவற்றின் மேற்தோல்மாறும். கடைசியாக தாய்மூட்டுப்பூச்சிபோல் வடிவெடுக்கும். இப்படி ஏழுமுதல் பதினொரு வாரங்களுக்குள் முட்டையிலிருந்து கிருமியாக விருத்தியாகும். இவற்றிற்கு இரத்தம்தான் ஆகாரம். செவ்



வையாய் முதிர்ந்த மூட்டுப்பூச்சிக்கு ஒருவிதமான நாற்றம் உண்டு. இதற்குக் காக்கும் நாற்றம் என்று சொல்வது. இந்த நாற்றம் வீசுவதினால் அதன் இயற்கை வைரிகளாகிய கரப்பான், எறும்பு முதலியன இவற்றினிடம் அணுகா.

மூட்டுப்பூச்சியானது பேனைப்போலவே 'ரிலாப்ஸிங் ஜுரத்தை' ஒருமனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்கு தொத்தச்செய்யும். இது 'காலா ஆசாரை' தொத்தச் செய்வதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தப் பீடையையொழிக்க சுவர்களிலும், தளங்களிலும், சந்துபொந்துகள் இல்லாமல் செய்துகொள்ள வேண்டும். இதைக் கொல்ல மண்ணெண்ணெய் உபயோகப்படாது. அலிடிக்திராவகத்தையாவது காடியையாவது மரச்சாமான்களின் சந்துக்களில் ஊற்றினால் அது உடனே அங்கே பதுங்கியிருக்கும் மூட்டுப்பூச்சிகளைக் கொல்லும். அறைகள் விஷயத்தில் புகைபோடுதல்தான் எடுத்தது. அறையை நல்ல காற்று உட்புக வொட்டாமல் செவ்வையாய் மூடிவிட்டு, 1000 கன அடி இடத்திற்கு நான்கு அவுன்ஸ் கந்தகத்தைப்போட்டுக் கொளுத்தவேண்டியது. கந்தகம் எரியும்போது உள்ளே ஒருவரும் இருக்கக் கூடாது. ஐந்து மணிகாலம் அறையை மூடிவைத்து பிறகு திறக்க வேண்டியது. அப்போதுபார்த்தால் மூட்டுப்பூச்சிகள்செத்துக்கிடக்கும். சந்து பொந்துகளை அடைத்துவிட்டு அறைக்குச் சுண்ணம்பு அடிக்கவேண்டியது.

## தெள்ளுப்பூச்சிகள்

தெள்ளுப்பூச்சிகள் அநேகவிதம். சில நாய்களின்மேல் காணப்படும். சில எலிகள், சுண்டெலிகள், பூனைகள், இன்னும் மற்ற ஜீந்துக்களின்மேலும் ஒன்றுமட்டும் மனிதன்பேரிலும் இருக்கும். இவற்றுள், எலிகள், சுண்டெலிகள் இவற்றின்மேலுள்ள தெள்ளுப்பூச்சிகள் தாம் நமக்கு முக்கியமானவை. ஏனெனில் இவைதாம் ஒரு எலியிலிருந்து மற்றொரு எலிக்காவது, தவறினால் எலிகளிலிருந்து மனிதனுக்கும் மகம்மாரி வியாதியைத் தொத்தச்செய்யும். முன் இந்த எலியின்மேலுள்ள தெள்ளுப்பூச்சியானது எகிப்து தேசத்து நைல் பள்ளத்தாக்கிலிருந்து வந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இப்போது இது பூலோகமுழுதும் காணப்படுகிறது. பெண் பூச்சியானது ஒவ்வொரு தடவையிலும் ஒன்றுமுதல் ஐந்து முட்டைகள் இடும்,

இவை உருண்டையாயும், மெழுகுபோல் வெள்ளை அல்லது முத்து வர்ணமாயும், அங்குலத்தில் 50 ல் ஒருபங்கு நீளமுள்ளதாயுமிருக்கும். இரண்டு நாட்களுக்கெல்லாம் குஞ்சு பொரித்து சிறுகுஞ்சுகள் முட்டைப் புழுவினின்றும் வெளிவரும். இந்தப் புழுக்கள் மிக சுறுசுறுப்புள்ளவை. சூரிய வெளிச்சம் படவொட்டாமல் இவை உடனே மறைந்துகொள்ளும். ஒரு வாரமானவுடன், இவை சோம்பலடைந்து இரை தின்னாமல், மிருதுவான பட்டு நாரைப்போல் கூடுகட்ட ஆரம்பிக்கும். இந்தக் கூட்டில் குப்பைசேர்ந்தால் அதைப் பார்ப்பதே அரிதாகும். ஏழுமுதல் பதினைந்து நாட்களுக்கெல்லாம் குட்டித் தெள்ளுப்பூச்சியானது அக்கூட்டிலிருந்து வெளிக்கிளம்பும். இவ்வாறு இது வளர மொத்தம் மூன்றுவாரம் பிடிக்கும். ஈரத்தரை இப்புழுக்களுக்குக் கெடுதல். இந்தக் குட்டித் தெள்ளுப்பூச்சிக்கு இரத்தம்தான் ஆகாரம். சரியான மனிதன் அகப்படாவிடில் பட்டினிகிடந்து சாகும். ஒருவாரம் அல்லது இரண்டுவாரம் வரையில் இரையில்லாமல் ஜீவித்திருக்கும். மகம்மாரியை தொத்தவைப்பது எலியின்மேலிருக்கும் தெள்ளுப்பூச்சிதான்.

இந்தப் பூச்சிகளினால் வீட்டில் தொத்துவியாதி பரவவொட்டாமல் தடுக்கும்விதம். அழுக்கும், எலியும் சேரவொட்டாமல் வீட்டை சுத்தமாய் வைத்திருப்பதே. அப்படிச் செய்தால் பிளேக்வராதென்று நிர்ப்பயமாய் இருக்கலாம். இந்தப் பூச்சியை வீட்டினின்றும் ஒழிக்க 6 மணிநேரமாவது சூரியவெளிச்சம் படும்படி திறந்து வைக்கவேண்டும். இதற்காக தட்டோடுவீடுகளாயிருந்தால், ஓடுகளை எடுத்துவிட்டு வீட்டிற்குள் வெளிச்சம் நுழையவிடவேண்டியது. மெத்தைவீடாயிருந்து இம்மாதிரி செய்யமுடியாமற்போனால், மண்ணெண்ணெய் எமெல்ஷனை உபயோகப்படுத்தி சுவர் முதலிய யாவற்றிற்கும் ஊற்றி சுத்தம்செய்து, இரண்டுநாட்கள் பொறுத்து செவ்வையாய் சுண்ணாம்பு அடிக்கவேண்டியது. வீட்டில் இதன் புழுக்கள் இருந்தால் பெருக்கி குப்பையை கொளுத்திவிட்டால் இவை போய்விடும். எலிகளை வரவொட்டாமல் தடுப்பதினால் மறுபடியும் இந்த வீட்டில் இந்தவியாதி தொத்தாமல் இருக்கும். இந்த எலிகள் தீனிக்காக வருகின்றன. அழுக்கு, குப்பை முதலியவையை ஒழித்து அங்குமிங்கும் சோற்றுப்பருக்கைகள் இறையாமல் இருந்தால் எலி வரத் தூண்டுதல் ஒன்றுமிராது. தரை, சுவற்றின் அடிப்பாகம் இவற்றை எலி வரவொட்டாமல் தடுப்பதற்கு சிமிட்டி அல்லது கற்களால் கட்டவேண்டும்.



## ஈக்கள்

ஈக்கள் பலவிதம். சில இரத்தத்தை உறிஞ்சுவன; ஆனதுபற்றி இவைகளை கடிக்கும் ஈக்கள் என்றுசொல்லப்படும். மற்றும் சில இரத்தத்தை உறிஞ்சுவனவல்ல. அதனால் அவைக்கு கடியா ஈக்கள் என்று சொல்லப்படும். இரத்தம் உறிஞ்சும் ஈக்களுள் தெரிந்தவரையில் 2000-வகைகள் இருக்கின்றன. அவைகளில் சிலவே நமக்கு அதிக முக்கியமானவை. உதாரணமாக: ஒருவித ஈ கடிப்பதினால் தென் ஆப்பிரிக்காவில் 'தூக்க வியாதி' (Sleeping Sickness) காணுகிறது. அதற்கு 'ட்ஸெட்ஸி ஈ' என்று பெயர். இங்கே சென்னையில் 'மணல் ஈ' (Sandy-fly) என்னும் ஒருவகை ஈ இருக்கிறது. இது கடித்தால் மூன்றுநாள் ஜுரம் காணுகிறது. இதற்கு 'மணல் ஈ ஜுரம்' (Sand fly fever) என்று பெயர். கடியா ஈக்களில் அதிக சாதாரணமானது வீட்டு ஈ. இந்தியா தேசத்திலுள்ள மணல் ஈயைப்பற்றியும், வீட்டு ஈயைப்பற்றியும் கொஞ்சமாவது தெரிந்திருப்பது நலம்.

## மணல் ஈ அல்லது ப்ளபடோமஸ் ஈ

இது வெகு நுட்பமானது. சாதாரண கொசு வலைக்குள் புகும்படியான அவ்வளவு நுட்பமானது. அதன் செய்கைகள் யாவும் இரவில்தான் நடக்கிறது. ஆனால் வெளிச்சத்திலும் அது வெளிக்கிளம்புகிறது. அது பகலில் வீட்டில் குளிர்ந்த நிழலான இடங்களில் இருக்கும். அதாவது செங்கல்களின் கீழும், ஜன்னல் கதவுகள், புஸ்தகங்கள், படங்கள், வெகுவாய் கக்கூசுகள் இவ்விடங்களில் தங்கியிருக்கும்.

பெண் ஈயானது மனிதன் ஒருவன் அகப்பட்டால் அவன் இரத்தத்தை உறிஞ்சும். இல்லாவிடில் கால்நடைகள், நாய்கள், பல்லிகள் முதலியவற்றின் இரத்தத்தை உறிஞ்சி திருப்தியடைகிறது. ஓசைப்படாமலே இவை பறக்கும். 26 மணி முதல் 40 மணிக்குள் அதற்கு ஆகாரம் தேவை.

அதன் முட்டைகள் நீண்டு முட்டை வடிவமாய் இருக்கும். அவற்றின்மேல் கருத்த தீர்க்க ரேகைப்புள்ளிகள் இருக்கும். இவை வெகு நுட்பமானவை 1/150 முதல் 1/50 அங்குல நீளம்தான் இருக்கும். இவை, சுவர்கள், கற்கள் இவற்றின் பள்ளங்களில் தனியாய் இடப்படும். வெய்யில்நாளில் 4 முதல் 6 நாட்களுக்குள் குஞ்சு பொரி

க்கும். குளிர்காலத்தில் 14 நாள் பிடிக்கும். முட்டைப்புழுக்கள் மிகவும் சிறியனவாய் அதாவது 1/12 முதல் 1/6 அங்குலநீளம் வரையில்தான் இருப்பதால் இவைகளைக் கண்டுபிடிப்பது கடினம். இதற்கு முன்னுள்ள நிலைமையில் இதைக் காண்பது இன்னும் கஷ்டம். ஏனெனில் அவை அதிக சிறிதாகவும், சந்தடிசெய்யாமலிருப்பதுடன் கல்லில் பதுங்கிக்கொண்டிருக்கும்போது அதின் நிறமாகவே இருக்கும்.

முன்னே சொல்லியபடி இந்த ஈதான் 'மணல் ஈ ஜுரம்' என்னும் ஒருவகை ஜுரத்திற்குக் காரணம்.

இந்த ஈயுடன் போராடுவது வெகு கஷ்டம். இவற்றை ஒழிக்கும் வழி யாதெனில், இவை எங்கெங்கு இருக்குமோ, அல்லது எங்கெங்கே முட்டையிட்டிருக்குமோ அங்கேயெல்லாம் நூற்றுக்கு ஒன்று வலிவுள்ள 'பார்மலின் ஸொலியூஷன்' என்னும் திராவகத்தை தெளிக்கவேண்டியது.

வீட்டு ஈ

இச்சிறுபாதகர்களைப்பற்றி யாவர்க்கும் நன்றாய்த் தெரியும். வெகுகாலமாக மனிதர்களுடன் இவர்களுக்கு சிநேகம்.

பெண் ஈயானது ஒருநாளைக்கு 120 முட்டைகள் இடும். அதன் ஜீவியகாலமாகிய இரண்டு மூன்று வாரங்களுக்குள் நான்கு தடவைகளில் முட்டை இடும். ஒரு ஈயானது இவ்விதம் 120 முட்டை இடுவதாயிருந்தால் ஒரு வருஷத்திற்குள் 5 இலட்சக்கோடி ஈக்கள் விருத்தியாவது வெகு சுலபம். ஆனால் இதற்கு வைரிகளாகிய கோழிகள், தூக்கணங்குருவிகள், தேள்கள், பூரான்கள் இவைகட்கு ஈ ஒரு ருசிகரமான ஆகாரமாகும். இதன் முட்டைகள் வெளுப்பாயும் முட்டை வடிவாயும் நீண்டும் நுனியில் சாக்குமுனைபோல் இருக்கும். முட்டைப் புழுவுக்கு தகுந்த ஆகாரம் தேவையாயிருப்பதால் அங்கங்கே கொஞ்சம் கொஞ்சமாக அது முட்டை இடும். இந்த முட்டைப் புழுக்கள் சாகபக்ஷிணிகள். ஆனதுபற்றி அழுகிய கந்தமூல பதார்த்தங்கள் அதாவது எல்லாவித எருக்கள், குதிரை, மாடு, வெள்ளாடு, செம்மறியாடு, மனிதன், கோழி சாக்கடை, அழுகின காய் கறிகள், பழங்கள், உருளைக்கிழங்குத்தோல், மாம்பழம், வாழைப்பழம் முதலியவைகளில் இவை முட்டையிடும். வெய்யிற்காலத்தில் ஒரேநாளில் முட்டை குஞ்சு பொரிக்கும். குளிர்காலத்தில் இரண்டு நாட்களில் பொரிக்கும். இம்முட்டைப் புழுக்கள் இரண்டு நாட்கள் வரையிலும் பெருந்தீனி



தின்று, தேகத்தில் சில மாறுதல்கள் அடைந்தபிறகு சோம்பலேறி ப்யூபா என்னும் நிலைமையை அடைகிறது. அப்பொழுது மஞ்சள் அல்லது பழுப்புநிறமாக மாறுகிறது. ஒரு சாணிக்குவியல் அல்லது குப்பையைக் கிளறும்போது காணப்படும் புழுக்கள் ஈயின் முட்டைப் புழுக்களே. அல்லது அவற்றின் ப்யூபா சம்பந்தமானவை. ப்யூபாவிலிருந்து ஈ வெளிவருகிறது. அது முதலில் மண்ணிலும் குப்பையிலும் அழுந்திக்கிடந்து, மெதுவாய் கிளம்பி பறக்க ஆரம்பிக்கிறது. குப்பையிலிருக்கும் தீனியைத்தின்னுவதினால்மட்டும் ஈகெடுதல்என்று சொல்லப்படாது. ஆனால் காலராவினால் வருந்துவோரின் மலத்தையும் உண்டு, கடைகளில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் ஆகாரங்களின் மேலும், பட்சணங்களின்மேலும் படிவதால் இவை மிகவும் அபாயகரமானவை. இதனால் ஒருவனிடத்திலிருக்கும் வியாதி மற்றவனுக்கு தொத்திக்கொண்டு ஜனங்கள் வருந்துகிறார்கள். அதே ஆகார பதார்த்தத்தின்மீது உட்கார்ந்திருக்கும் ஈயைக் கவனித்துப்பார். அதன் தலை, வாய், கால்கள், சிறகுகள் இவற்றை அது எப்படி சுத்தம் செய்துகொள்ளுகிறது பார். அது எடுத்துக்கொள்ளவேண்டிய ஆகாரத்தின் மேல் ஒரு சிறு துளி ஜலபதார்த்தம் விடுகிறதைப் பார். இந்த ஜலபதார்த்தமானது அந்த பாகத்தைக் கரைக்கிறது. உடனே ஈயானது அந்த பாகத்தை உறிஞ்சுகிறது பார். இந்த சிறுதுளிகள் அதன் இரப்பையின் முன்பாகத்திலிருந்துவருகிறது. அதனால் அதில் அது முன் உண்ட உணவிலுள்ள அசுத்தங்களெல்லாம் கலந்திருக்கின்றன. இந்த ஆகாரந்தான் ஈயால் அசுத்தம் செய்யப்பட்ட ஆகாரமாகும். ஈயின் பாதம் தானாகவே தொத்து வியாதிக் கிருமிகளைக் கொண்டு போகக்கூடியன. வீட்டு ஈயினால் தொத்தக்கூடிய வியாதிகள்:—டைபாட் ஜுரம், காலரா, சீதபேதி, மலப்போக்கு, காசம், இன்னும் அநேக புண்கள், கண் வியாதிகள் ஆகிய இவைகளே.

ஈக்கள் வரவொட்டாமல் தடுக்கும் மார்க்கம் பரிசுத்தமே. அதாவது தேகசுத்தி, வீட்டுசுத்தி, கிராமசுத்தி முழுதும் பரிசுத்தமாயிருந்தால், ஈக்கள் விருத்தியாவதற்கிடமில்லை. இம்மாதிரி சுத்தத்தை அனுசரிப்பது அசாத்தியமாதலால், ஈக்களை வரவொட்டாமல் தடுக்கும் உபாயங்களைத்தேடவேண்டும். அதில் பின்வருவன முக்கியமானவை.

(1) ஈ வளருங்காலத்தில் ஜன்னல்களுக்கும் கதவுகளுக்கும் திரை போடவேண்டியது. ஜன்னல்களுக்கு நீலக்கண்ணாடிகள்போடுவது தகுந்த தடையாகும். ஏனெனில் ஈக்கு நீல வெளிச்சம் பிடிக்கிறதில்லை.

(2) ஈ பேப்பர்களை தகுந்த இடங்களில் தொங்கவிட்டு வைத்தல். இந்த பேப்பர்களில் தித்திக்கும் ஈ பாஷாணத்தைத் தடவி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கென்றே தயாரிக்கப்பட்டது. அதன்மேல் ஈக்கள் வந்து தங்கி, விஷத்தைத் தின்று சாகின்றன.

(3) வீட்டிலிருந்து 24 மணி நேரங்களுக்குள் குப்பையை அப்புறப்படுத்தல்.

(4) கக்கூசுகளிலிருந்து உடனே மலத்தை அப்புறப்படுத்தி அதை விஷக்கொல்லி மருந்தால் சுத்தம் செய்யவேண்டியது.

(5) முட்டை யிட்டிருக்கும் இடங்களை மூன்றுநாளைக் கொருதரமாவது கொளுத்திப்போடவேண்டும். அதனால் முட்டைப்புழுக்கள் நாசமடையும்.

(6) விற்பனைக்காவது, வீட்டில் உபயோகத்திற்காவது வைக்கப்பட்டிருக்கும் ஆகாரப்பதார்த்தங்களை ஒரு மசிலின் துணியைப் போட்டாவது, அல்லது கிளாஸ் புட்டிகளில் போட்டாவது மூடி வைக்க வேண்டியது.

(தொடரும்)

# தீய ஆமைகள்

## பொறாமை

(பு. செல்வராஜன் எழுதுகிறார்.)

பொறாமை யென்பதை என்னவென்று அறியாதார் ஒருவருமிருக்கமாட்டார்கள். பொறாமை என்றால் என்ன? அது பிறர் நன்கு வாழ்வதைப் பார்த்து மனம் பொறாக்காமையே. இப்பொறாமை பாமரருள்ளத்தை திடீரெனப் பற்றும் நஞ்சின் சக்திவாய்ந்தது என்பதில் ஐயமில்லை. அக்குணம் பீடிக்கப்பட்டார் எவரும் முன்னேற்ற மடைவது இயலாத காரியம். ஏன்? அவர்கள் எப்பொழுதும் பிறர் முன்னேறுவதைக் கருதி வயிறெரிந்து, பிறர் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கான வழிகளைச் சிந்திப்பதிலேயே காலங்கடத்தி அழிவார்களேயொழிய, தமது முற்போக்கை தாம் சிறிதளவும் கருதாதவர்களாய் பிற்போக்கிலேயே சதா உழன்று கிடந்தவார்கள். பொறாமை என்னும் பெரும் பைசாசத்தின்வாய்ப்பட்ட எவரும் எளிதில் முன்னேறலாமென நினைத்தால் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதையே யொக்கு மென்பதி லையமேதேனு முண்டோ?



பொறாமை சமூகத்தை பாழாக்கிக்கொண்டே செல்லுகின்றது. அவைகளைச் சீர்திருத்தி நன்னிலைக்கு உயர்த்தவேண்டுமென்று கூறும் சமூக சீர்திருத்தக்காரர்களினிடையும், தேசம் அடிமைத்தனத்தி லாழ்ந்துகிடப்பதை யகற்றி, சுயேச்சைபெற்று சுதந்தரவீரர்களாய் வாழ வேண்டுமென்று கூறும் தேசபக்தர்களினிடையும் இப்பொறாமைபுகுந்துவிட்டால், அதனால் சமூகத்துக்கேற்படும் தீமையை எடுத்துக்கூற வியலுமோ? அத்தகைய பொறாமையால் சமூகமும், தேசமும், நிலைகெட்டுத் தடுமாறிப் போவதன்றி, சீர்திருந்துவ தெக்காலம், முன்னேறுவ தெங்ஙனம்? எனவே, நம்மினின்றும் முதலில் பொறாமையே ஒழிக்கப் பாடுபடவேண்டும். அதை ஒழிப்பதே சிறந்த தொண்டாகும். அல்லாவிடில் அது அக்கினி விறகை எரித்துவிடுவதே போல், நன்மை யனைத்தினையும் போக்கிவிடும். "அழுக்காறுடையார்க்கது சாலும் ஒன்னார் வழுக்கியும் கேடீன்பது" குறள்.

## பயனில் சொல்லாமை

நம்நாட்டில் வீண்பேச்சுக்களும், திண்ணைவேதாந்தங்களுமே தற்பொழுது மலிந்துகிடக்கின்றன. எப்போது பார்த்தாலும் எங்கள் மூதாதையர், மேலைக்கடல் முழுதும் கப்பல் கட்டினர். பட்டினிலாடையும், பஞ்சிலுடையும் பண்ணி மலைகளென வீதி குவித்துக் கட்டித் திரவியங்கள்கொண்டுவந்தனர். காவியமும், ஓவியமும் கலந்து செய்தனர். உலகத்தொழிலனைத்தும் வுவந்து செய்தனர் என்றும், வேதம் நிறைந்தது எங்கள் நாடு, கலைஞானம், படைத்தொழில், வாணிபமும் மிகநன்று வளர்த்ததெங்கள் நாடு, கல்வி சிறந்த நாடு, நல்ல சாத்திரங்களின் மணம் வீசும் பழைய நாடு, பாரதவீரர் மலிந்த நாடு என்றும், வெறும் பேச்சுக்களான கழிந்தவைகளைப்பற்றிப் பேசிப் பேசி வீணில் பொன்னேபோன்ற காலத்தை அதனருமைதெரியாது பயனற்ற வெறும் வார்த்தைகளில் கழிக்கின்றனர். இத்தகைய பயனற்றவைகளைச் சொல்லித் திரிவதோடு, நம் நாட்டிற்கும் மனித சமூகத்துக்கும், அவசியப்படும்படியானதும், தக்கதுமான செயல்களாற்ற எதிர்காலத்தில் என்னென்ன செயல்களாற்ற வேண்டிவரும், அதற்கெவ்வெவ்வாறு நம்மைச் சீர்ப்படுத்திக்கொண்டு அதற்கெனத் தயாராக்கிக் கொள்ளவேண்டுமென ஆலோசித்து உயர்வடைதல் எத்

தகைய மேன்மையை யளிக்கத்தக்கதா யிருக்கிறதென்பதை ஏன் உணரலாகாது. பொய்யில் புலவர் திருவள்ளுவனாரும்;

"சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்."

என, பயனற்றவைகளைக் கூறுவதைவிட கூறாமலிருப்பதே மேல் எனக் கூறியிருப்பது பொன்னேபோல் போற்றத்தக்கது.

இப்பயனிலாச் சொற்கள் தற்போது பெரும்பாலும் நாட்டைத் தலைகீழாகப் புரட்டி, அடியுடன் சுயேச்சை வாங்கிக்கொடுத்து, மக்களின் வறுமைப்பிணியை ஓட்டிவிடுவதாக வீரம்பேசி, தங்களின் வறுமையைப் போக்கிக்கொள்ள வழிபார்க்கும் போலி வீர தேசிய மதத் தலைவர்களினிடையே அவர்களின் பிறப்புச் சொத்துரிமையாக இருந்துவருகின்றது. எங்கு போந்தபோதினும், இப்போலிவீரத்தலைவர்கள் பயனிலாச் சொற்களையே ஆங்காங்கே வீணிற் கொட்டி மக்களின் அருமையான காலத்தை வீணாக்குவதோடு, நாட்டையும் நட்டாற்றில் விழச்செய்கின்றனர்.

"நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று."

என்றிருக்கும் திருவள்ளுவனாரின் திருவாக்கை உணர்ந்து சான்றோர்களெனக் கூறிக்கொள்ளும் போலிகளான இவர்களும் மற்றோர்களும் பயனற்ற சொற்களாடுவதை அறவே விட்டொழித்தால் நாடு சீர்திருந்தும் என்பதில் ஐயமில்லை.

இன்னா செய்யாமை

பிறருக்குக் கெடுதிசெய்யாதிருத்தலே இன்னாசெய்யாமையெனப்படும். பிறருக்குக் கெடுதிசெய்ய எண்ணுவது மிருக உள்ளம் படைத்தவனின் செயலாகவிருக்கும் என்பதில் ஐயமொன்றும் இல்லை. ஆயின் இக்காலத்தில், பிறநல்ல வியக்கங்களையும், பெரியார்களையும், அழித்துவிடவும் கெடுதிசெய்யவும், போட்டிப் பத்திரிகைகளும், போட்டிச் சங்கங்களும், போலிப்பண்டிதர்களாலும், தலைவர்களாலும் ஏற்படுத்தப்படாமலில்லை. அவர்கள் கற்றும் கல்லாதவர்களே யாவர். பிற நல்லவைகளுக்கும், நல்லவர்களுக்கும், அவர்கள் கூறுவதிலும், அவைகளிலுள்ளதிலும் உள்ள நன்மைக் குகந்தவைகளை எடுத்தோம்பியது அவைகளுக்கும், அவர்களுக்கும், தங்கள் சுயநலத்தைநாடி கெடுதி



செய்வதென்பதை எந்த கற்றறிந்தவனின் செயலுக்கு ஒப்பிடுவது? மிருகங்களுங்கூட தன்போன்ற மிருகங்களுக்குக் கெடுதிசெய்ய ஒருப்படுவதில்லையெனின், இவ்வாறுசெய்யும் மக்களின்நிலையை யென்னென்பது?

இரக்கமற்ற நெஞ்சினரின் உள்ளத்திலே பிறருக்குக் கெடுதி செய்ய எண்ணமுதிக்கலாம். அவர்கள் தங்கள் சுயநலத்தை முன்னிட்டே பிறருக்குத் துன்பம் இழைக்கின்றனர். பிறரின் முன்னேற்றத்தில் பொறாமைகொண்டு, அதைத்தடுத்துவிடப் பெரும்பாலும் முயற்சிக்கின்றனர். இவர்களுள்ளங்களில் பொறாமையும், இரக்கமிலாமையும் பொதுநலங்கருதாமையும், சுலபமாக ஆட்சிகொண்டு நிற்கின்றனவாதலால் இவர்கள் நல்லறிவு பெறுதல் இயலாததாகிவிடுகின்றது.

(தொடரும்)

---

# மருத்துவம்

லண்டன் மாநகரத்தில், அரசாங்கக் கலை மன்றத்தில், சிறந்த பயிற்சியை உடைய ஒரு பெரும் கூட்டத்தின் முன்னிலையில், கீழ்நாட்டுக் கலைக்கியான ஆராய்ச்சி கழகத்தலைவர் சர். இ. டெனிசன் ராஸ் என்பவர் தலைமையின் கீழ், காபிதன் பி. ஜான்ஸ்டன் செயின்ட் என்பவர் இந்திய மருத்துவத் தொழிற் சிறப்பைப்பற்றி ஓர் சொற்பெருக்காற்றினார். இவர்தம் அரிய சொற் பெருக்கை நாம் படிக்கும் தோறும் நம் பண்டைய மருத்துவச் சிறப்பையும் அதன் வீழ்ச்சியையும் ஒப்பிட்டு நோக்கிக் கண்ணீர் சிந்துகின்றோம்.

உலகத்திலேயே பல் துலக்கும் கருவிகளையும், மற்றும் பல ரணசிகிச்சைக்கருவிகளையும் முதன்முதலாகக் கண்டு பிடித்தவர்கள் இந்தியர்கள் தாமென்றும், இவ்விந்தியாவிலிருந்தே அரேபியா, எகிப்து [illegible] முதலிய நாடுகட்கு நமது மருத்துவத்தொழில் பரவிற்று என்றும், இப்பொழுதுள்ள மேனாட்டு மருத்துவமுறையும் நம் முறையினையே அடிப்படையாகக் கொண்டுள்ளதென்றும் இவர் கூறுகின்றார். எகிப்து, அரேபியா, கிரீஸ்முதலிய நாடுகளுடன் வணிகம் புரிந்துவந்தது நம் தென்னாடுதான் என்றும், இற்றைக்கும் ஆங்கு நம் தமிழ் மொழிகள் பல வழக்கிலிருந்து வருகின்றனவென்றும், இதுபற்றி

அந்நாளிற் சிறப்புற்றிருந்தது நம் தமிழ் மருத்துவமே என்றும் நாம் நன்கறிவோம். அக்காலத்தில் நம் நாட்டிலிருந்து இறந்தாரை எழுப்ப வல்ல (அத்துணைத் தொழிலிற் சிறந்த) ஒரு மருத்துவரையும் கிரேக் அரசன் அலக்சாந்தர் இந்தியாவிலிருந்து அழைத்துச் சென்றான் என்றும் நாம் சரித்திரமூலமாக அறிகின்றோம். இத்துணைச் சிறப்புமிருந்த நம் தமிழ் மருத்துவம் சீர்குலைந்தமை எதுபற்றி என்று கவல்கின்றோம். நாம் இம்மருத்துவம் குலைவுற்றதும் பார்ப்பனர்களாலேயே என்று கூறுவோமாயின், பார்ப்பனர்கள்மீது நமக்குத் துவேஷம் உள்ளதென்றும், அதனாற்றான் நாம் இவ்வாறு கூறுகின்றோம் என்றும் பிறர் கூறுதல் கூடும். ஆனால் உலகத்திலேயே இந்தியாதான் மருத்துவத்தின் தாயகம் என்று உலகத்திலேயே தலைசிறந்த பண்டிதர்கள் முன்பு எடுத்துரைத்த காபிதன் பி. ஜான்ஸ்டன் செயின்ட், நம்மருத்துவம் சீர் குலைந்ததற்குக் காரணம் கூறுவதுதான் என்னை என்று நோக்குவோம்:- "பார்ப்பனர்களின் ஆகம தந்திரங்கள் இந்திய இரண சிகிச்சை முறையைப் பாதித்தது என்பதைப்பற்றி நான் கூறியிருக்கின்றேன். மருத்துவசிகிச்சையும் குருக்கள் கையிற்சென்றது. அவர்கள் மருந்துகட்குப் பதிலாக மந்திரங்களும், கவசங்களும் தயாரித்து நோயைக் குணப்படுத்துவோம் என்றுகூறி மருந்துகளின் பெருமையைக்குலைத்துவிட்டனர். மேலும் பார்ப்பனர்கள் மருத்துவர்களை ஒரு தாழ்ந்த வகுப்பாராக நான்குவருணத்தின் பாகுபாட்டினின்றும் ஒரு கிளைச் சமூகமாய்ப் பிரித்துவிட்டனர். இந்த இழிவான நிலைமையில் இரண சிகிச்சையையும் மருத்துவத் தொழிலையும், மந்திர தந்திர சாலங்களாகச் செய்துவிட்டு, மருத்துவர்களையும் உயர்ந்த சமூகத்தினின்றும் வேறுபடுத்திவிட்டு பின்னர் மருத்துவத்தொழில் பிற்போக்கடையவே, பண்டைய நூல்களில் காணப்படும் சிறப்பைப் பற்றியே நடைமுறையில் அநுசரிக்காமல், வீண்பேச்சாய்த் தற்புகழ்ச்சியில் இறங்கிவிட்டனர்" எனவே, பார்ப்பனர்களால் நம் மருத்துவம், மந்திரத்தில் தாழ்ந்துவிட்டது. மந்திரங்களாற் பயனடையாமற்போகவே, நாம் கற்றுங்கொடுத்த மேனாட்டாரிடமே வைத்திய சிகிச்சைக்கு நாம் இப்பொழுது செல்லுகின்றோம். நம் மக்களிடை உயர்வான தொழில்கள் காணப்பெற்றால், அந்தக்காலத்தில் பார்ப்பனர்கள் அத்தகைய தொழில்களை சாமிகளின் பேரால், மந்திரங்களின் பேரால், முக்கோணம் முதல் சாம்பவிச் சக்கரம் வரையுள்ள கவசங்களின் பேரால், இவைகளை அழித்தேவிட்டனர். நம் அரிய தொழில்முறை



களைச் சிலவேளைகளில் தங்கள்சமஸ்கிருதத்தில் பலவிகற்பங்களுடன் மொழிபெயர்த்து, இவைகட்குத் தாமே கர்த்தாக்கள் என்றும் நம் மக்களை ஏமாற்றினர். இதற்கு இப்பொழுது வழங்கும் உபநிடதங்களே சான்றாகும். எனவே, நம் தமிழ்நாட்டில் இருந்த அரிய தமிழ் மருத்துவத்தைக் குலைத்தவர்களும், உயர்ந்த மருத்துவகுலத்தைத் தாழ்த்தியவர்களும், பார்ப்பனர்கள் என்றே நாம் சர். பி. ஜான்ஸ்டன் செயின்ட் அவர்கள் வாயிலாக அறிகின்றோம். அகத்தியம் என்றும், தன்வந்திரி என்றும் நம் மருத்துவமுறைகளைத் திருடிக்கொண்டு சல்லிக்கும் உதவாத சில ஆரிய மருத்துவ முறைகளை மிகுத்து வரைந்து, தமிழ் நாட்டிற்குச் சொந்தமாகிய உன்னத சுன்ன முறைகளை அழித்தேவிட்டனர். வெள்ளையர்கள் இப்பொழுது உயர்தர சிகிச்சை முறையாகக் கருதிவரும், ஊசி செலுத்துதலிலும் உயர்ந்த தீவிரமுடைய சுன்ன முறைகளை நம் தமிழ்நாட்டு மருத்துவர் அறிவதற்கு ஆற்றாது மயங்குகின்றனர். சுன்னம், காரச்சுன்னம், கடுங்காரச் சுன்னம் என்றும், இவைகளில் கடுங்காரச்சுன்னம் ஊசி மூலமாகச்செலுத்தக்கூடிய மருந்தைப்பார்க்கிலும் பதின்மடங்கு தீவிரமாய் உடலிற் பற்றிப் பண்படுத்தக்கூடியது என்றும், நம் தமிழ் மருத்துவ நூல்களால் அறிகின்றோம். இத்துணை உயர்ந்த முறைகளையும் இவைகளைத் தொழிலாய்க் கைப்பற்றி உலகத்தில் புகழ்சிறந்த மக்களாய் விளங்கிய மருத்துவர்களையும் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள் பார்ப்பனர்களாகும். மேனாட்டார்களே இதனை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே, நம்மக்களை இவர்கள் எப்படி ஆதிமுதற்கொண்டே சாமிகளின் பெயரைச் சொல்லி ஆழ்த்திவந்தார்களோ, அதுபோலவே இன்றைக்கும் இவர்கள் நாம் முந்துகின்ற சீர்திருத்த முறைகளையெல்லாம் சாமிகளுக்கு ஆபத்து வந்ததென்று நம்மக்களிடைகூறி, நம்மை முன்னேற வொட்டாமல் தடைபுரிவதையும் பார்த்து வருகின்றோம். அந்தக்காலத்தில் கையாண்ட பார்ப்பனச் சூழ்ச்சிகள் இந்தக் காலத்திலும் சிலரிடத்தில் பலன் எய்தக்கண்டும் நாம் மனம் வருந்தாமலிருப்பது எங்ஙனம்? எனவே, இந்தியாவை இந்நிலைமைக்குக்கொண்டு வந்தவர்கள் பார்ப்பனர்கள் தாம் என்றும், இவர்கள் சாமிகளின்பேராலும், மந்திர தந்திரங்கள் பேராலுமே இதனைக்கையாடி வந்திருக்கின்றார்கள் என்றும் நாம் நன்கறிதல்வேண்டும். இதற்கு மேனாட்டாரே சான்று கூறுகின்றனர். இனியும் இவர்கள் சூழ்ச்சியில் சிக்கி, சாதியென்றும், மதமென்றும், உழன்று கடையவர்களாவதா? அல்லது

அவர்கள் சூழ்ச்சிகளை எட்டுணையும் பொருட்படுத்தாது முன்னேற்றம் அடைவதா என்பதுதான் கேள்வி. நம்மக்கள் ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும்.

(திராவிடன்)

---

## உணவுகளில்
# அரிசிக்கும் கோதுமைக்குமுள்ள
## வேற்றுமை

(டாக்டர். ஜி. ஆர். ராவ், டி. டி. எம், கட்டாக்.)

உடல் வளர்ச்சிக்கு அரிசியைக் காட்டிலும் கோதுமை மிகவுயர்ந்ததென்று சாதாரணமாய் அநேகர் அறியார்போலும்! கோதுமை மலச்சிக்கலை உண்டாக்குகிறதென்றும், அது ஜீரணமாவது கடினமென்றும், ஒருவிதமான தப்பு அபிப்பிராயம் தென்னிந்தியாவில் பரவியிருக்கிறது. ஆனால், நாம் பின்சொல்லுகிறபடி உண்மை வேறுவிதமா யிருக்கிறது.

ஒருவனுக்கு வேண்டிய ஆகாரத்திலுள்ள போஷணை வஸ்துக்கள்யாவும் சரியான விகிதப்படி அதில் அமைந்திருந்தால்தான் அது குறைவற்ற ஆகாரமாகும். தென்னிந்தியாவில் உட்கொள்ளப்படும் ஆகாரத்தில் "புரோட்டீட்" அஃதாவது தசை நாரை விருத்திசெய்யும் பதார்த்தம், அதிகக்குறைவென்று ஆரோக்கிய சாஸ்திர நிபுணர்கள் அநேகந் தடவைகளில் எடுத்துரைத்திருக்கின்றனர். இக்குறைவைச் சரிப்படுத்தவும், தசை நாரை விருத்திசெய்யும் பதார்த்தத்தை வேண்டிய அளவு ஏற்றுக்கொள்ளவும், கரி (இருந்தை) பதார்த்தமாகிய அரிசி அதிகம் உட்கொள்ளப்படுகிறது. இவ்வித ஆகாரத்தினால் தேகம் ஸ்தூலித்து, தேகத்தின் முக்கியமான அவயவங்களுக்குப் போஷணைக் குறைவு ஏற்படுகிறது.

தென்னிந்தியாவிலும் வங்காளத்திலும் முக்கிய உணவாகிய அரிசியில் கரி பதார்த்தம் 12 பாகத்திற்கு ஒரு பாகம் நைட்ரோஜன் (உப்புப்பதார்த்தம்) இருக்கிறது. ஆனால் கோதுமையிலோ கரி பதார்த்தம் 6 பாகத்திற்கு ஒரு பாகம் நைட்ரோஜன் இருக்கிறது. கிரமமான ஆகாரத்தில் புரோடீட் 1 பாகத்திற்குக் கரி பதார்த்தம் 6 பாகம்



இருக்கவேண்டும். ஆகவே, கோதுமையில் இவை எந்த விகிதாசாரத்தில் இருக்கவேண்டுமோ, அதே விகிதாசாரம் இருக்கின்றது. அதனால்தான் அரிசியைக்காட்டிலும் கோதுமை சிறந்ததென்றுசொல்லப்படுகிறது.

இந்த இரண்டு தானியவகைகளிலுள்ள மற்றப்பதார்த்தங்களின் விகிதத்தை எடுத்து ஒத்துப்பார்க்கின், கோதுமையில் ஸெல்லுகள் (சாலங்கள்) அதிகமாகவும், அதிக கொழுப்பும், அதிகமாக உலோக உப்புக்களும் இருக்கின்றன வென்பது ஏற்படுகிறது. ஆகவே, கோதுமையானது அரிசியைவிட அதிக வலுவுள்ளதும், பூர்ணமான ஆகார வஸ்துவுமாக இருக்கிறது. இவ்விரண்டிலுமுள்ள ஆகார பதார்த்தங்களின் விகிதாசாரம் பின் குறிக்கப்படும் அட்டவணையில் காணலாம்.

| | புரோட்டீட் | கரி பதார்த்தம் | எண்ணெய் அல்லது கொழுப்பு |
|---|---|---|---|
| அரிசி | 6-5 | 79-1 | 0-6 |
| கோதுமை | 13-5 | 68-4 | 0-2 |

| | சாம்பல் அதாவது உலோக உப்புக்கள். | ஜலம் | நார்வஸ்து அதாவது ஸெல்லுகள் |
|---|---|---|---|
| அரிசி | 0-6 | 12-8 | 0-4 |
| கோதுமை | 1-7 | 12-5 | 2-7 |

கோதுமையில் அரிசியைக்காட்டிலும் தசை நார் அல்லது ஸெல்லுகள் அதிகம் இருப்பதால், மலச்சிக்கல் கம்மி. உண்மையில், அரிசிச் சாதம் உண்டு, அதனால் மலச்சிக்கல் ஏற்படுவோர் அந்த ஆகாரத்தை மாற்றிக் கோதுமையை உட்கொள்ளும்பட்சத்தில் அவர்களுக்கு மலச்சிக்கல் நீங்கும். கோதுமை சடுதியில் ஜீரணமாகாததைப்பற்றி யோசிக்குமளவில், அது பக்குவம் செய்யும் விதத்தைப் பொருந்திநிற்கிறது என்று தெரிகிறது. கோதுமையை உண்ண விரும்புவோரின் நன்மைக்காக அதைப் பக்குவம்செய்யும் சில முறைகளையும் அதன் குணாகுணங்களையும் இங்கு எடுத்துரைப்போம்.

1. கோதுமையைக்குத்தி ஒன்றிரண்டாய் அரைத்து, அதிலுண்டாகும் அரைவாசி அரைபட்ட தானியமாகிய கோதுமை நொய் அரிசிபோல் வேகவைத்து உண்ணப்படுகிறது. இம்மாதிரி பக்குவம் செய்வது ஒவ்வாது, ஏனெனின், கோதுமையில் தசைநார் ஸெல்லுகள் (சாலங்கள்) அதிகம் இருப்பதால் அது நெரிசலுள்ளது. ஒன்றி

ரண்டாய் உடைக்கப்பட்ட கோதுமையில் இந்தத் தசை நார் ஸெல்லுகள் நுட்பமாய்ப் பிரியாமற் போவதனால் அஃது அதிகநேரம் கொதிக்கவேண்டியிருக்கிறது. இதை உண்ணும் ஜனங்களுள் சிலருக்கு இதனால் மலக்கழிவும் நேரிடலாம். கோதுமை ஜீரணமாகாமற் போவதற்குக் காரணம் இதை இவ்விதம் சமையல்செய்து சாப்பிடுவதே.

2. முழுக் கோதுமையை நுண்ணிய மாவாக அரைத்தால் அதற்கு ஹிந்துஸ்தானியில் 'ஆட்டா' என்று பெயர்; தமிழில் கோதுமை மா என்று சொல்லுவார்கள். இந்த 'ஆட்டா' அல்லது கோதுமை மாவை ஜலத்தைவிட்டுக் கலந்து ஒரு சிட்டிகை உப்புச்சேர்த்துப் பிசைந்த மாவை மேலும்மேலும் அழுத்தமாய்ப் பிசையவேண்டியது. செவ்வையாய்ப் பிசைந்தபிறகு, ஒரு பெரிய எலுமிச்சம்பழ அளவுக்குச் சிறு உருண்டைகளாக உருட்டவேண்டியது. ஒவ்வோர் உருண்டையையும் எடுத்துத் தட்டையாக்கி, வட்டமுள்ள ரொட்டியாகச் செய்து, இரும்பு அல்லது எஃகினால் செய்த தோசைக்கல்லின்மேல் வைத்து, அது பழுப்புவர்ணமாகமாறி, ஒருமாதிரி வாசனை வரும் வரை அதைச் சூடாக்கவேண்டியது. பிறகு இந்த ரொட்டியின்மேல் கொஞ்சம் நெய் அல்லது வெண்ணெயைத் தடவிவைக்கவேண்டியது. இதற்கு வட இந்தியா பாஷைகளாகிய ஹிந்துஸ்தானி, மராத்தி இவைகளில் 'சப்பாத்தி' அல்லது ரொட்டி என்று பெயர். அந்தச் சப்பாத்திகள், பருப்பு, காய்கறிகள், பழங்கள் முதலியவற்றுடன் சேர்த்து உண்டால் நமக்கு இணையற்ற ஆகாரமாகும். ஒரு நிலக்கரி அல்லது கரி அடுப்பு, மாவையும் ஜலத்தையும் சேர்த்துப் பிசைய ஓர் எனாமல்தட்டு, ரொட்டி தட்ட வட்டமான மரப்பலகை, ஓர் அப்பளக் குழவி இவைதாம் இதற்குத் தேவை. காடி அல்லது புளித்த கள்ளு முதலிய ஆக்ஷேபத்திற்கிடமான வஸ்துக்கள்யாதும் வேண்டியதில்லை. இதற்கென்று தனியாய் வேகவைக்கும் பாத்திரமும் வேண்டாம். அதிக அனுபவமும் வேண்டாம்.

3. வெள்ளைரொட்டி (கடற்பஞ்சுபோன்ற ரொட்டி) இது வட இந்தியா பாஷைகளில் 'மைதா' என்று சொல்லப்பட்ட நன்றாய்த் தீட்டிய கோதுமை மாவால் தயாரிக்கப்படுகிறது. மா, ஜலத்துடன் கலந்து கெட்டியாய்ப் பிசையப்படுகிறது. அதை வேகவைக்குமுன் புளித்த கள்ளு அல்லது காடி அதனுடன் சேர்க்கப்படுகிறது. இதை வேகவைக்கும்போது அதிகமாகக் கரியமலவாயு வெளியாகிறது. அதனால்தான் இந்த ரொட்டி இலேசாயும் கடற்பஞ்சுபோலுமிருக்கிறது. இம்மாதிரியான ரொட்டி சுலுவில் ஜீரணிக்கக் கூடியது. ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் இதைத் தயாரிக்க முடியாது; இதற்கு அனுபவமும் வேண்டும். இந்த ரொட்டியைச்சுடத் தனிப்பட்ட பாத்திரங்கள் வேண்டும். மேலும், இது செய்யப்படும் கோதுமைமாவில் ஜீவசத்துப் பொருள்கள் நீங்கிப்போவதால் தேகாரோக்கியத்திற்கு இவை கெடுதலானவை. கோதுமையைத் தீட்டி அரைக்கும்போது, ஜீவவஸ்துப் பொருள்கள் உள்ள அடுக்குகளும் பாஸ்பேட் (தியாக்கினிச் சத்து) உள்ள அடுக்குகளும் போய்விடுகின்றன. ஆனால், ஆட்டா அல்லது முழுக்கோதுமைமாவால் செய்யப்பட்ட ரொட்டியை உண்டால், தேகத்திற்குக் கெடுதலே இல்லை. இதற்குப் பழுப்பு ரொட்டி என்று பெயர். இது சீக்கிரத்தில் ஜீரணமாகி இரத்தத்தால் உறிஞ்சப்படும். வெள்ளை ரொட்டிக்குக் காடி அல்லது புளிப்புக்கள்ளு சேர்க்கவேண்டியிருப்பதால், வைதிகர்கள் ஆக்ஷேபித்தல் கூடும். ஆதலின், எளிதில் தயாரிக்கக்கூடியதும் ஆக்ஷேபிக்கக்கூடிய வஸ்துக்கள் கலவாமலிருப்பதும், போஷணைசக்தி உள்ளதும் ஆகிய இக்குணங்களை யோசிக்குமளவில் தினம் உபயோகிப்பதற்குச் சப்பாத்திகள் அல்லது ஆட்டா ரொட்டிகளே சிலாக்கியமான கோதுமை உணவாகும். கடற்பஞ்சு போன்ற ரொட்டி இதைவிடச் சீக்கிரம் ஜீரணமாகக் கூடியதென்று சொல்லலாம். ஆயினும், சப்பாத்திகளும் ஜீரணமாவது சுலபம்தான்; அவை அஜீரணத்தை உண்டுபண்ணா.

கர்னல் மெக்காரிஸன் என்பவர் நெடுநாளாகக் கஷ்டப்பட்டுச் செய்த சாஸ்திரவிசாரணையினால், இந்தியாவில் பஞ்சாபியர் உண்ணும் உணவு போஷணைசக்தியில் மிக உயர்ந்ததென்றும், மதராஸ், வங்காளம் ஆகிய இந்நாட்டார் உண்ணும் உணவு கேவலம் என்றும் கண்டுபிடித்திருக்கிறார். பஞ்சாபியர்கள் திடகாத்திர சரீரிகளாக விருப்பதே இதற்குப் போதுமான அத்தாக்ஷியாகும்.

சாதாரணமாக ஒரு பஞ்சாபி என்னவிதமான ஆகாரம் உண்கிறான் என்று பார்ப்போம். ஆட்டா அல்லது முழுக்கோதுமையால் செய்த பரோட்டாக்களும், பருப்புக்களும், பச்சை மரக்கறிகளும், பழங்களும், பால் அல்லது தயிரும்தான் அவன் ஆகாரம். பரோட்டா என்பது சப்பாத்திகளைப்போலவே செய்யப்படுவது. ஆனால், பரோட்டாக்களில் இரண்டு மூன்று அடுக்குக்கள் இருக்கின்றன. இஃது எப்படிச் செய்வதென்றால், ஒரு வட்டமான சப்பாத்தியை

இரண்டாக மடித்து, மேலே கொஞ்சம் நெய் தடவி, மறுபடியும் தட்டையாக்கி, மறுபடியும் மடித்து, மறுபடியும் முன்போலவே தட்டையாக்கிக் கடைசியில் முக்கோண வடிவமான ரொட்டியாகச் செய்ய வேண்டியது. அதைத் தோசைகல்லின்மேல் பிறகு வேகவைக்கவேண்டியது. மரக்கறிகளையும், வேகவைத்த பர்சைப்பட்டாணிகளையும் அரைத்து, மொத்தையாக்கி, அதைச் சிறிதளவாக எடுத்து அதன் உள்ளேவைத்து வேகவைப்பதும் உண்டு.

செலவு அதிகம் பிடிக்கும் என்ற காரணத்தைப்பற்றித் தென்னிந்தியாவில் கோதுமை ஆகாரம் முழுதிலும் உண்பது சாத்தியமற்றதாகவிருக்கலாம். ஆயினும், குறைந்தது 'கலப்பட' உணவாகவாவது உண்ணலாம். அஃதாவது, ஒரு வேளைக்கு அரிசி, பருப்பு, பச்சை மரக்கறி, தயிர், மற்றொருவேளைக்குச் சப்பாத்தியாவது அல்லது பரோட்டாவாவது, பருப்பு, பழம், பால் அல்லது தயிர் ஆக இவ்விதம் கலந்து உபயோகிக்கலாம். சப்பாத்திகளை அப்பளம் செய்வது போல் சுலபத்தில் செய்யக்கூடும். தினம் ஒருவேளையாயினும் அரிசிக்குப்பதில் ஏன் அதை உபயோகிக்கக் கூடாதென்பதற்குக் காரணம் ஒன்றும் காணோம்.

ஸ்தூல சரீரிகள், நீர் வியாதியஸ்தர்கள், உடம்புமெலிந்தவர்கள் இவர் யாவரும் சப்பாத்தி சாப்பிட ஆரம்பித்தால், ஸ்தூல சரீரிகளுக்கு எடை குறைய ஆரம்பிக்கும். தென் இந்தியாவில் நீர் வியாதியால் வருந்தும் படித்த புத்திமான்கள் அநேகருக்கும் ஆயுள் வளரும். தினம் மலச்சிக்கலால் அவஸ்தைப்படும் அரிசி ஆகாரம் உண்போருக்குச் சப்பாத்திகள் சாப்பிட்டால் அவன் ஜீவியகாலம் புதிதாகமாறும். போஷணையுள்ள ஆகாரம் என்பதற்கு ஜனங்கள் சாதாரணமாய் என்ன அர்த்தம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றால், வயிறு கொண்டமட்டும் நிரம்பச் சாப்பிடவேண்டுமென்பதே. இந்த வினோத எண்ணத்தைக்கொண்டு அதிகமாக அரிசி ஆகாரத்தை உட்கொண்டு அதனால் புரோட்டீட் பதார்த்தம் குறைவுபட்டுத் தேகம் மெலிந்து போக நேரிடுகிறது. வீடு கட்டுவதற்குச் செங்கல்கள் எவ்விதம் அவசியமோ, அவ்விதமே தேகம் கட்டுமஸ்தாய் இருக்கப் புரோட்டீட்கள் தேவை. ஆகாரத்தில் புரோட்டீட்வஸ்து குறைவுபட்டால், தேய்ந்து அழிவுபடுங்கால், அதைத் திரும்பவும் புதுப்பிக்க முடியாமற் போய் விடுகிறது. அதனால் தேகம்மெலிவடைகிறது. கோதுமையில் புரோட்டீடும் கரிபதார்த்தமும் சரியானவிகிதாசாரப்படி இருப்பதால் அந்த



ஆகாரமானது தசைநார்களுக்கு அதிக போஷணையைக்கொடுக்கிறது. இரண்டரைபங்கு அரிசி ஆகாரத்தில் எவ்வளவு போஷணை கிடைக்குமோ அவ்வளவு போஷணை ஒருபங்கு கோதுமை உண்டியில் கிடைக்கிறது. ஆதலின், சாப்பிடவேண்டிய கோதுமையின் அளவு குறைவுபடுகிறது. அதனால் கோதுமை ஆகாரத்தில் வயிறு நிரம்பச் சாப்பிட வேண்டிய அவசியமில்லை. இவ்வுணவைக் கொஞ்சமாய்ச் சாப்பிட்ட போதிலும், அஃது அதிக போஷணையுள்ள ஆகாரமாகும். இதனால் சரீரம் ஸ்தூலிக்காது. மேலும் கோதுமையிலுள்ள ஸெல்லு பதார்த்தங்கள் மலத்தைக் கழிக்கப் போதுமானவையாக விருக்கின்றன. பழக்கமாய் மலச்சிக்கல் உள்ளவர்கள் பருப்பு, மரக்கறி, பழம் இவையுடன் சப்பாத்தியும் சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும்.

கோதுமை உணவு உண்போரையும் அரிசிச்சாதம் சாப்பிடுவோரையும் ஒத்திட்டுப்பார்த்தால், முன்சொல்லியவர்களுக்கு அதிகமாகப் பொறுக்கும் சக்தியும், நல்ல தேகாரோக்கியமும், மிக்கப் புத்திக்கூர்மையும் இருப்பதாகத் தெரியவருகிறது.

தென் இந்தியாவில் கோதுமை அதிகமாக விளையாததனாலும், மற்ற மாகாணங்களிலிருந்து அதை வரவழைக்கவேண்டியிருக்கிறபடியாலும் அரிசி உண்டியைவிடக் கோதுமை உண்டி அதிக செலவு பிடிக்கக் கூடியதென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் தூரத்திலுள்ள கிராமாந்தரங்களிலும்கூட அரிசி விலையும், கோதுமை விலையும் சமமாக விற்கின்றனவென்பதை நாம் கவனிக்கவேண்டும். அரிசி ஆகாரத்தைவிடக் கோதுமை ஆகாரம் மலிவானதாகவே இருக்கலாம். ஏனெனின், தினம் சாப்பிடும் அரிசியின் அளவைவிட ஐந்தில் இரண்டு பங்குதான் கோதுமை வேண்டியிருக்கும். அளவில் கம்மியாகவிருக்கிறபடியால், விலை சமரசமாயிருக்கும்போது கோதுமை உணவினால் செலவு கம்மியாகத்தான் இருக்கும். இதுவுமன்றி, மட்டாகச் சாப்பிடும் கோதுமை ஆகாரத்தில் சரியான விகிதாசாரப்படி போஷணைப்பதார்த்தங்கள் அடங்கியிருப்பதால் இது மற்றொரு அனுகூலம்.

வங்காளத்தில் கொஞ்சகாலமாக யாவரும் கோதுமை உணவைக் கைப்பற்றவேண்டியமுயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. சுகாதார அதிகாரிகளும் கோதுமை ஆகாரத்தையே உண்ணும்படி ஜனங்களுக்கு மும்மரமாய் வியாபகம்செய்து வருகிறார்கள். இவ்வாறு முன்னோக்கமடையும் வங்காளத்தைப்பார்த்து நமது தென்னிந்தியச் சகோதரர்கள் பயனடைவாராக. கர்னல் மெக்காரிஸன் என்பவர் நமது கண்ணெதிரில் ஆராய்ச்சிசெய்து அறிவித்த விஷயங்களை நாம் கவனியாமல் அசட்டைசெய்யத் தூரதேசத்திலுள்ள வங்காளத்தார் அவற்றைக் கடைப்பிடித்துப் பயனடைவது விந்தையிலும் விந்தையே!

# கொலை மறுத்தல்

அடக்கம் பொறுமைக் கிருப்பிட மாகிய ஆடுகளை
மடக்கிப் பிடித்துக் கழுத்தைத் துணிக்கின்ற மாந்தர்களே
படத்தை விரிக்கின்ற பாம்பைப் புலியைப் பருத்தகரித்
திடத்தை யுடைய ரினும் வல்லமை யென்செயுந் செப்புமினே. (1)

பண்ணுக் கிசைந்த மொழிபேசு கின்ற பறவைகளின்
கண்ணுக் கினிக்கும் அழகான மேனியின் காட்சிவிட்டு
வண்ணச் சிறகைப் பிடுங்கிப் பதைக்க வதைத்தடலாம்
புண்ணுக்கு மஞ்சள் புளியிள காயிடல் புண்ணியமோ. (2)

உருக்கிய வெள்ளித் துணுக்குகள் போல வலைவிவரும்
பெருக்கத்தி லாடிக் குதிக்கின்ற மீன்கள் பிடிபடவும்
சுருக்கி யுலர்த்திய வற்றலை நித்தமுஞ் சுட்டுவைப்பீர்
பொறுக்க முடியா முடைநாற்ற மைய புசிப்பதுவோ. (3)

ஆட்டைக் குருவியைக் கோழியை வாத்தை யதிமதுரப்
பாட்டைச் சொலுங்கிளிப் பிள்ளையைப் பூனையைப் பார்தனிலே
வேட்டையிற் கொன்று புசிக்கின்ற பேர்க்கந்த மேதினமன்
கேட்டை விளைப்பான் பிணியால் வருந்திக் கிடப்பரம்மா. (4)

உலகத்துள்ள அணுவளவான சீவன் முதல் யானை யீறுயுள்ள வுயிர் வரையாவும், பசி, பிணி, மரணம் முதலிய துன்பத்திற்குப் பயந்து தம்மைக் காத்துக்கொள்ளவே முயல்கின்றன. நாமெப்படி நமதுயிரைப் பாதுகாக்க முயல்கின்றோமோ அப்படியே எல்லா உயிருந் தம்மைக் காக்க முயல்கின்றன. ஓடுகிற ஓர் எறும்பைப் பிடிக்கப்போனால் அது நமது கையிலகப்படா தெப்படியாவது ஓடிப் பிழைக்கப் பார்க்கின்றது. முகட்டுப்பூச்சி முதலியன அங்ஙனமே யோடிப் பதுங்குகின்றன. இத்தகைய சிறிய உயிர்களே தம்மைக் காத்துக்கொள்ளும்போது பெரிய உயிர்களைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? நம்மினும் பலமுள்ள பெரிய உயிர்களுக்கு நாம் ஏதேனுந் தீங்குசெய்தால் அவைகள் நமக்குடனே தீங்குசெய்யும். சிறிய உயிர்களோ தமது வலியின்மையை யறிந்து மனம் வருந்தி இறந்து படுகின்றன. "ஏழையழுத கண்ணீர் கூரியவாள்" என்றும், "எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும்" என்றும், "முற்பகல் செய்யிற் பிறன்கேடு தன்கேடு பிற்பகற் காண்குறும் பெற்றியகாண்" என்றுந் தொன்னூல்களிற் காணப்படும் முதுரைக்கிணங்க, உயிர்களை வருத்தியவினையால் மக்கள் வருந்தநேரிடுகின்றது. நண்டின் கால் முறித்துண்டவன் முடநோயுடையனாகிறானென்றும், குருவியைச் சிறை வைத்தவன்



சிறைக்கோட்ட மடைகிறானென்றும் பெரியோர் கூறுவதுண்மையே. நம்மினும் வலியானொருவனை நாமடித்தால் அவன் உடனே நம்மைத் திருப்பியடிப்பான். எளியானுக்குத் தெய்வந் துணைநின்று பகைவர்க்குத் தீங்குசெய்கின்றது. அநேகமாய் மக்கள் உயிர்வதை செய்தல் உண்பதற்பொருட்டே. அஃதுண்பதனா லென்னபயன்? காய்கறியுண்ணும் மக்களைப் பார்க்கிலும் புலாலுண்ணு மக்கள் எதிற் சிறந்து விளங்குகின்றார்கள்? காய்கறி யுண்பார் சீவித்திலலையா? தாவரம் புசிப்போர் நெடுநாள் சீவித்திருப்பதோடு நோயிலாதவராயுஞ் சிறந்த புத்திசாலிகளாயும் விளங்குகின்றார்களே. காய்கறி யுண்பவர்கள் எப்போதும் சாந்தகுணமுடையவர்க ளாகவும், புலாலுண்பவர்கள் கோபமுடையவர்களாகவு மிருக்க நாம் காண்கிறோம். திருஷ்டாந்தமாகப் புலாலுண்ணும் சிங்கம் புலி நாய் முதலிய மிருகங்களும், கருடன் கழுகு முதலிய பறவைகளும், முரட்டுத்தனமுங் கோபமுமுடையவைகளா யிருக்கின்றன. யானை குதிரை மாடு முதலிய மிருகங்களும், கிளி குருவி முதலிய பறவைகளுஞ் சாந்தகுண முடையவைகளாகவே யிருக்கின்றன. சிங்கம் முதலிய உயிர்களைக் கடவுள் மாமிசமுண்ணப் படைத்ததுபோல் நம்மையும் மாமிச முண்ணப் படைத்தாரென்று சிலர் எண்ணுகிறார்கள். இறைவன் நம்மை மாமிச முண்ணப் படைத்த துண்மையாகில் சிங்கம் முதலிய விலங்குகளுக்கும் கழுகு முதலிய பக்ஷிகளுக்கு முள்ளதுபோல் நமக்கும் நீண்ட கூர்மையான பற்களையும் நகங்களையும் படைத்திருப்பார். அங்ஙனமின்றி புல்பூண்டுகளை மேயும் ஆடுமாடுகளுக் குள்ளதுபோல் நமக்கும் பல்வரிசையை யுண்டாக்கி யிருப்பதால் நாம் தாவர வர்க்கங்களையே புசிக்கக் கடவுளால் உண்டாக்கப்பட்டோமென் றுணர்தல்வேண்டும்.

மக்களுள் சிலர் ஏன் ஆதிகாலந்தொடங்கி புலால் உண்கின்றார்களெனின், நாகரீகமற்று அறிவு முதிர்ந்து பயிர்த்தொழில் செய்யும் வகையறியாது, காட்டுமிருகங்களோடு பழகி, நன்மைதீமை யறியாது, காட்டிலே வசித்துக்கொண்டிருந்த மக்கள் உண்பதற் கொன்றுங் காணாது, பசிப்பிணிக்கு நொந்து வேட்டையாடியும், மீன்பிடித்தும், உண்பாராயினர். பின் இவர்கள் நாகரீகமடைந்து நல்ல நிலைக்கு வந்தும் அக்கொடிய பழக்கத்தினின்றும் நீங்காதிருக்கின்றனர். சிலர் விலக்கியும் வருகின்றனர். ஆதலால் உயிர் வதைக்குக் காரணமாகிய புலாலுண் நுகர்வதை முதல் விலக்கவேண்டும்.

பசியும் பயமும் வருத்தாதபடி வுயிர்களைப் பாதுகாக்க வேண்டும்.

கா. சி. சிவசங்கரன்.

# மருத்துவ குலத்தவர் தொகுதி

## இந்தியா, இலங்கை, வெளிநாடு மருத்துவகுலத்தவர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

(பண்டித - ப. சு. நாராயணன் எழுதுகிறார்.)

முற்காலத்தில் நாம் எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்து வாழ்ந்து வந்தோமோ, அவ்வளவுக்கு இப்போது கீழ்நிலைக்குவந்து அடிமைத்தனத்தில் வாழ்கின்றோம். மற்றவகுப்பினரில் அநேகர் மேல்நிலையடைந்து காலத்துக்குத் தக்க கோலமாய் முன்னுக்கு வருகிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது.

நாளுக்குநாள் மனிதர்கள் நாகரீக மிகுந்து விருத்தியடைகிறார்களென்பதில் ஐயமில்லை. நாகரீகம் பெருகப்பெருக மக்களுள் ஞானவேட்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? இராமன் ஆண்டாலென்ன; இராவணனாண்டாலென்ன? என்னும் கொள்கைகளோடு முற்காலத்தினர் வாழ்ந்தனர். இக்காலத்தவரோ அரசாங்கத்தில் தமக்குள்ள உரிமைகளைப்பற்றியும் சமூதாயத்தில் தமக்குரிய நிலைமையைக்குறித்தும் சிந்தித்து அவைகளில் படிப்படியாக உயர்ந்த நிலைமையை அடைந்து வருகின்றனர்.

இஃதன்றி பூத பௌதிக ரஸாயன சாஸ்திர ஆராய்ச்சி வளர்ந்து மக்கள் நலமாக வாழ்வதற்குரிய வசதிகள் ஏற்பட்டு வருகின்றன. மேற்சொன்ன விஷயங்களைப் புத்தக வாயிலாகவோ, கடிதப் போக்குவரத்துகள் மூலமாகவோ வெளியிடுவதைவிட்டு இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுவது ஏன்? அதற்கும் தற்காலத்தவர் வாழ்க்கையே காரணமாகும். பத்திரிகைகள் பலதிறப்படும். அவை,தாம் வெளிவரும் காலக்கிரமத்தைக் குறித்துத் தினப்பத்திரிகை, வாரப்பத்திரிகை, மாதப்பத்திரிகை என வழங்கும். அவைகளுட் சில வர்த்தமானப்பத்திரிகைகள், அரசியல் விஷயங்களை எழுதும் பத்திரிகைகள், ஆசார சீர்திருத்த பத்திரிகைகள், வைத்தியம் மதம் குலம் பூத பௌதிக ரஸாயன சாஸ்திர ஆராய்ச்சி முதலியவைகளுக்குரிய பத்திரிகைகள், தொழிலாளர் பத்திரிகைகள் எனப் பலவகைப்படும். காலத்துக்கேற்ற



அளவு கருவிகளாய் தற்காலம் பலபத்திரிகைள் தோன்றிவந்துகொண்டிருக்கிறன. மருத்துவசமூகத்துக்கு நெடுங்காலமாக ஒரு பத்திரிகையில்லாக்குறை பெரிதாயிருந்தது. அக்குறை நீர்ந்தது. சில தினங்களாய் மருத்துவன் என்னும் பத்திரிகையை நமது குலத்தலைவரும் ஆசிரியருமாகிய பண்டித - S. S. ஆனந்தம் அவர்கள் அரும்பெரும் முயற்சியினால் வெளியிட்டிருக்கிறார்கள். நெடுநாட்களாக முயற்சி செய்து வெளிவந்திருக்கும் நமது பத்திரிகையை நமது சமூகத்தில் பெரும்பாலோர் ஆதரிக்க முன்வரவுமில்லை. பத்திரிகை தோன்றி ஒன்பது திங்களாகியும் சந்தாதாரர்கள் குறைவும் பத்திரிகை அநேகரிடம் வலியவலிய வந்தும் ஆதரிப்பாரில்லாது வந்தவழியே போகவும் சிலது செலாமணியாகவும் இருந்துவருகிறது பார்த்து வருந்தாமலிருக்க முடியவில்லை. தென்னிந்தியாவிலும், இலங்கை, வெளிநாடுகளிலும் நமது குலத்தவர்கள் பதினொருலட்சம் பேர்கள் இருக்கிறதாகத் தெரிகிறது. இத்தொகையினரில் இருபது அல்லது நாற்பதிலொரு பங்கு தொகையினராவது மருத்துவனை அன்புடன் ஆதரிப்பார்களானால் கூடிய சீக்கிரத்தில் நமது குறையை நிறைவிக்க உற்பவித்த மருத்துவன் முன்னுக்கு வருவதுமல்லாமல் வாரமொருமுறையாகவும் வருவான் என்பது என்போலுள்ளவர் கருத்து. இப்போது ஏற்பட்டிருக்கும் சந்தா அதிகமென்று அநேகர் அபிப்பிராயம் இருக்கிறதாகத் தெரிகிறது. அதற்கு ஆசிரியரவர்கள் போதுமான சந்தாதார் சேர்ந்தபின் சந்தாதொகையைக் குறைத்துவிடுகிறதாகவும் விடையளித்திருக்கிறார்கள் என்பது மருத்துவன் வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம். மேலும் நமது குலத்தவர்களில் அநேகர் பத்திரிகையின் அவசியம் தெரியாதிருக்கின்றனர். கோவில்வரி, குருக்கள்வரி, புரோகிதவரி, அரசாங்கவரி, நாடக முதலிய பல கண்காக்ஷி வரிகளும், இன்னும் சொல்லமுடியாத ஆடம்பர வரிகளையும்விடவா நமது குலக்குறையை நீக்கவந்த மருத்துவன் சந்தாவரி பெரிதாய்த் தெரிகிறது? நாள் ஒன்றுக்கு பைசா இரண்டு அல்லது சதம் ஒன்றுக்குக் குறையவரும் குலதர்மத்தில்மட்டுமா மனம் செல்லுகிறதில்லை. அது நமது குலம்செய்த கொடுமைபோலும். இதுநிற்கவும், நமது சமூகம் நெடுநாளாகவே தன்னிலைமை தெரியாது தவித்துத் துன்புற்று எங்குந்தருவாயில் நமது குலத்துக்கொரு திலகமாய் வந்துதோன்றிய தலைவர் பண்டித S. S. ஆனந்தம் அவர்கள் நாமிருக்கும் கீழ்நிலைமை நோக்கி, நம்மையும் மற்றச் சமூகங்களுக்கொப்ப மேல்நிலை எய்தல் கருதி, தளரா ஊக்கத்து

டன் எத்தனையோ துன்பங்கள் வந்தபோதும் பொருட்படுத்தாது எடுத்த கோரிக்கையை நழுவவிடாது காரியமே கண்ணாயிருந்து உழைத்து வருகிறார்களென்பதை எவரும் மறுக்கத்துணியார். அவர்கள் செய்துவந்த விடாமுயற்சியின் பயனைப் அநுபக்கு இரண்டுபழுதில்லை என்பதுபோலவாவது நாம் நல்லநிலைமைக்கு அஸ்திவாரமாகிய ஒன்று இரண்டு மகாநாடு கூடிவிட்டு, மூன்றாவது மகாநாடு கூடுவதற்கு யாருக்குவந்த விருந்தோவென்றிருக்கிறோம். நமது சமூகம் நல்லநிலைமைக்கு வரவேண்டுமாயின் நமது தாய்மொழியை நன்கு பயின்று, அன்பு அறம் மருத்துவம் யோகம் ஞானம் முதலிய அறிவு நூல்களையும், வேளாண்மை கைத்தொழில் வாணிபம் முதலியவைகளையும் கற்கவேண்டும். நமது முயற்சியின் ஊக்கத்தை ஒவ்வொரு வருஷமும் மகாநாடு கூட்டிக் காட்டவேண்டும்.

அன்பின் மிக்க பெரியோர்களே! வாலிப சகோதரர்களே! நாம் இப்படி ஊக்கந் தளர்ந்து கண்மூடித்தனமாய் இருந்துவிட்டால் இனி எக்காலத்தில் முன்னுக்கு வருவது? ஆகையால் இனி அரைக்ஷணமேனும் சமூகவிஷயத்தில் மெத்தனமாயிருக்காது எல்லோரும் ஊக்கத்தோடு மகாநாடு கூடும்விஷயமாயும், மருத்துவன் பத்திரிகை விஷயமாயும் முன்வந்து உழைக்கவேண்டியது. ஷை பத்திரிகைக்கு உள்நாடு வெளிநாடுகளில் வசிப்பவர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராய் சேர்ந்துகொள்ள வேண்டியது. அத்துடன் நின்றுவிடாது பொதுமக்களையும் சந்தாதாரராய் சேர்க்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

# திருச்சி மருத்துவர் சங்கம்

## தீர்மானங்கள்

(நமது நிருபர்.)

20-4-29 மாலை 4-மணிக்கு வரகநேரி மேட்டுத்தெரு வைத்திய சாலையில் நடந்துவந்த மருத்துவர் சங்கம் திருச்சிக்கோட்டை மருத்துவர்வீதி வடிவேல் மருத்துவர் வீட்டிற்கு மாற்றப் பெற்றது. அது சமயம் மருத்துவர்களும், மற்றவர்களும் அடங்கிய ஒரு கூட்டம் திரு. எஸ். அய்யாக்கண்ணு மருத்துவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது,



இலங்கை மருத்துவர் சங்கத் தலைவர் திரு. வி. கணபதி, திருவாளர்கள் மீ. மதுரைமுத்து, கூ. கருப்பையா, ம. வடிவேல் முதலியவர்கள் பேசினார்கள்.

பின் கீழ்கண்ட தீர்மானங்கள் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

ராயல்கமிஷன் எனும் சைமன்கமிஷன் சென்னை வந்தபொழுது தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் சார்பாக தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஒரு (மெமோராண்டம்) அறிக்கை படித்துக் கொடுத்ததைப்பற்றி இக்கூட்டம் அன்னாரைப் பாராட்டுகிறது.

சென்னை நகர்காப்புக் கழகத்திற்கு, தலைவர் பண்டிட், ஆனந்தம் அவர்களை ஒரு அங்கத்தினராக நியமித்ததைக் குறித்து திருச்சி மருத்துவர்சங்கம் மகிழ்ச்சி அடைவதோடு கனம் முதல்மந்திரி அவர்களுக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

ஈரோட்டில் கடவுளை வணங்க கோயிலுக்குள் சென்ற சுயமரியாதை வீரர்கள் திரு. ஈசுவரன், பசுபதி, கருப்பையா முதலியவர்களை இக்கூட்டம் முழுமனதுடன் பாராட்டுகிறது.

---

# மதுரை இராமநாதபுரம் ஜில்லா மருத்துவர்களுக்கோர் எச்சரிக்கை.

---

அன்பார்ந்த மருத்துவ சகோதர சகோதரிகளே! நாம் நம் தலைவர் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுக்கு என்றுமிலா உவகையுடன் நமது உள்ளக்கிடக்கையை உண்மையுடன் உரைப்போமாக.

நமது மருத்துவப் பெருந்தலைவர் அவர்கள் பரம்பரையாய் புகழ்பெற்ற வைத்திய குடும்பத்திற் பிறந்தவர். அன்னார் சுமார் இருபது ஆண்டுகளாக தமிழ் மருத்துவத்திற்கும், மருத்துவர்கட்கும் ஆற்றிவரும் தன்னலங் கருதாப்பணிக்கு எல்லையும் காண வியலுமோ?

தற்காலம் உயர்சாதியார் என்று சொல்லிக்கொள்பவர்களால் நம்மினத்தோர் சுயமரியாதையிழந்து, நமக்குச் சொந்தமும், உத்தமுமான வைத்தியத்தையும் இழந்து, பல்லைகளாய் நம்மூதாதையார் வகித்திருந்த பெருமையைப் பறிகொடுத்து ஆரியப் பார்ப்பனர்களாலும், அன்னார் வால்பிடித்துத் திரிந்து, ஆண்மையில்லாமல் தாமும் உயர்

ஜாதியார் என்று சொல்லிக்கொள்வோர்களாலும் படும் கஷ்ட நஷ்டங்களுக்குக் கணக்கு வழக்குண்டோ?

நாம் பரோபகாரமான வைத்தியத்தொழிலை நமது குல ஆண்மக்களும், பெண்மக்களும் கைக்கொண்டு பொதுஜன ஊழியம்செய்து வருங்கால், தென்னிந்தியர் தவறாகக் கேவலமாய்க் கருதப்படும் மயிர்களையும் தொழிலையும் நம்மில் பலர் செய்யப் பழகிக்கொண்டார்கள். முதலில் அத்தொழில் செய்பவர்களும், செய்துக்கொள்பவர்களும் அதனைத் தாழ்ந்த தொழிலாகக் கருதாமல் இரணவைத்தியத்தொழிலின் ஓர்பாகமாய்க் கொள்ளப்பட்டிருந்தது. பிறகு மங்களகரமான தொழிலாகக் கருதப்பட்டது; அதன்பிறகு சுயநலக்காரர்கள் அத்தொழில்செய்யும் நம்மைக் கேவலமானவர்களென்று பிதற்றி நம்மை மரியாதையின்றி நடத்த ஆரம்பித்தார்கள். நம் முன்னோர்களும் சாதி இருமாப்புடைய அக்கொடியோர்க்கு அடங்கி நடப்போராயினர். தற்காலம் நமது நிலைமையை மனிதத்தன்மையோடு பார்ப்போர் எவரே கண்ணீர்விட்டு கரையாதிருப்பர்.

நாம் தற்காலம் பலவிதத்திலும் சமத்துவம், சகோதரத்துவமின்றி ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றோம். இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் நமது முன்னோர் பரம்பரையாகச் செய்துவந்த பரோபகாரமான வைத்தியத்தொழிலைச் சிறிதுசிறிதாக மறந்தும், அலட்சியம்செய்தும் வருவதினாலும், கேவலமாகக் கருதும் ஒரேதொழிலைப் பலர் செய்துவருவதினாலுமல்லவோ? உற்று நோக்குமின் உற்ற நண்பர்காள்!

நாம் இவ்வாறு சுயமரியாதை யிழந்து செய்யும்வகை யின்னதென்று தெரியாது, நெடுநாட்களாக வருந்திக்கொண்டிருந்தோம். ஆழாழியில் கரைகாணாது தத்தளிக்கும் ஒரு கப்பலுக்கு கலங்கரைவிளக்கம் காணப்பட்டதைப்போல் நமது தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் தற்போது நம் கண்முன் தோன்றினார். அன்னாரின் அரும் பெரும் முயற்சியால் நாம் இன்று கண்விழித்து உலகத்தைப்பார்த்தோம். அவரால் நாம் அடைந்துவரும் நன்மைகளுக்கு அளவுண்டோ? சுமார் சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக அன்னார்தம் உயிரையும் பொருட்படுத்தாது நம்மவர்க்கு பணி ஆற்றி வருகிறார்.

நமது குலமாணவர் சிலருக்கு இலவச வைத்தியக் கல்வியும் மற்றும் நன்மைகளும் சிறிது கிடைத்திருக்கின்றன. நம் குலத்தோரில் பல்லோர் கல்வியிலும், ஞானத்திலும், வைத்தியத்திலும் தலைசிறந்து விளங்குகின்றார்கள். இவர்கள் நம் மாபெருந்தலைவரோடு ஒத்துழைத்து நமக்கு அரும்பெரும்பணி ஆற்றுகிறார்கள். வடதேசத்தில் நம்மினத்தோர் அநேகமாகச் சுயமரியாதையுடன் வாழ்கிறார்கள். பொதுவாக தமிழ்நாட்டிலும், சிறப்பாக மதுரை ராமநாதபுரம்ஜில்லாக்களிலுள்ள மருத்துவ வகுப்பினர்கள் தற்காலமிருக்கும் நிலைமை மிக வருந்தத்தக்கதாகும். ஏனோ இவர்கள் ஒருவிதத்திலும் ஒத்துவராதிருக்கின்றனர். பண்டிட் ஆனந்தம் அவர்கள் சுயமரியாதை யியக்கத்தலைவராம் நமது அன்பிற்குரிய பெரியார்கள் ஈ. வே. ராமசாமியார், கண்ணப்பர் முதலியவர்களின் கடல் ஒலிபோன்ற ஓசை இன்னும் இவர்கள் செவிகளில் புகவில்லையா? புகுந்தும் செவிடர்களாய் இருக்கின்றனரா? தமிழைப்படியுங்கள்; மருத்துவன், குடி அரசு, திராவிடன் பத்திரிகையைப் படியுங்கள்; நமது பெரியோர்கள் விரிவுரைகளைக் கேளுங்கள்.



உமது செல்வர்களைப் பொறுக்கி, சென்னை தங்கசாலைத்தெரு 221-ம் நெம்பர் கட்டடத்தில் வாசஞ்செய்யும் பண்டிதர் ஆனந்தம் அவர்களிடம் அனுப்புங்கள். நம் தலைவர் அவர்களுக்கு வேண்டிய கல்வியும், வைத்தியமும் கற்பிப்பதோடு இலவசமான உண்டி, உடை இருப்பிடமும் கொடுக்கிறார். இது புதுவிஷயமல்ல; சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே இத்தொண்டு நடைபெற்று வருகிறது. அன்பர்களே! சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள். உங்கள் தலையில் நீங்களே மண்ணைவாரிக் கொட்டிக்கொள்ளாதீர்கள். தலைவர்களின் பேருரையைக் கேளுங்கள். சிறிது சிறிதாகவாவது முன்வாருங்கள். பிறர் நகையாடும்வண்ணம் இன்னும் வாழ உங்களுக்கு இஷ்டமா?

நண்பர்களே! நமது அஞ்ஞானமாகிய நோய்க்கு ஞானபானுவாகிய மருத்துவனே நல்ல மருந்தாகும். பத்திரிகை ஞானத்தாலேயே நாம் முன்னேற்றம் அடைய முடியும். பிறரைப் பார்த்தாவது புத்தி பெறுங்கள்.

நம் மாபெருந்தலைவர் ஆனந்தம் அவர்களின் அரும் பெரும் தியாகங்களைக் கண்ணுற்று கவர்ன்மெண்டார் இதுவரை வாளாவிருந்து இப்போதாவது அவரைச் சென்னை நகரபரிபாலனசபை அங்கத்தினராக நியமனம் செய்தார்கள். இஃது நம்மினத்தோரின் வெற்றிக்கு அறிகுறியாவதோடு நமக்கு என்றுமிலா ஆனந்தத்தை ஊட்டுகிறது. சீர்திருத்த அரசாங்கம் வந்ததுமுதல் நாம் எதிர்பார்த்தபடி சட்டசபையில் இனியாவது நமது தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்களை அரசாங்கத்தார் நியமனம்செய்வார்களென்று நம்புகிறோம்.

நம் தலைவர் அவர்கள் பல்லாண்டு உடல் நலம் குன்றாது பொதுஜன ஊழியம் செய்துவரும்படி எல்லாம் வல்ல இறைவனை வழுத்துவோமாக.

ப. ரா. வீரணன், பரமக்குடி.

## சன்மார்க்க சகோதரத்துவ சங்கம்
## 2-வது ஆண்டுவிழா.

### திரு. மணி திருநாவுக்கரசுமுதலியார் அவர்களின் சொற்பொழிவு

(நமது நிருபர்)

மயிலை சன்மார்க்க சகோதரத்துவ சங்கத்தின் 2-வது ஆண்டுவிழா திருவாளர் திவான்பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியாரவர்கள் சி. ஐ. இ. தலைமையில் 9-6-29 ஞாயிற்றுக்கிழமை மாலை மயிலை வன்னியகுலச் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

தலைவர் முகவுரைக்குப்பின் காரியதரிசியால் ஆண்டு அறிக்கை படிக்கப்பட்டபின் திரு. மணி. திருநாவுக்கரசுமுதலியாரவர்கள் "ஜனசமுதாய மதசீர்திருத்தம்" எனும் பொருள்பற்றிச் சுமார் அரைமணி நேரம் மிக விளக்கமாய்ப் பேசியதன் சுருக்கமாவது:—

'ஜனசமுதாய மத சீர்திருத்தம்' எனும் பொருள்பற்றிச் சிறிது ஆராய்வோம். தொன்றுதொட்டு பற்பல அறிவாளிகள் தோன்றி அவ்வக்காலங்களில் நுழைந்த குறைபாடுகளை நீக்கி, மக்கள் தூயவாழ்வு வாழவேண்டுமென்னும் நன்னோக்கத்துடனே பற்பல மதங்களை நிறுவினார்கள். நாளாக ஆக நவீன முறைகள் தோன்றி பழமைகளை ஒழிப்பது இயற்கை. எனவே, உலகத்தில் மாறுபாடுகள் தோன்றுவது சர்வ சாதாரணம். எவரும் ஒரே நிலைமையிலிருக்கமுடியாது. ஒன்று உயரவாவது வேண்டும், அல்லது தாழவாவது வேண்டும். இது நம் நாட்டிற்கும் பொருந்தும் நம் நாட்டார் மதத்திலே உயர்ந்தபடிக்கு வந்து சேர்ந்தார்கள் எனினும், அவர்களிடத்தும் அம்மத நூல்களிடத்தும் சில குறைகள் இருப்பதும் இயற்கையே.

இந்தியாவிற்குச் சுயாட்சிபெறத் தடையாயிருப்பது என்னவென்றால், 'பழமைப்பற்று' என ஒரு ஆங்கிலேயர் கூறியிருக்கின்றார். உதாரணமாக டில்லிநகரத்தில் மோட்டார் கார், மோட்டார் சைகில், சைகில், கோச், பீட்டன், ஜட்காவண்டி, ஒற்றை மாட்டுவண்டி, ஒட்டகம், கழுதை இவை அனைத்தும் உபயோகப்படுவதைத் தினந்தோறும் பார்க்கிறோம். நவீன இயந்திரங்கள் வந்த இக்காலத்திலும் பழைய வாகனங்களும் பக்கத்தே இருந்துகொண்டே இருக்கின்றன. இதனால் சிறந்த நிலையைக்கூறும் வேதாந்த சித்தாந்தக்கொள்கைகளுடன் பழைய காட்டேரி பூசையும் நடைபெற்றுவருகிறது.



நல்ல கல்வி யறிவுடையவனுங்கூட சூளைக்கல்லைக்கொண்டுவந்து மஞ்சள் தடவி பூச்சாற்றித் தூபதீபம் போடுகிறான். தன் வீட்டில் மதுமாமிசம் படைத்துக் காட்டேரிக்குப் பூசையிடுகிற பரம்பரைச் சைவரும் உளர். ஆண்கள் மதத்தோடு பெண்கள் மதமும் வேறுபடுகின்றது. இதற்குகாரணங்களுண்டு: முதலாவது பெண்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை அவ்வாறு பூசையிடாதிருக்கச் செய்ய முயற்சிப்பதில் ஆண்களுக்குச் சோம்பல். இரண்டாவது அந்தக்காட்டேரி என்னதீங்குவிளைக்குமோ எனும் அச்சம். மூன்றாவது கடவுள் எங்குமுள்ளவர்தாமே; எப்படி எங்கேயிருந்து வணங்கினாலும் அது கடவுள் வழிபாடுதானே என்பது. இதுபோலிஞானம். அக்காலத்தினர் செய்கைகளுக்கும், இக்காலத்தவர்கள் செய்கைகளுக்கும் மிக மாறுபாடிருப்பதைப் பார்க்கக்காணலாம். ஆனாலும் அனுபவத்தில் பழைய அவசியமில்லாத பல மூடப்பழக்கவழக்கங்கள் இன்னும் நம்மவர்களுள் இருக்கின்றன இவை ஒழியவேண்டும். சீவகசிந்தாமணியில் சீவகன் மயிற்பொறியேறி விண்ணிற் பறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகாயக்கப்பல்கள் தோன்றுவதற்கு முன் இத்தகைய பொறி புலவரின் கற்பனை என்று கூறுவார்களேயொழிய நம்பமாட்டார்கள். ஆனால் இக்காலத்தே சிலர் ஆராய்ச்சிசெய்து, இப்போதுமனிதன் அறிவிற்குத் தோன்றிய ஆகாயக்கப்பல், அப்போதே இருந்தது என்றுசொல்லிக் கொள்ள இடமுண்டாகிறது.

சீர்திருத்தக்காரர்களைப் போற்றுவோருமுண்டு. தூற்றுவோருமுண்டு. சீர்திருத்தத்திட்டம் யாதொன்றும் உறுதியாய் இப்போதே நிர்ணயிக்கப்பட முடியாது. இதுவரை உறங்கிக்கொண்டிருந்தவர்களைத் தட்டி எழுப்பத் தைரியம் இப்போதுதானுண்டாயிருக்கிறது. சீர்திருத்தத் திட்டம் ஒன்று தயாரித்து உலகத்தார் இசையையும் வசையையும் பொருட்படுத்தாமல் நம் சீர்திருத்தமே இலக்காகக் கொண்டு முன்னேற முயலவேண்டும்.

ராஜாராம் மோகனராய் தோன்றி இந்து மதத்தைச் சீர்திருத்தும் நோக்கத்தோடுழைக்க முன்வந்து பிரம்மசமாஜத்தைத் தோற்றுவித்தார். சுவாமி தயானந்த சரஸ்வதி அதே நோக்கத்தோடு ஆரிய சமாஜத்தை நிறுவித் தீவனாக்கம் வேண்டுமென்றார். ராம் மோகனராய் ஜாதியையொழிக்க முயன்றார். தயானந்தர் எல்லோரையும் பிராமணர்களாக்க முயன்றார். இருவருக்கும் கருத்து ஒன்றே. முறைகள் வெவ்வேறு.

சிற்சில சமயங்களில் சிலர் பேசும்போது நம் கருத்திற்கு மாறாகவே ஆவேசம் பற்றிப் பேசுவதுண்டு. அதை ஆராய்ந்து பார்த்துத்தான் நாம்பொருட்படுத்தவேண்டும். இந்நிலையில் கோயில்களும் மடங்களும் இருக்கும் சீர்கேடான நிலைமையைக்கண்டு சீர்திருத்தும் முகத்தான் அவற்றை யொழிக்கவேண்டுமென்றால் அது குற்றமாகாது.

நம் மதப்பிரசாரம் விழாக்கள் மூலமாகத்தான் நடைபெற்றுவருகிறது. ஆனால் தற்போது விழாக்கள் கூட்டங் கூட்டுவதற்கேயன்றி வேறொன்றிற்கும் பயன்படுவதில்லை. விழாக்களின் பெயருங்கூடச் சிலருக்குத் தெரிவதில்லை. அவற்றின் உண்மைப்பொருள்களும் தத்துவங்களும் மக்கள் மனதில் எவ்வாறு பதியும்? இதைக் காணும்போது நம்மனம் பதைக்கிறது.

கோயில்கள் பாமரர்களுக்குத்தான் ஏற்பட்டவை என்று சிலர் கூறுகின்றார்கள். அப்படியானால் மக்கள் அனைவரும் என்றும் பாமரராகவே இருக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடேயேதான் அவை கட்டப்பட்டனவா? அப்படியானால் நால்வர்களும், பட்டினத்தார் முதலிய பெரியார்களும் கோயில்களுக்குச்சென்றிருக்கின்றனரே? அவர்களெல்லாம் பாமரரா?

வழக்கம்பற்றி நம்மவர்கள் பலர் கோயில்களுக்குள் போக அனுமதிக்கப்படுவதில்லை. வழக்கம் என்பது என்ன? எத்தனை வருஷங்களாக வழங்கிவருவது வழக்கம்? வழக்கங்கள் காலமாறுபாட்டின்படி மாறுவது இயற்கையல்லவா? மனுதர்மசாஸ்திரம் முன்னுக்குப் பின் முரணானது என்று பெரும் புலவராகிய நம்நண்பர் சாஸ்திரியார் ஒருவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். காரணம் என்னவென்றால், முதலில் எழுதப்பட்ட சுலோகங்கள் அக்காலத்திற்கேற்ற முறையில் எழுதப்பட்டன. பின்னர் காலமாறுபாட்டிற் கேற்றபடி புது சுலோகங்கள் அவற்றோடு சேர்க்கப்பட்டன. எனவே, முன்னுக்குப்பின் முரணாகத் தோன்றிற்று. ஆதலால் அனுபவத்திற்கு ஒவ்வாதவற்றை நீக்கவேண்டியது இன்றியமையாதது.

நான் சிறிதுகாலத்துக்குமுன் காஞ்சிக்குச் சென்றிருந்தேன். அப்போது கோயிலில் நடராஜர் திருவுருவத்தைச் சந்திரசேகரராக மாற்றிப் பொய்க்காலமைத்து, பொய்நகைகள் சாத்திப் பவனிகொண்டுவந்தார்கள். நான் நடராஜ உருவத்தை ஏன் மாற்றினீர்கள் என்று கேட்டதற்கு இவ்வுருவம் அழகாக இருப்பதால் அவ்வாறுமாற்றிக் கொண்டதாக சொல்லப்பட்டது. என்ன விந்தை! இந்தக் குறைபாடு



களை ஒழிக்கவேண்டுமென்றால், நம்மதம் ஒழியவேண்டியதாகுமோ? நாம் வேண்டுவது சீர்திருத்தம். கோயிலைப்பற்றிப் பேசுகின்றவர்களில் எத்தனைபேர் கோயிலுக்குப் போகின்றார்கள். காஞ்சியில் தேரிழுக்க முடியாமற் பட்டபாட்டை பார்க்கவில்லையா? புத்தருக்குப் பின் தோன்றியவைதானே இத்தேர் விழா.

நம்மடங்களில் உள்ள தலைவர்கள் கலியாணமின்றி இருக்கவேண்டுமென்னும் கட்டுப்பாடு ஏன் இருக்கவேண்டும்? கடவுளைத் தொட்டுப் பூசைசெய்வதற்கு ஏற்ற கல்வியறிவும், ஒழுக்க உயர்வும் உள்ள ஒருவர் ஏன் மடத்தலைவராகக் கூடாது.

ஆதித்திராவிடர் முதலிய தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படும் வகுப்பாருடன் ஊடாடி உறவாடினால் அவர்களும் கூடியவரை திருந்தி நம்மைப்போலாகிவிடுவார்கள். இந்த 20-ம் நூற்றாண்டிலுங்கூட, சாதியொழியவேண்டுமென்னும் இக்காலத்திலுங்கூட, ஒரு வேளாளர் சாப்பிட்டுக்கொண்டிருப்பதை வேறொரு வேளாளர் பார்த்துவிட்டதை முன்னிட்டுப் பெரும் சச்சரவு ஏற்பட்டுவிட்டது. காரணம் என்னவென்றால் வழக்கம். இது ஒழியவேண்டும்; இல்லாவிட்டால் நம்நாடு சீரடையாது. எங்குபார்த்தாலும் வேற்றுமையே நிலவுகிறது. அத்வைதம் என்னும் சொல்லின் பொருட்சச்சரவால் நான்கு மதப்பிரிவுகள் உண்டாயின.

நிற்க, இராவணனுக்குப் பத்துத் தலைகளுண்டென்று திருநாவுக்கரசுநாயனார் பாடியிருக்கிறாரென்றால் அவர் வழக்குப்பற்றிக் கூறியதாகத்தான் கொள்ளவேண்டும். இராவணனுக்கு ஒருதலை ஐந்தாகவும் பின் பத்தாகவும் மாறியதாகச் சரித்திரங் கூறுகிறது.

இதன் உண்மை என்னவெனில்: சிம்மாதனத்தில் உட்கார்ந்தவுடன் இராவணனது ஒரு தலை அங்கமைக்கப்பட்ட கண்ணாடியில் பிரதிபிம்பித்து 10 தலைகளாகக் காண்பவர்களுக்குத் தோன்றும் என ஒருவர் கூறியுள்ளார். இதுபற்றித்தான் இராவணனுக்குப் பத்துத் தலைகளென வழங்கலாயிற்று.

முற்காலத்தில் பிறநாட்டனுபவம் நமக்குக் கிடைப்பதில்லை. ஆனால், இக்காலத்தில் உலக அனுபவங்கள் அனைத்தையும் அறிவதற்கு ஏற்ற வசதிகள் அமைக்கப்பெற்றிருக்கிறோம். அவற்றை ஏற்ற முறையிற் பயன்படுத்திக்கொண்டு நாம் சீர்திருத்த மடைவோமாக. எந்த நூலிலும் எந்த முறையிலும் குற்றமிருந்தால் அவற்றைக் களைதல் அவசியம். இவ்விஷயத்தில் அச்சமும் ஆசையும் அறவே அழியவேண்டும். நம்மதத்தைச் சீர்பெறச்செய்து அதன்படி நடந்தால்தான் நாமும் உலகில் மக்கள் எனும் பெயருடன் வாழமுடியும்.

## பொதுச் செய்திகள்

### கும்பகோணத்தில் பொதுக்கூட்டம்

---

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தருக்கு உபசரிப்பு.

இவ்வூர் பால்யநாடார்சங்கக்கட்டடத்தில் நகரமக்களின்பொதுக் கூட்டம் சென்னை திரு. பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களைக் கௌரவிக்க 24-4-29 மாலை 5-மணிக்குக் கூடியது. திரு. R. கந்தசாமி மூப்பனர் B. A. B. L. அவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் R. C. வெங்கட்டராமநாயுடு, A. குப்புசாமிபிள்ளை, முத்தய்யாமூப்பனர் ஆனரரி மாஜிஸ்டிரேட், மிராசுதார் M. கருப்பண்ணசாமிநாடார், அப்பாசாமிபிள்ளை, உபாத்தியாயர் வீராசாமிநாயுடு, மற்றும் சோழிய வேளாளர்சங்கம், நாயுடுசங்கம், நாடார்சங்கம், சன்மார்க்கசங்கம், மருத்துவர்சங்கம், முதலிய சங்கங்களின் பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள். திரு ஆனந்தருக்கும் மாலையிடப்பெற்றவுடன் அவைத்தலைவர் தமது முன்னுரையில் கும்பகோணவாசியும் தமது பால்ய நண்பருமான, பண்டிட் ஆனந்தம் அவர்கள் நீண்டகாலமாய்த் தேசம், மதம், பாஷை, குலம் முதலியவைகளுக்குச் செய்து வரும் சேவைகளை விளக்கி, தமிழ் சித்தவைத்தியத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரித்து அதற்கென கலாசாலை ஏற்படுத்தப்பெற்றவரையிலும் அதன்பின்னரும் அவர் செய்ததும் செய்துவருவதுமான வேலைகளைப் பாராட்டியும் மேற்படி வைத்தியத்தின் அபிவிர்த்தியின்பொருட்டு மருத்துவன் என்ற பத்திரிகை நடத்திவருவது, குல முன்னேற்றங்கோரி சென்னையில் தென்னிந்திய மருத்துவர் சங்கம் ஒன்று நிறுவி சென்ற சிலவருஷங்களாய்ச் சென்னையிலும் வெளியிலும் பல கிளைகள் ஏற்படுத்தப்பெற்று தொண்டாற்றிவருவது ஆகிய காரியங்கள் தமிழ்நாடு அறிந்தது என்றும், இத்தகைய தகுதிவாய்ந்த பொது நல உழைப்பாளர் ஒருவரை சென்னை கார்ப்பரேஷனில் அங்கத்தினராக நியமித்த முதல் மந்திரியார் டாக்டர் சுப்பாராயன் அவர்களைப் பாராட்டியும் பேசினர்கள். பின்னர்

திரு R. C. வெங்கட்டராமநாயுடு அவர்கள் "இக்கூட்டமானது பண்டித எஸ். எஸ். ஆனந்தரவர்கள் சென்னைக் கார்ப்பரேஷனில் நியமனம் செய்யப்பெற்றது குறித்து மகிழ்ச்சிப் பெருக்கடைவதோடு



இத்தகைய நியமனம் அளித்த டாக்டர் சுப்பாராயன் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறது" என்ற தீர்மானத்தைப் பிரரேபித்துச்சிறிதுநேரம் பேசினர். திரு. எம். குப்புசாமிபிள்ளை அவர்களாலும்,பண்டிட் K.S. பொன்னம்பலம் அவர்களாலும், முறையே ஆமோதித்தும் ஆதரிக்கப் பெற்றும் தீர்மானம் நிறைவேறியது. பிறகு திருவாளர்கள் கருப்பண்ணசாமி நாடார், N. வீராசாமிநாயுடு, M. ராமச்சந்திரன், தாமோதரனர், K. R. ராஜகோபால் முதலானவர்கள் சிறிதுநேரம்பேசி சொந்த ஹோதாவிலும் மேற்கூறிய சங்கங்களின் சார்பாகவும் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

நீண்ட கரகோஷத்தினிடையே பண்டித ஆனந்தம் அவர்கள் எழுந்து தமக்கு மரியாதைசெய்தவர்களுக்கு வந்தனம்செலுத்தி நாட்டிற்கும், சமூகத்திற்கும் தான் செய்யவேண்டிய கடமைகளுக்கு அதிகமாகத்தாம் ஒன்றும் செய்துவிடவில்லை என்றும் தம்மீது உள்ள அபிமானங் காரணத்தால் கூறப்பெற்ற புகழ் உரைகளுக்குத்தான் பாத்திரன் அல்லவென்றும் சுருக்கமாய்க்கூறினர். பிறகு அவைத்தலைவர் அவர்கள் முடிவுரையாகச் சில வார்த்தைகள் பேசியதும் R. C. வெங்கடராம நாயுடு அவர்களால் தலைவர் அவர்கட்கும் கூட்டத்தினருக்கும் வந்தனங்கூறப்பெற்று சந்தன தாம்பூலம் வழங்கியபின்னர் இரவு 9-30 மணிக்குக் கூட்டங்கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## பண்டிட்
## ஆனந்தம் அவர்கட்கு வாழ்த்து.

### சென்னை பொதுஜன மகிழ்ச்சிக் கூட்டம்.

### தலைவர்களின் புகழுரைகள்.

---

சென்னை, மேயீ 17ம் தேதி மாலை 5-30 மணிக்குச் சென்னை ஜார்ஜடவுன் திருமணம் அண்ணாமலை முதலியார் ஹாலில் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் சென்னை நகர பரிபாலன சபையில் அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டதுபற்றி, அவரை வாழ்த்தி மகிழ தென்னிந்திய மருத்துவர் சங்கம், வியாசர்பாடி ஆதித்திராவிட ஐக்கிய நாணய சங்கம், கணேசபுரம் கல்வி வளர்ச்சி சங்கம், வாலிபர் கால் பந்துச் சங்கம், சென்னை சிவனடியார் திருக்கூட்டம், ஆரிய சமாஜம் ஆகிய இவைகளின் சார்பாக ஒரு பொது ஜனக்கூட்டம்

நடைபெற்றது. பல பெண்மணிகளும் திரளான ஜனங்களும் ஹாலில் குழுமியிருந்தனர். அக்கூட்டத்திற்கு சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். திருவாளர்கள் திவான்பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியார், வித்வான் மணி திருநாவுக்கரசு முதலியார், ஜி. ரங்கையா நாயுடு, சுரேந்திரநாத் ஆரியா, ஜனகசங்கர கண்ணப்பர், வேங்கடேஸ்வரன் பி. ஏ. எல். டி., கே. வி. மேனன், ஜே. என். இராமநாதன், என். தண்டபாணி, பாலகுருசிவம், வித்துவான் முனுசாமிப் பிள்ளை முதலியோரும் இன்னும் பலரும் விஜயம் செய்திருந்தனர். தொடக்கத்தில் யாழ் இசைக்கப்பெற்றது.

தலைவர் கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் தமது முன்னுரையில் கூறியதாவது:—பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் சென்னை நகரபரிபாலன சபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டது பற்றி அவரை வாழ்த்த, நீங்கள் இங்கே கூடியிருக்கின்றீர்கள். பண்டிட் ஆனந்தம் அவர்கள் சித்த வைத்தியத்தில் மிகவும் ஊக்கமும் உழைப்பும் எடுத்துக் கொண்டவர் என்பதைத் தாங்களறிவீர்கள். பத்தாண்டுகளாக அவர் பொது ஜன சேவையில் ஈடுபட்டு உழைத்து வருகின்றவர். அவர் இலவச வைத்தியசாலை யொன்றும் அமைத்து நடத்திவருகின்றார். இவர் நகர பரிபாலன சபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டது பொருத்தமானதே. அப்பதவிக்குத் தகுதியும் வாய்ந்தவரே. அவரைப் பொது ஜனங்கள் நன்கு அறிவர். சர்க்கார் இவரை நியமித்தது மிகவும் பொருத்தமானதும் தகுதியுடையது மென்று கூறல் மிகையாகாது.

பின்பு தென்னிந்திய மருத்துவர் சங்கம், வியாசர்பாடி ஆதித் திராவிட ஐக்கிய நாணய சங்கம், கணேசபுரம் கல்வி வளர்ச்சி சங்கம், வாலிபர் கால் பந்துக் கூட்டம், சென்னை சிவனடியார் திருக்கூட்டம், ஆரிய சமாஜம் ஆகிய சங்கங்களின் சார்பாக வாழ்த்துப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன.

பச்சையப்பன் கல்லூரி தமிழாசிரியர் வித்துவான் மணி. திருநாவுக்கரசு முதலியார் கூறியதாவது:—இக்கூட்டம் மகிழ்ச்சிக் கூட்டமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆம். இது மகிழ்ச்சிக் கூட்டமே. நம்மவரில் ஒருவரான பண்டிட் ஆனந்தம் நகரபரிபாலன சபை அங்கத்தினர் பதவியேற்று நாம் மகிழ்ச்சி யடையும் வண்ணம் பணி



யாற்றி வருவாரென்ற மகிழ்ச்சியே. யான் திரு. ஆனந்தம் அவர்களைப் பன்னிரண்டு வருடங்களாக அறிவேன். எனது சகோதரர் போன்றவர். பல ஆண்டுகளாக அரும்பணிகள் பல ஆற்றி வருகின்றார். வைத்திய முறையில் அவர்சேவை மிகவும் பாராட்டத்தக்கது. கவனமாகவும் தூய்மையாகவும் மருந்துகளைக் கையாளுபவர். அவருக்குப்பொருள் மீது ஆசையில்லை. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்தெனும் நற்பண்பாளர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. "மருத்துவன்" என்னும் பத்திரிகையின் ஆசிரியராக விருந்து தமிழுலகிற்கு உதவிவருகின்றார். அனைவரும் கல்வி பயிற்சியடைய வேண்டுமென்ற அவா இவருக்குப் பெரிதும் உண்டு.

தென்னிந்திய மருத்துவ சங்கமென்ற சங்கத்தை முதன்முதல் ஆக்கியவரிவரே. இந்திய வைத்திய பாடசாலை அமைத்ததற்கு இவர் துணையாக விருந்தாரென்று சொல்லுதல் மிகையாகாது. இவர் தம் குலத்து மக்களிடத்து சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கிப்பாடு பட்டு வருகின்றார். உயிரையும் பொருட் படுத்தாது அவர் தாழ்த்தப் பட்ட வகுப்பு முன்னேற்றத்திற்கு உழைத்து வந்தவர். ஜனசமுதாய சீர்திருத்தத்தில் கவனம் செலுத்துவதில் முன்னிற்பவர். இவர் பட்ட பாட்டால்தான் மருத்துவ வகுப்பைச்சார்ந்த ஒருவர் சென்னை சட்ட சபை அங்கத்தினராக நியமிக்கபட்டார். இவரை சென்னைநகர சபை அங்கத்தினராக நியமித்ததுபற்றி நாம் நமது வந்தனையைச் சர்க்காருக்கு அளிப்போமாக. (கரகோஷம்) அடுத்த முறை சென்னை சட்ட சபையில் இவரை ஒரு அங்கத்தினராக சர்க்கார் நியமிப்பாரென்று நம்புவோமாக, (கரகோஷம்)

திருவாளர் சுரேந்திரநாத் ஆரியா தமது நகைச்சுவை ததும்பிய உரையில், பண்டிட் ஆனந்தம் போன்றவர்கட்கு இத்தகைய பதவிகள் சர்க்கார் அளித்து வருவது, எல்லா வகுப்புகளும் முன்னேறவேண்டுமென்ற அரிய நோக்கத்தைக் கொண்ட பார்ப்பனரல்லாதார் இயக்கம் துவக்கிய பிறகே (கரகோஷம்) யென்றும், பண்டிதர். ஆனந்தம் அவர்கள் ஏழைமக்கட்கு உழைக்கவேண்டுமென்ற அவாமிகப் பெரிதும் உடையவரென்றும், தைரியசாலியென்றம், அழகுடையவரென்றும், (கரகோஷம்) கூறினர்.

பின்னர் திராவிடன் ஆசிரியர் திரு. ஜனகசங்கர கண்ணப்பர் பேசுகையில் கூறியதாவது:—பண்டிட் ஆனந்தம் அவர்கள் நகரபரிபாலன

சபை அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டதைப்பற்றி யான்மகிழ்ச்சி யடைகின்றேன்; அவரை யான் பத்தாண்டுகளுக்கு முன்னரே அறிவேன். நான் அவருடன் நெருங்கிப்பழகியதில் அவர் நற்குணம் வாய்ந்தவரென்றும், பொறுமை யுடையவரென்றும் அறிந்தேன். தென்னிந்திய மருத்துவத்திற்கு மிகப் பாடுபட்டவர். ஆங்கில வைத்தியர்கள் சித்த வைத்தியம் கேடுகெட்டதென்று கூறியகாலத்தே அவ்வெண்ணங்களை மறுக்கவும் கண்டிக்கவும் முன்வந்தவர் இவரே. இவரது முயற்சியே இந்திய மருத்துவப்பாடசாலையமைப்பதில் பக்க பலமாக விருந்தது. மருத்துவகுலப் பெண்களுக்கு இவர்பாடுபடுவாரென்று எண்ணுகின்றேன். இதுபோது மருத்துவக் குலப்பெண்கள் மருத்துவச்சிகளாக சீவிக்கமுடியாது கஷ்டப்பட்டு வருகின்றனர். அக்குலப்பெண்களை ஆங்கிலமுறையில் மருத்துவச்சிகளாகப் பயிற்றுவித்து, அவர்கள் நன்மைக்கு உழைக்கவேண்டும். முடிவாக, யான் அவர் பொதுவாக இந்திய மக்கட்கும் சிறப்பாகத் தமது குலமக்கட்கும் உழைப்பாரென்று நம்புகின்றேன்.

திவான்பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியார் பேசுகையில், பண்டிட் ஆனந்தம் எல்லா வகுப்பு மக்களுக்கும் சேவை புரிவாரென்று தாம் நம்புவதாகக் கூறினர்.

திரு. எம். எஸ். கோடீஸ்வரன் பி. ஏ. எல். டி., பின்வரும் தீர்மானங்களைப் பிரேரேபணை செய்தார்:—

(அ) பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை நகர பரிபாலன சபை அங்கத்தினராக நியமித்ததற்காக, மேற்கூறிய சங்கங்களின் அங்கத்தினர்கள் சென்னை அரசாங்கத்திற்கு மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகின்றனர்.

(ஆ) மருத்துவ குலத்தினர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களது நன்மைகளைப் பாதுகாக்க சட்டசபையில் பண்டிட் ஆனந்தம் அவர்களின் இருப்பு இன்றியமையாததாகையால் அவரைச் சென்னை சட்டசபை அங்கத்தினராக நியமிக்கும்படி சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

திரு. ஜே. என். ராமநாதன் தீர்மானங்களை ஆமோதித்துப் பேசினர்.



பின்னர் திருவாளர்கள் என். தண்டபாணிபிள்ளை, பாலகுரு சிவம், பண்டிதர் முனுசாமி பிள்ளை ஆகிய இவர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

### எஸ். எஸ். ஆனந்தம்

பண்டிட் ஆனந்தம் பதிலளிக்கையில், பேசியதாவது:—யான் செய்த சிறிய வேலையை என்பாலிருக்கும் அபிமானத்தால் எனது நண்பர்கள் பெருக்கிப் பேசினர். எல்லோரும் என்னைப் புகழ்ந்தது என்மீது ஒரு பெரும்பாரத்தை வைத்தாற் போலிருக்கிறது. பார்பனரல்லாதாரின் தலைவரான மந்திரி கனம் எஸ். முத்தையாமுதலியார் அவர்கள் இக்கோடைகாலத்தில் அதிக சிரமத்துடன் நீலகிரியைவிட்டு இங்கு விஜயம்செய்ததற்காக யான் அவருக்கு வந்தனைகூறுகின்றேன்.

நகரபரிபாலனமானது லார்டு ரிப்பன் அவர்களால் அளிக்கப்பட்ட சிறிய சுய ஆட்சியாகும். யான் நகர பரிபாலனத்தை (முனிசிபாலிட்டி)ப்பற்றி ஒரு பத்திரிகை வேண்டுமென்று நினைக்கின்றேன். நமது ஜனங்கள் முனிசிபாலிட்டியைப்பற்றியும், சுகாதாரத்தைப் பற்றியும் ஒரு சிறிதும் அறியாமலும் பொருட்படுத்தாமலும் இருக்கின்றனர். எனக்கு அளிக்கப்பட்ட பதவி மிகவும் பொறுப்பானது. நமது அவைத் தலைவர் சுகாதார இலாக்கா தலைவராக விருக்கிறபடியால், அவர் காலத்திலேயே சுகாதாரப் புத்தகங்களைப் பாடசாலைகளில் வைக்கும்படி ஏற்பாடுசெய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### முடிவுரை

கனம் மந்திரி தமது முடிவுரையில், பேசியதாவது:—சீமாட்டிகளே! சீமான்களே! நீங்களனைவரும் உவப்புக் கொண்டாடினீர்கள். யானும் அதில் சேர்ந்து கொள்கின்றேன். பண்டிட் ஆனந்தம் அவர்கள் தமது கடமைகளைச் செம்மையாகச் செய்வாரென்று நம்புகின்றேன். இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை அளிப்பானாக. யான் உங்கள் அனைவருக்கும் வந்தனமளிப்பதோடு பண்டிட் ஆனந்தமவர்களுக்கும் எனது வாழ்த்தையும் கூறுகின்றேன்.

வந்தனை கூற கூட்டம் கலைந்தது.

சென்னைத் தமிழ் வைத்தியசாலைத் தலைவரும்,
தென் இந்திய மருத்துவர் சங்கத் தலைவரும்,
மருத்துவன் பத்திராதிபரும்,
சென்னை நகர பரிபாலன சபை அங்கத்தினருமாகிய
மருத்துவ ஞாயிறு

# பண்டிட் ஆனந்தம் அவர்கட்கு

## தென் இந்திய மருத்துவர் சங்கத்தார் அளித்த மகிழ்ச்சிப் பத்திரம்.

### பிறர் நலம் கருதும் பேரறிவாளரே!

உலவும் கோயிலாம் மக்கள் யாக்கையில் உறும்பிணியை ஒழித்து அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதே உறுதி எனக்கொண்டு அவ்வழியில் தாங்கள் இரவும் பகலும் ஓயாது உழைத்து வருகின்றீர்கள். அவ்வகையில் தாங்கள் பரம ஏழை என்றும், பணக்காரரென்றும் பகுத்துணராது, எல்லோருக்கும் எக்காலத்தும் ஒரேவித அன்புடன் உதவி வருவது என்றும் மறக்கத்தக்கதன்று. நோயினால் ஏக்கமுறும் எளியமக்கட்குத் தாங்கள் காட்டும் அன்பு அளவிலடங்காது. தங்கள் வைத்தியசாலைக்கு வரவியலாது நோயினால் துன்புறும் ஏழைமக்களின் இல்லத்திற்கு ஏற்றகாலத்திற்சென்று அவர்கட்கு ஏற்றபடி தாங்கள் சலியா மனத்துடன் உதவிவருவதை நாங்கள் அறிந்தே இருக்கின்றோம். இத்தகைய பெருங்கருணைவாய்ந்த தங்களுடைய நற்செய்கையை உணர்ந்து அரசாங்கத்தார் தங்களைச் சென்னை நகர பரிபாலன சபையில் ஓர் அங்கத்தினராக அமைந்தமை கேட்டு நாங்கள் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றோம். அதுபற்றி நாங்கள் சென்னை அரசாங்கத்தாருக்கு எங்கள் நன்றியறிதலை இதன் மூலம் வெளிப்படுத்துகின்றோம்.

### சித்த வைத்திய சிரோமணியே!

23-12-1915 ஆம் ஆண்டு தொண்டைமண்டலம் உயர்தரப்பாடசாலையில் சர். பி. தியாகராயர் அவர்களின் தலைமையில் மருத்துவப் புலமை மிக்க பண்டிதர் பலரின் பெருமகிழ்ச்சிக்கிடையில் மருத்துவ சங்கம் ஒன்றை நிலை நாட்டி அதை அரசாங்கத்தில் பதிவும் செய்து நடத்திவந்தீர்கள். 11-2-21 ஆம் ஆண்டில் கவர்ன்மெண்டார் வெளியிட்ட இந்திய வைத்தியத்திற்குக்கேடு சூழத்தகுந்த டாக்டர் கோமன் அவர்களின் அறிவிப்பை ஆங்காங்குப் பலப்பல கூட்டங்கள் கூட்டிக்



கண்டித்து இந்திய வைத்தியத்திற்கு நலம்பல செய்தீர்கள். 21-10-23 ஆம் ஆண்டில் சென்னைச் சவுந்தரமாலில் சர். பி. தியாகராயர் அவர்களின் தலைமையில், தாங்கள் வரவேற்புக்கழகத் தலைவராயிருந்து தென் இந்திய மருத்துவர் முதல் மகா நாட்டை மருத்துவ சமூகத்தினருக்கும், தமிழ் நாட்டு மருத்துவத்திற்கும், சீரும், சிறப்பும், பேரும், பெருமையும் பெருகுமாறு நடத்திவைத்தீர்கள். 1-7-24 ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் ஆயுர்வேதம், யூனானி ஆகிய இரண்டு வைத்திய முறைகளுக்கும் ஆதரவளித்து அம்முறைகளைக்கற்க விரும்புவோர்க்குக் கலாசாலை ஒன்றேற்படுத்த முன்வந்தபோது தாங்கள் எவருடைய இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் எதிர்பாராது பெருமுயற்சி செய்து அக்கலாசாலையில் அரசாங்கத்தார் தமிழ் சித்த வைத்திய முறையைக்கற்பித்து, தமிழ்மருத்துவசாலையும் வைத்து நடத்துமாறு செய்திருக்கின்றீர்கள். இன்னும் தாங்கள் சித்த வைத்திய முன்னேற்றத்திற்காகப் பலவிதப் பெரு முயற்சியும் செய்திருக்கின்றீர்கள் என்பதை எல்லோரும் அறிவர்.

### சுற்றந்தழுவும் சொல்லரும் குணத்தோய்!

மருத்துவகுலத்திற் பிறந்த மக்களனைவரும் கல்வியில் முன்னேற்றமடைந்தால் மற்றெவ்வகையிலும் முன்னேற்றமடைவார்களெனக் கருதி அதற்கெனத் தாங்கள் தென்னிந்திய மருத்துவர் தலைசங்கத்தைச் சென்னையிலும், கிளைச்சங்கங்கள் பலவற்றை மருத்துவர்கள் நிறைந்துள்ள பலநாடுகளிலும், நகரங்களிலும் நிறுவியிருக்கின்றீர்கள். இச்செய்கையினால் மருத்துவமக்கள் அடைந்தநன்மை பலப்பலவாம். இந்தியாவின் தாழ்ந்த பாகமாகிய திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள உயர்வகுப்பாரென்போர் சிலர், சுடலையில் வரும் மற்ற வகுப்பாரின் பிணங்களைச் சுடுவோர் தங்கள் பிணங்களையும் சுடுவது தங்கள் ஆசாரத்திற்குக் குறைவெனக்கருதி மருத்துவ மக்களில் ஏழைகளாயுள்ள ஒரு வகுப்பினரை வற்புறுத்தித் தங்கள் பிணங்களைச் சுடுமாறு செய்து வந்தனர். அரும்பாடுபட்டுத் தாங்கள் அவ்வழக்கத்தை யொழித்து அம்மக்களுக்கிடையில் சுயமரியாதையை நிலைநாட்டினீர்கள். 25-5-24 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் ஜில்லா திருவிடைமருதூரிலுள்ள மருத்துவ குலத்தினரில் ஒருபிரிவினராகிய ஏழைமக்களுக்கு அங்குள்ள உயர்வகுப்பார் என்பாரால் ஏற்பட்டக் கொடுந்துன்பத்தையும் ஆபத்தையும் தாங்கள் நீக்குவதற்காக அவ்வூருக்குப் போனீர்கள். அப்போது நம் ஏழை மக்களுக்காகத் தாங்கள் திருவிடைமருதூரில் கொலை பாதகர்களால் அடைந்த துன்பத்தை எண்ணுந்தோறும் எங்கள் மனம் குழம்புகின்றது. அன்று தங்கள் உயிரையும் உடலையும் காப்பாற்றிய இறைவனருள் தங்கள் பால் என்றும் நிலைத்திருக்கக்

கோருகின்றோம். 28, 29-3-25 ஆம் ஆண்டில் மதுரைமாநகரில் மருத்துவர் இரண்டாவது மகா நாட்டைப் பெருமைபெற நடத்திவைத்த தங்கள் திறமை எந்நாளும் எங்கள் மனதை விட்டகலாது. 1-4-23 ஆம் ஆண்டு தாங்கள் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலுள்ள தாயுமானவர் ஆலயத்திற்கு அங்குள்ள இந்துக்களாயுள்ள மருத்துவமக்களில் ஒருபகுதியினரையும் ஆலயப்பிரவேசம் செய்வதற்காக அழைத்துச் சென்றீர்கள். ஆலய அதிகாரிகள் அவர்களை உட்செல்லாவாறு தடுத்து, தங்களுக்குமட்டும் உட்செல்ல அனுமதி அளித்தபோது 'இந்துக்களெல்லோரும் ஆலயத்துள் செல்லுங்காலம் வரும்போதன்றி இதுபோது நான் ஆலயத்துட் செல்லேன்' என்று கூறிவந்த தங்கள் வீரவார்த்தை இன்னும் எங்கள் மனத்தில் ஊடுருவி நிற்கின்றது.

### கற்றவர் புகழும் கண்ணியப் பெரியோய்!

இந்தியமக்கள் பலவீனர்களாயிருப்பதற்குப் பாலிய விவாகமே முதற்காரணம் என்பதை உணர்ந்து, அதற்காக அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள இணக்கவயது சபையாரின் கேள்விகளுக்குத் தென்இந்திய மருத்துவர் சங்கத்தின் சார்பாக தாங்கள் அளித்த அறிவு நிரம்பிய பதில்களிலிருந்து தங்களுடைய உலக அறிவு உயர்ந்து நிற்கின்றதென்பதை நாங்கள் உணர்கின்றோம். இதனால் தாங்கள் "மருத்துவ மக்களின் நலத்தோடு பொது மக்களின் நலத்தையும் கருதுவது பேரற" மெனக்கொண்டிருக்கிறீர்களென்பது எங்களுக்குப் புலனாகின்றது.

### துன்பப் படுவோர்க்கிரங்கும் தூயமனத்தோய்!

சென்னையில் விஜயஞ்செய்திருந்த இந்திய அரசியல் மகா யின் தலைவராகிய ஸர் ஜான் சைமன் அவர்களின் முன்சென்று தாங்கள் மருத்துவமக்களின் குறைகளைக் கூறியதோடு அமையாது, பொதுவாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருடைய குறைகளையுங்கூறி அக்குறைகள் கனம் சைமன் அவர்களின் மனத்தில் பதியும்படிசெய்த தங்கள் பெருமுயற்சி எந்நாளும் போற்றத்தகுந்ததேயாம். இதனால் தாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடத்தில் கொண்டுள்ள பெருங்கருணை விளக்கமுறுகின்றது. இத்தகைய பெரும்பணிகளை ஆற்றிவரும் தங்கள் புகழ் என்றும் நிலைப்பதாக. பொதுஜன சேவையிற் குன்றா ஊக்கமுள்ள தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நிறைந்த ஆயுள், நிறைந்த தேகபலம், நிறைந்த மனோசக்தி முதலியவைகளை அருளுவானாக.

இங்ஙனம்

தங்கள்பால் என்றும் நிலைத்த அன்புள்ள
தென் இந்திய மருத்துவர் சங்கத்தார்.

சென்னைத் தமிழ் வைத்தியசாலை அதிபரும்
தென் இந்திய மருத்துவர் சங்கத்தலைவரும்
மருத்துவன் பத்திராசிரியரும்
சென்னை நகர்காப்புக்கழக அங்கத்தினரும் ஆகிய
மருத்துவ பானு

# பண்டிட் ஆனந்தம் அவர்களுக்குக்

கூறும்

# உவகை உரை.

மருத்துவ சிரோமணியே!

கைம்மாறு கருதாது பொழியும் மழைபோல் ஏழையேமாகிய எங்கட்கு அன்னையென இரங்கி, அமிழ்தனைய மருந்தளித்துப் பிணி நீக்கி வாழ்விக்கும் தாங்கள் இப்பொழுது சென்னை நகர்காப்புக்கழக அங்கத்தினராகத் தகுதி அறிந்த அரசாங்கத்தினரால் நியமனம் செய்யப்பட்டமைக்கு நாங்கள் கழிபேருவகை எய்துகின்றோம்.

அண்ணலே!

உடற்பிணி நீக்குவதொன்றோ? தாங்கள் வியாசர்பாடியிலே உள்ள எங்கள் குடில்கடோறும் வேற்றுமை நோக்காது அன்புடன் நுழைந்து தேனினும் இனிய சொற்களால் உள்ளப்பிணியாகிய அறியாமையை ஒழிக்கப் பெரிதும் முயன்று சுகாதாரம், தருமம், சமயம், நாகரீகம் முதலிய அரும்பொருள்களைப்பற்றி அவ்வப்போது புரிந்த விரிவுரைக்கு என்றும் மறவா நன்றி பாராட்டும் கடப்பாடுடையோம்.

பத்திராசிரிய!

கல்வியே மக்கட்குக் கண் என்றும், அக்கல்விக்கொடையே எல்லாக் கொடையினுஞ் சிறந்தது என்றும் தாங்கள் கொண்ட கொள்கைகட்கு இணங்க எந்தமக்குக் கல்வியைப் புகட்ட நல்லாசிரியன், சுதேசமித்திரன், திராவிடன், குடி அரசு, மருத்துவன் முதலான பத்திரிகைகளை எங்கட்கு உதவிவரும் தங்களை எங்கட்கு ஆசிரியர் என்று வாயாரப் புகழ்ந்து மகிழ்கின்றோம்.

அன்புடைத் தோன்றலே!

உடற்பிணி ஒழித்து உடம்பைப் பேணுதலில் தாயாய், கல்வி புகட்டுதலில் தந்தையாய், அறிவு கொளுத்துவதில் ஆசிரியப் பெருந்

தகையாய் எங்கட்கு விளங்கும் தங்களுக்கு அரசாங்கத்தார் நகர்காப்புக் கழக அங்கத்தினர் பதவியைத் தெரிந்தளித்தது போன்றே சென்னைச் சட்டசபை அங்கத்தினர் பதவியையும் ஏழைபங்காளராகிய தங்கட்கு விரைவில் அளிக்க யாம் களிதுளும்பும்காலத்தை எதிர்நோக்குகின்றோம்.

பொது நலம் விழையும் புனித!

தங்கள் பொன்மேனி நோயின்றித் திண்மையைத் திகழ்க; தங்கள் வாழ்நாள் பல்லூழி ஓங்குக; தங்கள் நல்லறம் மேன்மேலும் பெருகுக; தங்கள் குடும்பம் வழிவழிச் சிறக்க; தங்கள் விருப்பம் நிறைவேறுக! என்று நெஞ்சார இறைவனை நினைந்து வாயார வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்:

தங்கள்பால் என்றும் மறவா நன்றியுடைய

ஆதிதிராவிட ஐக்கிய நாணய சங்கத்தினோம்,

வியாசர்பாடி சென்னை.

கல்வி வளர்ச்சி சங்கம்,

கணேசபுரம் சென்னை.

வாலிபர் கால் பந்துக் கூட்டத்தார்,

(YOUNG MEN'S FOOTBALL CLUB,)

**Magzain line,**

பின்னர் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினராலும், ஆரிய சமாஜத்தினராலும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

## ஓர் வேண்டுகோள்

☞ பத்திராதிபர் உடல் நலம் இல்லாதிருந்தமையால் சென்ற மாத மருத்துவன் சஞ்சிகை வெளிவராததைப்பற்றி வாசகர்கள் அன்புகூர்ந்து மன்னிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம். சென்ற மே-ஜூன் (௮-௯)இதழ் இரண்டையும் ஒன்றாக வெளியிட்டிருக்கின்றோம்.

மானேஜர்.



ஈ. வெ. இராமசாமிப் பெரியார், மணமகன், மணமகள், மணி-திருநாவுக்கரசு, மோகன் பிரதர்ஸ்.
சரவணன், பண்டிட் ஆனந்தம், குருசாமி, G. ரத்தினம், S. வீராசாமி, மகன்மார்கள்

# சுயமரியாதைத் திருமணம்

(சமதர் நிருபர்)

சைதாப்பேட்டை மர வியாபாரம் திருவாளர். எம். சரவணன் அவர்கள் குமாரர் திரு.செகநாதத்திற்கும், கும்பகோணம்-திருவாளர் மருத்துவ சிரோமணி பொன்னம்பல பண்டிதர் குமாரத்தி திருமதி காந்திமதிக்கும், 20-ந்தேதி காலை $5\frac{1}{2}$-மணிக்கு சைதாப்பேட்டையில் மணமகன் வீட்டில் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடந்தேறியது. அநேக பெரியார்கள் கூடி இருந்தார்கள். திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமிப்பெரியார், மணி. திருநாவுக்கரசு முதலியார், பண்டித எஸ். எஸ். ஆனந்தம், எஸ். குருசாமியார், காளியப்பன், ஆரிய சமாஜ போதகர் ஸ்ரீ வெங்கடேசுவரா, ஜி. இரத்தினம்பிள்ளை பி. ஏ. எல். டி., முதலிய அநேகர் சென்னையிலிருந்து வந்திருந்தார்கள். சரியாக 5.45-க்கு. மணமக்களைக் கல்யாண மண்டபத்திற்கு அழைத்துவந்து உட்காரவைத்ததும் திரு. ராமசாமிப்பெரியார் அவர்களால் மணமக்களின் பெற்றோர் சம்மதத்தைச் சபையோருக்குத்தெரிவித்தபின் மணமகன் மணமகளைத் தன்வாழ்க்கைத் துணைநலமாகக் கொண்டதையும், மணமகள் மணமகனைத் தன் வாழ்க்கைத் துணைநலமாகக் கொண்டதையும் ஒருவருக்கொருவர் சபையின்முன் சொல்லியபிறகு மாங்கல்யத்தை மணமகனிடம்கொடுத்து மணமகளுக்கு அணியச்செய்தார். பிறகு இருவரும் மாலைமாற்றிக்கொண்டதும் திருவாளர்கள் மணி. திருநாவுக்கரசு, எஸ்.குருசாமி, வெங்கடேசுவரா, ஜி.ரத்தினம்பிள்ளைபி.ஏ. எல். டி., பண்டிட் ஆனந்தம், மோகன் பிரதர்ஸ் ஆகிய கனவான்கள் திருமணமுறையை ஆதரித்தும், மணமக்களை ஆசீர்வதித்தும், உபந்நியாசம் செய்தார்கள். பிறகு மணமக்கள் புகைப்படமெடுக்கப்பட்டதுடன் வந்திருந்தவர்கள் எல்லோரும் காலை சிற்றுண்டி அருந்தி சென்னைக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

அன்று மாலை சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மனும் மற்ற கவுன்சிலர்களில் பலரும் மற்ற அன்பர்கள்பலரும் சென்னையிலிருந்து பலரும் பெருங்கூட்டமாகக் குழுமி இருந்தார்கள். தமிழ்ப்புலவர் சிவ. முத்துக்குமாரசாமி அவர்கள், தமிழ்ப்புலவர் பா. கண்ணப்பர் அவர்கள், தமிழ்ப்புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் முதலியவர்கள் சுயமரியாதைத் திருமணத்தைப்பற்றி விரிவுரைசெய்தார்கள். சென்னை தமிழ்மாதர் கழகக் காரியதரிசி பண்டிதை திரு. நாராயணி அம்மாள் பெண்களின் சார்பாக அத்திருமணத்தைப்பற்றி புகழ்ந்து கூறினர்

கள். பிறகு பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஒரே இரத்தக்கலப்புள்ளவர்களிலும், தமது குலத்தினரிலும், அவரவர்கள்வசிக்கும் ஜில்லாக்களிலுமே மணமுடிப்பதென்பது மிக அறியாமை என்றும், ஆறுகளுக்கு பாலங் கட்டுவதற்கு முன்னும், ரயில் ஏற்படாததற்கு முன்னும், ஆற்றுக்கு அப்பால் கொடுத்த பெண் ஆபத்துக் குதவாதென்று மக்கள் பயந்தார்களென்றும், இந்த காலத்தில் ஐந்து கண்டங்களும் ஒரேநாடாக இணைக்கப்பட்டிருப்பதாலும், மக்களுக்குள் ஏற்பட்டுள்ள சாதிமத வேற்றுமைகளையும், பகைகளையும் வேரோடு ஒழித்து பரஸ்பர அன்பைவளர்த்து சமத்துவம் நிலைபெறவேண்டியது இன்றியமையாததாலும், தமிழர் பலயீனம் ஒழிந்து பலவான்களாக வேண்டியது அவசியமாதலாலும், இம்மாதிரி சுயமரியாதைத்திருமணங்களே இனி நடைபெறவேண்டியது என்பதைப்பற்றியும், தமது கால்வழியிலேயே, குலத்திலேயே கொள்ளல், கொடுத்தல் என்பதை அறவே நீக்கவேண்டுமென்பதைபற்றியும், ஆங்கிலம் படித்து சர்க்கார் உத்தியோகம் செய்கிறவர்கட்கே பெண் கொடுப்பதென்றும் தப்பெண்ணத்தைவிட்டு உழவு, கைத்தொழில், வாணிபம் முதலிய தொழில்களை நன்கு செய்வோர்களே உலகிற்கு நன்மை செய்கிறவர்களாதலாலும், அவர்களாலேயே நமது நாடு சுயமரியாதையை அடையவேண்டுமாதலாலும் அவர்களை நாம் அவமதிக்கக் கூடாதென்றும், நடுவில் வந்து சேர்ந்து நமது நாட்டை அடிமைப்படுத்திய சாதிவேற்றுமைகளை ஒழித்து தமிழர்கள் என்ற ஒரே வகுப்பினராதல் வேண்டுமெனவும், அதற்கு கலப்பு மணங்கள் அவசியமென்றும், பல விஷயங்களைப்பற்றி மிக ஆர்வத்தோடு விரிவுரைசெய்து, இன்று காலை மணவினை நடைபெற்றதுமுதல் இதுவரையில் வந்து மணவினையைச் சிறப்பித்தவர்களுக்கும் உபந்நியாசகர்கட்கும் வந்தனங் கூறினார்.

அக்கூட்டத்தில் மணமகனையும் மணமகளையும் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து வந்திருந்தோர்களுக்கெல்லாம் அறிமுகம் செய்யப்பட்டு வாழ்த்து கூறப்பட்டது.

இத்திருமணத்தில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒரு வேற்றுமையுமின்றி இரவு 10-மணிவரை அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது.

மறுநாள் தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் சார்பில் பண்டிட் ஆனந்தம் அவர்கள் இல்லத்தில் மணமகன் மணமகள் இருவருக்கும் அவர்களைச் சார்ந்தவர்கட்கும் அன்பு விருந்து நடைபெற்றது. அன்று பண்டிட் ஆனந்தம் அவர்கள் பண்டைக்கால மருத்துவர்களின் யோக்கியதை பொதுஜன தொண்டு, மருத்துவம், மருத்துவப் பெண்களின் நிலை முதலியவைகளைப்பற்றி வந்திருந்தோர்களுக்கு இரண்டுமணிநேரம் விரிவுரை செய்தார்.



---

# மதிப்புரை

## வைத்தியக் களஞ்சியம்

வைத்தியக் களஞ்சியம் எனும் ஓர் மாத வெளியீடு வரப்பெற்றோம். நாற்பது பக்கங்களுடன் நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சியற்றப்பெற்று யாழ்ப்பாணம் சுன்னாகம், ஏழாலை, ஐ. பொன்னையா வைத்தியர் அவர்களால் வெளியிடப்படுகிறது. இதுவரை பலர் வெகு ஆவலோடு எதிர்ப்பார்த்திருந்த 'பரராசசேகரம்' எனும் அரிய நூலை இதன் வாயிலாக பதிப்பாசிரியர் பொதுநலங்கருதி வெளியிடுகிறார். இந்நூல் பல சித்த மருத்துவ முறைகளை இனிய செந்தமிழ் பாக்களால் கொண்டது. வைத்திய சாஸ்திரம் முதலிய பல நூல்கள் சிற்சில இடங்களில் இருப்பதாகக் கேள்வியுறுகின்றோமெனினும் அவற்றையும் இவ்வாறு வெளியிட்டால் நாட்டிற்குப் பெரிதும் பயனுண்டாம்.

இதன் ஆண்டு சந்தா ரூபா 4

வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஐ. பொன்னையா வைத்தியர்**
ஏழாலை, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

---

## நமது மகிழ்ச்சி

தமிழ்நாட்டு மருத்துவ வகுப்பினரில் தஞ்சைஜில்லா திருத்துறைப்பூண்டி எம். சுவாமிநாதன் அவர்கள் B. A. L. T., பரிட்சையிலும், திருநெல்வேலி டவுன் T. கணபதிசுந்தரம் அவர்கள் B. A. பரிட்சையிலும் தேர்ந்ததைப்பற்றி பெரிதும் மகிழ்கின்றோம். இவர்கள் உயர்பதவிகளை வகித்து தமது குலத்தின் முன்னேற்றத்திற்கு உழைப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

## மருத்துவர்களுக்கோர் அறிவிப்பு

சென்ற பங்குனித்திங்கள் 17-ம் தேதி மதுரைக்கடுத்த மாடக்குளம் கிராமம் நீ. கருப்பண்ணவைத்தியர் அவர்கள் காலஞ்சென்றார். அதன் பனிரண்டாம்நாள் உத்தரகிரியை நடத்தப்பட்டது. பல ஊர்களிலிருந்து அநேக மருத்துவர்கள் அங்கு வந்திருந்தனர்.

ஷை காரியம் நடந்தேறியதின் பின்னர், மதுரை V. S. சண்முகானந்தம் அவர்கள் "கலியாணம், உத்தரகிரியை" முதலிய எவ்வித நன்மை தீமைகளிலும் பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்தல், மூட பழக்க வழக்கங்களை நீக்கி, நாகரீகமுறையை அனுசரித்தல்; சிறுவர், சிறுமிகளை அவசியம் உயர்தரக் கல்வியில் பயிற்சித்தல்; விதவா விவாகத்தை ஆதரித்தல்முதலிய விஷயங்களைப்பற்றி மிக விரிவாகப் பேசினார்கள்.

---

## புத்தகம் இனாம்.

மருத்துவர்க்கோர் அறிக்கை: என்ற புத்தகம் வேண்டுவோர் செலவண்ணியில் V. S. ஷண்முகானந்தம் தமிழ் வைத்தியசாலை 30-மாகாளிப்பட்டிரோடு மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

V. S. சண்முகானந்தம்

மதுரை.

## மருத்துவனுக்கு நன்கொடை அளித்த அன்பர்கள்

(198-ம் பக்கத்தொடர்ச்சி.)

| | | | | |
|---|---|---|---|---|
| திரு - | K. ஈனமுத்துபண்டிதர் கொழும்பு. | 10 | 0 | 0 |
| ,, | V. கணபதி அவர்கள் மருதனை, கொழும்பு. | 10 | 0 | 0 |
| ,, | S. சிவராமபண்டிதர் பத்தமடை திருநெல்வேலி. | 10 | 0 | 0 |
| ,, | A. பரிமணம் பண்டிதர் கோலாலம்பூர் ரூபா | 8 | 8 | 0 |
| ,, | G. துரைசாமி அவர்கள், குற்றாலம் | 5 | 0 | 0 |
| ,, | K. இரத்தினவைத்தியர், சிங்கப்பூர் | 5 | 0 | 0 |
| ,, | G. இரத்தினம்பிள்ளை B.A.L.T., சைதாப்பேட்டை | 5 | 0 | 0 |
| ,, | T. K. பரதேசி அவர்கள், மொரட்டுவா | 3 | 0 | 0 |
| ,, | K. S. பழனி அவர்கள் கொட்டஹினு, சிலோன். | 2 | 0 | 0 |
| ,, | புலியூர் குறிச்சி P. P. பகவதிபண்டிதர் (தாயார் இறந்த கருமாதிக்காக நன்கொடை) | 1 | 0 | 0 |



| | | | | |
|---|---|---|---|---|
| திரு - | சேரமாதேவி சுந்தரம்பண்டிதர் குமாரர் முத்துசாமி (திருமணகாலத்து நன்கொடை) | 1 | 0 | 0 |
| ,, | சரவணபிள்ளை சைதாப்பேட்டை | 1 | 0 | 0 |

## மருத்துவனின் அன்பர்கள்

திரு - G. இரத்தினம்பிள்ளை சைதாப்பேட்டை, B. A. L. T.,
,, E. ஈனமுத்துபண்டிதர் பொட்டல்புதூர், திருநெல்வேலிஜில்லா.
,, P. பலவேசம்பண்டிதர் புதுப்பேட்டை, திருநெல்வேலிஜில்லா.
,, N. சுப்பிரமணியம்பண்டிதர் நுவரலியா, சிலோன்.
,, T. சாமிபண்டிதர் அவிஸாவளை, சிலோன்.
,, S. சுடலைமுத்துபண்டிதர் அல்லைபோஸ்டு, சிலோன்.
,, P. சண்முகவேலுபண்டிதர் வத்தகாமம், சிலோன்.
,, S. A. சுப்பையபண்டிதர் கடவட்டை, சிலோன்.
,, S. இயக்கிமுத்துபண்டிதர் செங்கலக்குறிச்சி, திருநெல்வேலி.
,, சேவிபண்டிதர் திருமங்கலம், திருச்சி.
,, பெரியசாமிபண்டிதர் சென்னக்கரை, திருச்சி.
,, சின்ன அய்யன்பண்டிதர், கோலாலம்பூர்.
,, M. R. வடிவேலுபிள்ளை குர்ணுக்கல், சிலோன்.
,, N. சங்கரலிங்கம்பண்டிதர் மஸ்கெலியா, சிலோன்.
,, S. வெங்குபண்டிதர் குறிச்சி, திருநெல்வேலிஜில்லா.
,, V. பிரமநாயகம்பிள்ளை எகிலியகொடா, சிலோன்.
,, S. முத்தையாபண்டிதர் நாகசேனை, சிலோன்.
,, R. S. பிச்சையாபண்டிதர் பேட்டை, கொழும்பு.
,, R. பொன்னையாபண்டிதர் நமுனுகொல்லை, சிலோன்.
,, G. முத்துராக்குபண்டிதர் கோலகங்சார், பினாங்கு.
,, P. சுடலைமுத்துவைத்தியர் சாத்தான்குளம், திருநெல்வேலி.
,, R. இரத்தினம்பண்டிதர் பூக்குளம், திருச்சி.
,, M. அய்யாவு அவர்கள் வடசேரி, மன்னார்குடி.
,, L. சுப்பிரமணியன் அவர்கள் அட்சை, பினாங்கு.
,, P. K. சுப்பிரமணியபண்டிதர் சென்னை.
,, G. M. சீனிவாசபண்டிதர் சென்னை.
,, S. S. பொயிலான்பண்டிதர் ரத்தினபுரி, கொழும்பு.
,, T. M.S. கமலத்தியாகுவைத்தியர் கேலாங்ரோடு, சிங்கப்பூர்
,, R. பொன்னுசாமிபண்டிதர் திருச்சி.
,, A. பரிமணம்பண்டிதர் கோலாலம்பூர்.

திரு - M. குப்புசாமிவைத்தியர் தஞ்சாவூர்.
" S. V. சீதாராமபிள்ளை சீர்காழி.
" S. மகாலிங்கம்பண்டிதர் பசறை, சிலோன்.
" P. ஆதிமூலவைத்தியர் நாவல்பட்டி, சிலோன்.
" M. கோவிந்தசாமிபண்டிதர் திருச்சி.
" K. அப்பாவுபண்டிதர் சித்தவைத்தியர், பினாங்கு.
" ராமசாமிபண்டிதர் சிவகங்கை, இராமநாதபுரம்ஜில்லா.
" நடேசபண்டிதர் பனையாங்கல், திருக்கோயிலூர்.
" T. R. சாமுலு அண்டு கோ; மங்கள், கோயமுத்தூர்ஜில்லா.
" K. இருளப்பாபண்டிதர் நிகோடா, சிலோன்.
" K. V. S. கணபதி அவர்கள் பெரிதினியா, சிலோன்.
" M. மருதமுத்துபண்டிதர் அப்புத்தளை, சிலோன்.
" V. செல்லையாபண்டிதர் நாரினை, சிலோன்.
" J. R. K. கதிர்வேலுபண்டிதர் பாணந்துறை, சிலோன்.
" T. K. பரதேசி அவர்கள் மொரட்டுவா, சிலோன்.
" A. கணபதிபிள்ளை அம்பலங்கொடா, சிலோன்.
" S. பொன்னையாபண்டிதர் மாத்துறை, சிலோன்.
" G. துரைசாமி அவர்கள் குற்றாலம்.
" S. அருணாசலம்பண்டிதர் மதுரை.
" P. மாடசாமிபண்டிதர் தளபதிசமுத்திரம்.
" பொதிகாசலம் அவர்கள் நாவல்பட்டி, சிலோன்.
" V. S. கந்தசாமிபண்டிதர் பாணந்துறை, சிலோன்.
" K. வயித்தியலிங்கம் அவர்கள் கண்டி சிலோன்.
" A. T. இசக்கிநாதன் அவர்கள் மாத்துறை, சிலோன்.
" R. செல்லையா பெர்னாண்டோ, அகலவட்டை, சிலோன்.
" K. இரத்தினசாமிவைத்தியர் சிங்கப்பூர்.
" N. லெட்சுமணவைத்தியர் மாந்துறை, திருச்சி.
" P. S. பொன்னையாபண்டிதர் திருநெல்வேலி.
" S. ராமசாமிபண்டிதர் கொழும்பு.
" M. தர்மலிங்கம் நாவல்பட்டி, சிலோன்.
" K. சனமுத்துபண்டிதர் கொழும்பு.
" V. கணபதி அவர்கள் மருதானை, கொழும்பு.
" S. சிவராமபண்டிதர் பத்தமடை, திருநெல்வேலிஜில்லா.

---



எட்டாம் மாதங்களில் கண்டால் பல்முளைப்பதனால் உண்டானதென்றறிந்துகொள்ளலாம் இது சாதாரண குறிகள். குழந்தைகள் நன்றாக பருத்திருந்து தாயும் குழவியை கவனமாகப்பார்த்துவந்தால் இதோடு நின்றுவிடும். ஆனால் குழந்தை மெலிவாயும் தாய் கவலைத்தாழ்ச்சியாயுமிருந்தால் மிக வருத்தமும், கடைசியாய் சிசுவின் உயிருக்கு மோசமும் நேரிடும். குழந்தையின் ஈறு அதிகமாக வீங்கும். வீங்கின ஈறை கையினால் தொட்டாலும் நோயுண்டாகும்; கன்னம் சிவந்து வீங்கும்; உடல் மிகுதியாய்க்காயும்; கண்கள் சிவந்து நீர்வடியும்; வாயிலிருந்து உமிழ்நீர் தாரைதாரையாக ஒழுகும்; தாகம் மிகுதிப்படும்; குழந்தை ஓயாமல் அழும்; தூங்காது; பால்குடியாது. இத்துடன் வயிற்றோட்டம், வலிப்பு, இருமல், சிரங்கு, கரப்பன் முதலிய நோய்களும் வரும். ஆனால் சில குழந்தைகளுக்கு இவ்வருத்தங்கள் எதுவுமின்றி தாய்க்குத் தெரியாமலே பல் முளைத்து வெளிப்படுகிறதுமுண்டு, அல்லது இதில் சில குணங்கள் கண்டும் காணாமலும் லேசாய்ப்போகிறதும், மிகுதியாய் வருத்தப்பட்டுச் சாகிறதும், பிழைக்கிறதுமுண்டு.

பல் முளைக்கும்போதுண்டாகும் வருத்தங்களுக்குச் செய்யும் பக்குவங்கள்:— பல் ஈறு வீங்கி வாயிலிருந்து எச்சில் அதிகம் வடியத் தொடங்கினவுடனே, தாய் தன் விரலைக் குழந்தையின் வாயில் வைத்தால், எந்த இடத்தில் பல்முளைக்கிறதோ அந்த இடத்தில் குழந்தை தானே அந்தவிரலை நாவினால் தள்ளிவைத்துக் கடிக்கும். அதனாலும், மேற்சொல்லிய காலத்திட்டத்தினாலும் முளைக்கிற பல் இன்னதென்றறியலாம். ஈறில் வீக்கமிருந்தால் அதை விரலினால் அடிக்கடித் தேய்த்துவருவது குழந்தைக்குச் சுகமாயிருக்கும். அப்படித் தேய்க்கும்போதே விரலின் நகத்தினால் லேசாய் வீக்கத்தின் மத்தியில் நெல் முனையினாலாவது, ஊசிமுனையினாலாவது கீறிவிடுவது நலம். நகத்தினால்கீறுவது குழந்தைக்கு அவ்வளவு வலிகொடாது. பல் எளிதில் முளைக்க வழியாகும். ஆனால் நகத்தினாலான காயம் நஞ்சுள்ளதென்று சொல்லுவதுண்டு, அப்படிச் சொல்லுவது மனிதருடைய நகத்திற்கல்ல. ஊன் தின்னும் விலங்குகள், அழுகின ஊன்களை நகத்தினாலே கீறிப் பிடுங்கித்தின்பதனால், அந்த ஊன் நகங்களில் படிந்திருக்கும். அவைகளினாலுண்டாகுங் காயங்கள் நச்சுக்காயங்களென்று அனுமானிக்கப்படும். கைகளை அடிக்கடி நன்றாய்க்கழுவி சுத்தமாய் வைத்திருக்கக்கூடிய மனிதர்களுடைய நகம் கெடுதியல்ல. ஆகையினாலே மனிதரின் நகத்தினாலுண்டாகுங் காயங்கள் லேசாக ஆறிவிடும்.

மெல்லிய மிகக்கூர்மையான கத்தியினாலும் வீங்கியிருக்கும் ஈறைக்கீறிவிடலாம். ஈறைக் கீறுவதற்குமுன் நமது கைகளையும், கீறும் நகம், அல்லது கத்தியையும் சுத்தமாக கழுவவேண்டிய தவசியம். பல்முளைக்க வருத்தப்பட்டு சுரம், சன்னி, வலிப்பு, முதலியது கண்டு பெருந்துன்ப முண்டாகுமட்டும் பார்த்துக்கொள்ளலாமென் றிருப்பது நல்லதல்ல. அப்படி ஒன்றும் நேரிடாமல் செய்துகொள்வது நல்லது. அறிவுள்ள தாய் முன்னமே நோய் அதிகப்படாமல் செய்யவேண்டிய ஒழுங்குகளைச் செய்வாள். அப்படிச் செய்வதில் வீங்கியிருக்கும் ஈறைக் கீறிவிடுவது முதல் கடமை. குழந்தைகட்கு பல் எளிதாய் முளைத்து வெளியில்வரும்படி பல் ஈறு தளர்ந்துகொடாமல் கடினமாயிருப்பதனால் மூளை நரம்புகளில் எரிச்சலுண்டாகின்றது. அதனால் குழந்தைகளுக்கு பல் முளைக்கும்போது இந்தத் துன்பங்கள் நேரிடுகின்றது. இந்தத்தடையை நீக்கிவிட்டால் அப்போது வருத்தமில்லை. சிலர் இக்காலங்களில், மரத்தில் கடைந்து பலவகை நிறம் பூசப்பட்டிருக்கும் கிலுகிலுப்பைகள், மரப்பாவை முதலியவைகளைக் குழந்தைகள் கடித்து விளையாடக் கொடுப்பதுண்டு. அவைகளில் பூசப்பட்டுள்ள நிறங்கள் வாய்நீரில் ஊறிக் கரைந்து வயிற்றுக்குள் போனால் பல கெடுதிகள் நேரிடும். வர்ணங்கள் நஞ்சென்றறியவேண்டும். இவ்வகை சாயம்பூசினது ஆகாது. மேலும் குச்சை தொண்டை, கண், மூக்கு இவைகளில் இடித்துக்கொள்வதில் அபாயம்நேரிடும். இதற்காகத் தந்தத்தினால் ஒருவித வளையங்கள்செய்து கடைகளில் விற்கப்படுகின்றன. அதையாவது, அதுபோல் மரத்தில்செய்த சாயம் பூசாத வளையமாவது நல்லது. இவைகளைக் குழந்தைகள் கடிக்கக்கடிக்க ஈறின்பேரிலிருக்கும் சவ்வு மெதுவாகித் தேய்ந்துபோகும். பல் விரைவில் எளிதாய் முளைக்கும்.

பல்முளைக்கும்போது உணவு:—ஒரு வருத்தமுமின்றிப் பல் முளைக்கிறதானால் குழந்தையின் ஆகாரத்தை வழக்கம்போல் கொடுத்துவரலாம். ஆனால் சிறிது நோய் நேரிட்டாலும் உடனே முலைப்பால் தவிர மற்ற உணவுகளை நிறுத்திவிட்டு அந்தப் பல்முளைத்து வெளிப்படுமட்டும் முலைப்பாலே கொடுத்துவரவேண்டும். போதுமான முலைப்பாலில்லாவிடில் முன் சொல்லிய பால்வகை உணவுகளைக் கொடுத்துவரலாம். அரிசி கஞ்சிகள் சிறிதும் கொடுக்கப்படாது. குழந்தைக்கு நாவறட்சி மிகுதியாயிருப்பதனாலே அடிக்கடி முலை கொடுக்கவேண்டும் வயிறு நிறைவதற்கல்ல, தொண்டைகொஞ்சம் நனையவேண்டியபடியி



னாலே சிறிது சிறிது கொடுக்கவேண்டும். இப்படி அடிக்கடி முலைப்பால் கொடுப்பதனாலே மொத்தத்தில் குழந்தைக்கு வேண்டிய ஆகாரம் அதற்குச் சென்றுபோகும். அதல்லாமல், இந்தக்காலத்தில் உணவு சற்று குறைவாகக் கொடுப்பதுதான் நல்லது. உணவு மிகுதியானால் எளிதில் குடல் கெட்டுப்போகும். பசுவின் பால் கொடுப்பதானால் சிறிது சிறிது அப்போதைக்கப்போது கறந்து குப்பியிலிட்டுக் கொடுக்கவேண்டும். ஒரேதடவையாகக் கறந்து குப்பியிலிட்டு வைத்துக்கொண்டு அதைஅடிக்கடி கொடுக்கக்கூடாது.

பல்முளைக்கும்போது குடல்:—சிறிய காரணத்தினாலும் லேசாய் வயிற்றோட்டங்காணும். ஒருக்கால் மலக்கட்டுமிருக்கும், அப்படியிருந்தால் ஒரு தேக்கரண்டி ஆமணக்குநெய் கொடுக்கலாம். 24மணி நேரத்தில் இபற்கையாய் மலம் இரண்டு, மூன்றுதரங் கழிந்துகொண்டிருந்தால், அதை நிறுத்த மருந்து கொடுப்பது நல்லதல்ல. மலப்போக்கு அதிகமானால் உடனே பரிகரிக்கவேண்டும். வயிற்றுப்போக்கு நல்லதென்று சிலர் விட்டுவிடுவதுமுண்டு. அப்படிச்செய்தால் குழந்தைக்கு மோசம் நேரிடும். நாள் தோறும் இருவேளையும் குழந்தையை ஐந்து நிமிஷம் இள வெந்நீரில் இடுப்பு அல்லது கழுத்துவரை வைத்தெடுத்து ஈரமின்றித் துடைத்துக் கம்பளி உடுப்புப்போட்டு உடம்பைச் சூடாய் வைத்திருப்பது நல்லது.

பல் முளைக்கும்போது தலை:—குழந்தைகளுக்கு பல் முளைக்கும்போது தலை மிகச் சூடாயிருந்தால் கடற் பஞ்சைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து அதனால் ஒத்திடுதல்செய்தால் சுகமாயிருக்கும். இது கெடுதலென்று நினைக்கவேண்டாம். அந்த வேளைக்கு இது ஏற்றது. தலையில் எவ்விதமான குல்லாவும் போடக்கூடாது. அதனால் தலையில் மிகக்கொதிப்புண்டாகும்.

நோய்கள்:—வலிப்பு, இருமல், சுரம், வயிற்றோட்டம், பல்லீறு வீக்கம், பல்கரப்பன் முதலிய வியாதிகளுடைய குணம், குறி, பரிகாரம் யாவும் மருந்து முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. சில குழந்தைகளுக்கு காதில் சீழ் ஒழுகுகிறதும், சிலருக்குக் கழுத்தைச் சுற்றி நெறிகட்டி வீக்கங் காண்பதுமுண்டு.

## 11 அத்தியாயம்

### அம்மை (வசூரி) குத்துதல்.

அம்மை குத்துதலைப்பற்றிய சுருக்கமான வரலாறு:—மக்களின் நன்மைக்காக ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் அம்மைகுத்துதலினும் மேலானது ஒன்றுமில்லை ஒருகாலத்தில் நமது நாட்டில் வசூரி வாராதிருக்கும்பொருட்டு வசூரிக்கொப்பளத்தின் நீரையே எடுத்து அம்மை குத்திவந்ததாக சரித்திரங்கள் மூலமாகத் தெரியவருகிறது. இதனால் வசூரியே வந்து மிகுதிப்பட்டு கஷ்டப்படுவதும், பலர் இறப்பதும் வழக்கமாயிருந்தது. காலக்கிரமத்தில் இவ்வழக்கம் இந்தியாவிலிருந்து ஐரோப்பா கண்டத்திற்குப் பரவிற்று. அவ்வீக மோன்ஸ் டன் புரியிலிருந்து ஒரு ஆங்கிலப் பெருமாட்டி தன் குழந்தைகளுக்கு வசூரிப்பால் வைத்து சுகமானபின் தன் தேசத்தில் மற்றவர்களும் அப்படிச் செய்துகொள்ளும்படி முயற்சி செய்ததில், முன்னர் கொலைக்கு நியமிக்கப்பட்ட ஆறு குற்றவாளிகளுக்கும், பிறகு ஐந்து அனாதைப்பிள்ளைகளுக்கும் வைக்கப்பட்டது. அவ்வளவாக உயிர் நஷ்டமில்லை என்று கண்டதின்பின் மற்ற ஜனங்களும், அப்பால் சீமான்களும், கடைசியாக அரசகுடும்பத்திலுள்ளவர்களும் தங்கள் குழந்தைகளுக்கு வசூரிப்பால் வைத்துக்கொண்டு வந்தார்கள். இதனால் வசூரி நாடெங்கும் பரவி மக்களுக்கு அதிக கஷ்டம் நேரிட்டது. இக்காலத்தில் ஜென்னர் என்னும் மருத்துவர் "கோ" அல்லது பசுமாட்டு வசூரியின் குணத்தைக் கண்டுபிடித்தார். அதெப்படி என்றால் கறவைப் பசுக்களின் பால் மடியில் வசூரிக் கொப்பளம் போன்ற கொப்பளங்களுண்டாகிறதும், அப்பசுக்களில் பால் கறக்கும் பெண்களுக்கு அக்கொப்பள நீர்ப்பட்டு அதுபோன்ற கொப்பளங்களுண்டாகிறதும், அப்படி கொப்பளங்கள் நேரிட்ட பெண்களுக்கு வசூரி வாராமலிருப்பதையும் அவர் நாளடைவில் கவனித்து, முன்னர்தாம் அந்த பசுக்களின் மடியிலுண்டாகும் கொப்பள நீரினால் தமக்கு அம்மை குத்தி அதனாலுண்டான குறிகள் வசூரியின் குறிகள் போலிருந்ததனால், அந்தக் கொப்பள நீரும் அப்பசுக்களின் மடியிலிருக்கும் கொப்பள நீருக்குச் சரியென்று நிர்மாணித்து இதிலிருந்து (தன்கையிலிருந்து) நீரை எடுத்துத் தமது குடும்பத்திலுள்ள சிலருக்கும், அப்பால் அவர்களுக்குண்டான கொப்பளங்களிலிருந்து தமது நண்பர்களுக்கும் வைத்து "கோவசூரி" யென்று சொல்லப்படும் அம்மைக்குத்துதலை வசூரிக்கொப்பள நீரிலிருந்து விர்த்திசெய்வதை



விட இது ஆயிரமடங்கு நன்மையென்று கண்டு பிடித்தார். பிறகு அவர் இதை எங்கும் பரவச்செய்து எல்லோருக்கும் பயனாகும்படி முயற்சிசெய்தார். கட்டின வீட்டிற்கு குறை கூறுவதே மக்கள் இயல்பாதலால் பலர் இவரைப் பலமாதிரியாகத் திட்டவும், அம்முறைக்குக் குற்றஞ் சொல்லவும் தலைப்பட்டார்கள். கடைசியாக உண்மையே வெல்லுமாதலால் இவர் சொன்னது மெய்யென்று கண்டு இவருக்கு இராஜமரியாதையும், சன்மானமும் செய்யப்பட்டதுமன்றி எல்லோரும் கோவசூரி (அம்மை) குத்திக்கொள்ள வேண்டுமென்று சட்டமும் பிறப்பிக்கப்பட்டது.

அம்மை குத்திக்கோள்வதினா லுண்டாகும் நன்மைகளாவன:—கோவசூரி குத்திக்கொள்பவர்களுக்கு அநேகமாய் வசூரி வராது. வந்தாலும் மிகச் சிறிதாகக்கண்டு உயிருக்குத் தீமையில்லாமலும், உடம்பில் அங்கவீனம், கண்குருடு, முகத்துக்கு அந்தக் கேடாவது செய்யாமலும் லேசாய் மாறிப்போம். ஆங்கிலேய தேசத்தில் கோவசூரி குத்தும் வழக்கமுண்டாவதற்குமுன், பலநோய்களால் இறந்துபோன மக்களில் ஆயிரத்துக்கு (1000) சராசரி நூற்றெட்டு (108) பேர் ஆண்டுகள்தோறும் வசூரிவியாதியால் மரித்தவர்களென்றும், அது செவ்வையாகப் பரவியதன்பின், ஆயிரத்துக்குப் பதினொரு (11) பேர் தான் வசூரியினால் இறந்தவர்களென்றும் கணக்கேற்பட்டிருக்கிறது. மேலும் வேறொரு கணக்கும் வெளியிட்டிருக்கின்றார்கள். அதாவது:-

| | | | | |
|---|---|---|---|---|
| வசூரி குத்தாத பிள்ளைகளில் | 1000-க்கு | | 350 | பேரும் |
| வசூரி குத்தியும் ஒருகொப்பளமும் உண்டாகாத | „ | „ | 235 | „ |
| வசூரி குத்தினதில் ஒரு கொப்பளம் பலிதமான | „ | „ | 77 | „ |
| வசூரி குத்தினதில் இரண்டு கொப்பளம் பலிதமான | „ | „ | 47 | „ |
| வசூரி குத்தினதில் மூன்று கொப்பளம் பலிதமான | „ | „ | 19 | „ |
| வசூரி குத்தினதில் நான்கு கொப்பளம் பலிதமான | „ | „ | 5 | „ |

இதனால் கோவசூரி நன்றாய்ப் பலிதமாகும்படி குத்திக்கொள்வது எவ்வளவோ நன்மையென்றறியலாம். இதை யறியாமல் "சுவாமிக்கு முடிவைத்திருக்கிறது" ஆகையால் கோறைப்படுத்தக்கூடாதென்றும், அம்மை குத்திக்கொள்கிற வழக்கமில்லையென்றும், குழந்தை அதிகச் சிறுவயதாயிருக்கிறதென்றும், மாரியம்மா வந்துவிட்டுப் போய்விட்டாளென்றும், அம்மா கோபித்துக்கொள்வாளென்றும் நமது

பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு அம்மைகுத்தாமல் அநேக சாக்குப்போக்குச்சொல்லி தடைசெய்கிறார்கள். சுவாமிக்கு முடிவைத்திருக்கும் குழந்தைக்கு தேள் கொட்டுகிறதில்லையா? விஷமேறுகிறதில்லையா? முள் தைக்கிறதில்லையா? ஓடி விளையாடும்போது விழுந்து காயமுண்டாகிறதில்லையா? வழக்கமில்லையென்று சொல்லுகிறவர்கள் தங்கள் பெரியோர்கள் நாளிலில்லாத எத்தனையோ புதிய வழக்கங்களை இப்போது செய்துவருகிறார்கள். முற்காலங்களில் இரயில்வண்டி, மோட்டார்வண்டிச் சவாரியுண்டோ? தந்திமார்க்கமாக சமாச்சார மனுப்புவதுண்டோ? மின்சார வண்டி, மின்சார விளக்குகளுண்டோ? சோடா, காப்பி, டீ குடிக்கிறதுண்டா? சோபாக்களில், சாய்மான நாற்காலிகளில் உட்காருவதுண்டோ? இதெல்லாம் புதிய வழக்கங்கள் என்பதை அறியவேண்டும். சிச்சிலிப்பு என்னும் சின்னம்மை முதலிய வசூரி நோய்கள் வந்ததைக்கொண்டு அம்மாவந்து போய்விட்டாளென்றிருக்கிறது பிசகு. எத்தனை தடவை சிச்சிலிப்பு (சின்னம்மை) வந்தாலும் அதனால் வசூரி வராமல் தடைப்படுவதில்லை. வசூரி குத்திக்கொண்டால், அல்லது சரியான வசூரி வந்தாலன்றி அந்நோய்க்குத் தப்புவது அரிது. சரியான வசூரிநோய் வந்திருந்த குழந்தைகளுக்கு வசூரிப்பால் வைக்குமிடத்தில் கொப்பளமாக மாட்டாது ஆகையினால் அந்தக் குழந்தைக்கு வசூரிப்பால் வைத்தால் வசூரிநோய் வாராதிருக்கும் பட்சத்தில் கொப்பளிக்கும். மற்றபடி ஒன்றும் செய்யமாட்டாது. இதெல்லாம் அறியாமையினாலே விளையும் தீமை. இவ்வித அறியாமை நிறைந்திருக்கும் நமது நாட்டு மக்களுக்கு கற்றறிந்த பெரியோர்கள்தான் புத்திசொல்லி, வசூரிப்பால் வைப்பதாலுண்டாகும் நன்மைகளை உணர்த்தி இதை விருத்திசெய்யவேண்டும். சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் அம்மைகுத்திகள் கிராமங்கள்தோறும் போய் வீடுவீடாய்க் குழந்தைகளுக்கு வசூரி குத்திக்கொள்ளும்படி எவ்வளவோ வருந்துகிறார்கள். பெற்றோர்கள் அதை அலட்சியம் செய்து பலவித சாக்குப்போக்கு சொல்லி எப்படியாவது வசூரி குத்திக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளுவதில் நமது நாட்டு பெண்கள் மிக சமர்த்தர்கள். வீடுகளிலுள்ள அறைகளுக்குள் குழந்தைகளை விட்டுப் பூட்டுப்போட்டு இந்த வீட்டில் குழந்தைகள் ஒருவருமில்லையென்று நன்றாகப் பொய் சொல்லுகின்றார்கள். பூட்டைத் திறக்கச்சொல்லி குழந்தைகளை வெளியே கொண்டுவந்து பல தடவைகளில் அம்மை குத்தப்பட்டிருக்கிறது. சிலர் குழந்தையை தன்னுடைய குழந்தை யல்லவென்று சொல்லிவிட்டால் தாயில்லாவிடத்தில் அம்மை குத்தமாட்டார்களென்றெண்ணி இரண்டொரு நிமிஷத்திற்குமுன் தன்னிடம் முலையுண்ட குழந்தையைத் தன்னுடையதல்லவென்று சாதித்து விடுகிறதுண்டு. ஆனால் உன்னுடையதல்லாத குழந்தையைப்பற்றி உன்னைக் கேழ்க்கவேண்டியதில்லை. குழந்தையின் தாய்க்கு நான் சொல்லிக்கொள்வேன் என்று வசூரிப்பால்வைக்க போனாலோ, குழந்தையை எடுத்து மார்போடணைத்துக் கொண்டு, இல்லை, இது என் குழந்தைதான் என் கணவனிடம் சொல்லிக்கொண்டு அப்புறம் அம்மைப்பால் வைத்துக் கொள்கிறேன், என்று ஏதாவது ஒரு போக்குச்சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறதுமுண்டு. யாருடைய நன்மைக்காக வசூரிப்பால் வைக்கிறதென்று தெரியாமலிப்படியெல்லாஞ் செய்கிறார்கள்.



அம்மை குத்தாவிட்டாலுண்டாகுங் கெடுதல்கள்:—வசூரி சாதாரணமாகத் தொடரக்கூடிய கொடிய வியாதியென்று எல்லாருக்குந்தெரியும். ஆனால் இது சிசுக்களுக்கு அதிக அபாயமான வியாதி. வசூரிகாணுங் குழந்தைகளில் சுமார் நூற்றில் நாற்பது பேருக்கு நிச்சயமாக மரணங் கைகண்ட பலன். தப்பிப்பிழைத்தாலோ, அதில் எத்தனையோபேருக்குக் கண் குருடும், மற்ற அங்க வீனங்களும், முகத்தில் அந்தக்கேடு முண்டாகிறது. சரியானபடி அம்மைப்பால் வைத்திருந்தால் இதெல்லாம் நேரிடாது. குழந்தைகளைப் பெற்றுக் குருடர்களாகும்படி விடலாமா? பதை பதைக்கச் சாகக்கொடுக்கலாமா? இவ்வளவு விரிவாக இதைப்பற்றிப் பேசுவதின் காரணம் யாதெனில் நம்மவர்களுக்குள் வசூரிப்பால் வைப்பதைப்பற்றி யிருக்கும் அறியாமை நீங்கினாலொழிய வசூரியாகிய கொடிய வியாதி நம்மைவிட்டு நீங்கமாட்டாது. ஆகையினால் இதன் நன்மையை அறிந்த பெரியோரும் தங்களாலியன்ற மட்டும் அண்டை அயலிலிருக்கும் குழந்தைகளுக்கு அம்மைப்பால் வைத்துக்கொள்ளும்படி அவர்களின் பெற்றோர்களைத் திருப்பவேண்டும். இது எல்லோரும் கவனிக்கவேண்டிய விஷயம். அன்னசத்திரங்களைக்கட்டி மிகுந்த பொருள்களைச் செலவு செய்யும் சீமான்கள் இதில் சிறிது கவலை எடுத்துக்கொண்டு தங்களைச் சேர்ந்த குடும்பங்களிலும், தங்கள் வாக்குச் செல்லுமிடங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு அம்மைப்பால் வைத்துக்கொள்ளும்படி செய்வார்களானால் அன்னதானத்திலும் மேலான ஜீவதானம் செய்கிறதாயிருக்கும்.

வசூரிப்பால் வைத்தும் வசூரி வருகிறதே யென்று சிலர் மறுக்கின்றனர். சில சமயங்களில் அப்படி வருகிறதுமுண்டு. ஆனால், நன்றாய் அம்மைப்பால் உடம்பில் கலந்திருந்தால் வசூரி வந்தாலும் வெகு எளிதாக மாறிவிடும். இதைத்தான் கொப்பளிப்பான் என்று சொல்லுகிறது. ஒரு வாரத்திற்குள் வந்தவிடந் தெரியாமல் மாறிவிடும். தழும்பு சீக்கிரம் மறைந்துபோகும். வசூரியின் குணங்களில் நூற்றிலொரு பாகங்கூட யிராது. வசூரிப்பால் வைத்ததில் ஒரு கொப்பளமாவது சரியாக உண்டாயிருந்தால் அதனால் சிறிதாவது குணமுண்டென்பதை முன்னமே அறிவித்தோம்.

218969

அன்றியும் வசூரிப்பால் வைப்பதில் விப்புருதி, காசம், க்ஷயம் முதலிய மேக நோய்கள் ஒரு குழந்தையிலிருந்து மற்றொரு குழந்தைக்கு கொப்பளநீர் மூலமாயுண்டாகிவிடக் காரணமாகிறது என்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படி உண்டோ இல்லையோ வென்று சுமார் (30,000) முப்பதினாயிரம் வசூரிப்பால் வைக்கப்பட்ட குழந்தைகளை சில வைத்தியர்கள்கூடிக் கவனித்து வந்ததில், அக்குழந்தைகளுடைய வாழ்நாளில் ஒருபோதும் இவ்விதநோய்கள் வசூரிக் குத்திக் கொண்டதனாலுண்டானதாகக் கண்டுபிடிக்கவில்லை. வசூரிப்பால் வைப்பதனால் இவ்வித நோய்களுண்டாகுமென்று சாதித்தவர்களாகிய சில மருத்துவநூல் வல்லவர்களுங்கூட சோதித்துத் தாங்கள் கொண்ட கொள்கை பிழையென்று விட்டுவிட்டார்கள். ஆனால் ஊழ்வினையினாலாவது, பெற்றோர்களினாலாவது சிசுவின் உடம்பில் உற்பத்தியாயிருக்கும் இந்நோய்கள் அம்மைப்பால்வைத்த சில காலத்துக்குள்ளாக வெளியாகிச் சிசுவை வருத்துவதுண்டு. ஒருக்கால் வசூரிப்பால் வைக்காதிருந்தால் தேகம் முற்றினபின் இந்நோய்க் காணலாம். ஆகவே சிறிது காலங்களுக்குப் பின் வருவது அம்மை குத்துவதனால் சற்று முன்னமே வந்து விடுகிறது. இதன்றிக் கொடுமையான நோய்கள் வருகிறதில்லை. இதைத்தான் வசூரிப்பால் வைத்ததனால் வந்து விட்டதென்று தெரியாமல் சொல்லுகிறது. வைத்தியர் பார்த்து பிணியற்றதென்று சொல்லுகிற குழந்தையிலிருந்து அம்மைப்பாலெடுத்து வைத்ததால் யாதொரு தீங்கும் வராது. மேலும் அம்மைப்பால் வைத்துக் கொள்வதனால் உடம்பிலுள்ள கொடிய நோய்களின் தீக்குணங்கள் மாறி அவைகள் எளிதாய் போவதுமுண்டென்று மருத்துவநூலார் அநுபவத்தில் கண்டிருக்கிறார்கள். இப்படியாக வசூரிப்பால் வைப்பதனால்:—

# வியாசம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை.

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

நமது ஆபீசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| முழுப்பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ரூ. | 8—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ரூ. | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு ,, | ரூ. | 3—0—0 |

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

---

## தமிழ்க்கலா நிலையம்

தமிழ்மொழியில் வெளிவந்துள்ள எல்லாவித நூல்களும் நமது தமிழ்க்கலாநிலையத்தில் கிடைக்கும்.

இலக்கிய நூல்கள் இலக்கண நூல்கள், நீதி நூல்கள், வைத்திய நூல்கள், ஞான நூல்கள், உடற்கூறு தேகதத்துவ நூல்கள், ஆபத்துக்காலங்களில் செய்யும் முதல் உதவி நூல், நோயணுகாவிதிகள், ரசாயன சாஸ்திரங்கள், பதார்த்தகுண நூல், தேசசரித்திரங்கள், ககோள, பூகோளசாஸ்திரங்கள், மக்கள் நோயின்றி கிழத்தன்மைவாராமல் வாழ்வதற்குரிய நூல், மரணத்தின்பின் மனிதர்நிலை, முதலிய அரிய நூல்களும், நாவல்கள், கதைகள், நாடகங்கள் முதலிய இதரபுத்தகங்களும் கிடைக்கும்.

தமிழ்க் கலா நிலையம்,
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

*Regd. No. M. 2418*

# MARUTHUVAN

## (PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly

**Editor: Pandit S. S. Anandam.**

Sample Copy Free on Application

**Add:—** **Manager.**

**MARUTHUVAN OFFICE**

**221, Mint Street,**

MADRAS.

## மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர் களுக்குள்ள பெரிய லாபம்.

பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பா
பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப்
அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் அ
முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்
ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இல்லற
லிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்
பெருநிதியைப்போன்றது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும்மு
களும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம்
துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக்
டப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் ப
பதால், சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அ
லிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி தேடவேண்டியதில்லை.
டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெ
கொள்ளலாம். இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்கு
மருத்துவமாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்
துணையாக உள்ளது.

மானேஜர்:— **மருத்துவன் காரியா[illegible]யம்,**

221, தங்கசாலை வீதி,

சென்னை

---

Printed by The Sree Subramaniya Vilasam Press, NO 220. Mint Street, MADRAS.
& Publishedby Pandit S. S. Anandam, 221 Mint, Street, Madras.